2014, June 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

தமிழர் நலனில் நின்று இந்தியாவைக் கையாளுவது எப்படி?

போரின் முடிவுக்குப் பின்னரான ஐந்து வருடங்கள்

மோடியும் இலங்கை இனப்பிரச்சினையும்

பாரதீய ஜனதாவின் வெற்றியைச் சாத்தியமாக்கியவர்கள்

தமிழக அரசியலில் தொடங்கும் புதிய அத்தியாயங்கள்

06 JUN 2014

## டில்லியில் நடந்த மினி சார்க் மகாநாடு



| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சஞ்சிகை

CHUTTI KESARI

# சுட்டி கேசரி

நாளைய தினம் நம் கையில்




## இப்பொழுது விற்பனையில்

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்
அருகிலுள்ள பத்திரிகை
முகவர்களை நாடுங்கள்

மாதம் இருமுறை வெளிவரும் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் கூறியவற்றை ஆட்கள் மறந்துவிடுவார்கள். நீங்கள் செய்தவற்றையும் மறந்துவிடுவார்கள். ஆனால், அவர்களை நீங்கள் எவ்வாறு உணர வைத்தீர்களோ அதை அவர்கள் ஒரு போதுமே மறக்கப்போவதில்லை.

- மாயா ஏஞ்சலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2014, ஜூன் 01 - 15
பக்கங்கள் - 68











11 போரின் முடிவுக்குப் பின்னரான ஐந்து வருடங்கள்
16 விடுதலைப்புலிகள் தோல்வியைத் தழுவியது ஏன்?
23 தமிழர் நலனில் நின்று இந்தியாவைக் கையாளுதல்
26 மோடியும் இலங்கை இனப்பிரச்சினையும்
34 மோடி சுனாமி
39 பாரதீய ஜனதாவின் வெற்றியை சாத்தியமாக்கியவர்கள்
42 சார்க் உச்சிமகாநாடு போன்று மோடியின் பதவிப்பிரமாணம்
48 தமிழக அரசியலில் தொடங்கும் புதிய அத்தியாயங்கள்
55 வல்லரசுகளின் மோதலுக்கான களமாக உக்ரெயின்
59 தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்களும் இலக்கியக் களமாற்றங்களும்



*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# மோடி, ராஜபக்ஷ, 13

இந்தியாவில் புதிதாக பதவிக்கு வந்திருக்கும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் இலங்கை இன நெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளுக்கு எத்தகைய பங்களிப்பை வழங்கும் என்பது குறித்து அரசியல் அரங்கில் வாதப் பிரதிவாதங்கள் மூண்டிருக்கின்றன. கடந்த பத்து வருடங்களாக பதவியில் இருந்த கலாநிதி மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் இலங்கை விவகாரத்தில் கையாண்ட அணுகு முறையை விடவும் வேறுபட்ட முறையில் மோடியின் நிருவாகம் நடந்து கொள்ளும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலான கருத்துகளும் ஒருபுறத்தில் முன்வைக்கப்படுகின்றன.

தனது பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்பதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை டில்லிக்கு அழைத்த பிரதமர் மோடி அவருடன் நடத்திய முதல் பேச்சுவார்த்தையின் போது அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டதுடன் அத்திருத்தத்தின் ஏற்பாடுகளுக்கு அப்பால் (13+) செல்வது கூட தேசிய நல்லிணக்க செயன்முறைகளுக்குத் துணையாக இருக்குமென்று யோசனை தெரிவித்திருந்தார். இதையடுத்து மீண்டும் 13 ஆவது திருத்தத்தை மையமாகக் கொண்ட வாதங்கள் கிளம்பியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்குப் பின்னரான கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலகட்டத்தில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே இடம்பெற்று வந்திருக்கும் தொடர்பாடல்கள் 13 ஆவது திருத்தத்தை மையப்படுத்தியவையாகவே இருந்து வந்திருக்கின்றன. மோடியின் நிருவாகமும் அதே அணுகு முறையைக் கடைப்பிடிப்பதிலேயே அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இரு நாடுகளின் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தெளிவுபடுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாத்திரமல்ல, முன்னைய ஜனாதிபதிகளும் கூட இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இந்திய அரசாங்கங்களுக்கு அளித்த உறுதி மொழிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு போதும் அக்கறைப்பட்டதில்லை. 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தமிழ் பேசும் மக்களுடைய நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தீர்வு ஒன்று கிடைத்திருக்குமா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, அந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதை இலங்கையில் பதவியில் இருந்த சகல அரசாங்கங்களுமே உறுதி செய்து கொண்டன என்பதுதான் உண்மை. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கவோ அல்லது இணக்கபூர்வமான முறையில் வழிக்குக் கொண்டுவரவோ இந்திய அரசாங்கங்களினால் இது வரையில் இயலவில்லை.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான கடந்த ஐந்து வருடகால கட்டத்தில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கொழும்பை வற்புறுத்துவதில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகளும் இந்தியாவுடன் இணைந்துகொண்டன. என்றாலும் நிலைவரங்களில் எந்த மாற்றத்தையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

மோடியைச் சந்தித்துவிட்டு ஜனாதிபதி ராஜபக்ஷ கொழும்பு திரும்பிய கையோடு கொழும்பில் கூட்டப்பட்ட செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்ட கருத்துகள் மோடி நிருவாகத்துக்கு செய்தியொன்றைத் தெரிவிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டவை என்பதிற் சந்தேகமில்லை.

அரசாங்கம் இந்தியாவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு எப்போதும் தயாராயிருக்கிறது. ஆனால், இலங்கையின் உள்விவகாரங்களில் எவரும் தலையீடு செய்ய முடியாது. 13 ஆவது திருத்தத்தின் எதிர்காலத்தையோ அல்லது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வையோ தீர்மானிக்கும் பொறுப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கைகளிலேயே இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தியத் தலைவர்களுடன் பேசும்போது அளிக்கின்ற வாக்குறுதிகளுக்கு முரணான நிலைப்பாடுகளை கொழும்பில் அமைச்சர்கள் மூலமாக வெளிப்படுத்துவதென்பது ராஜபக்ஷவின் கைதேர்ந்த தந்திரோபாயம். அதுவே மோடியுடனான சந்திப்பிற்குப் பிறகும் கையாளப்பட்டிருக்கிறது.

13ஆவது திருத்தத்தை மையமாகக் கொண்ட அணுகு முறையையே இலங்கை விவகாரத்தில் கடைப்பிடிக்கப் போவதை வெகு ஆரம்பத்திலேயே வெளிக்காட்டத் தயங்காத மோடி நிருவாகம் ராஜபக்ஷ ஆட்சியை வழிக்குக் கொண்டுவருவதற்கு முன்னைய நிருவாகங்களைவிடவும் எத்தகைய வேறுபட்ட தந்திரோபாயத்தைக் கையாளப் போகிறது. இதுவே இன்றுள்ள கேள்வி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# கடிதங்கள்

## யதார்த்தத்தை உணர்த்தும் கருத்துகள்

சமகாலம் இதழில் (2014.மே. 01-15) என்.சத்தியமூர்த்தி எழுதியுள்ள "இனப் பிரச்சினையும் எதிர்வரும் இந்திய அரசும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் தமிழ் மக்களின் கையறு நிலையை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச அரசியல் காய் நகர்த்தல்களுக்குள் தமிழர் விவகாரம் பந்தாடப்படுவதை மிகத் துலாம்பரமாக அவர் விளக்கியுள்ளார்.

ஜெனிவா வாக்குப் புறக்கணிப்பிற்குப் பின்னர் இந்திய அரசின் இலங்கை குறித்த கொள்கை முடிவுகளை வரன்முறை செய்வதில் உள்ள முக்கிய பங்கு அரசியல் தலைமையில் இருந்து வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு மீண்டும் மாறிவிட்டது என்பது தெளிவாகியுள்ளது.

பா.ஜ.க, காங்கிரஸ் மற்றும் இரு வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகள் இந்த அதிகாரபூர்வ முடிவுக்கு எதிர்க் கருத்துச் சொல்லவே இல்லை. நரேந்திர மோடி உட்பட்ட பா.ஜ.க. தேசிய தலைவர்கள் எவருமே இலங்கைக் கொள்கை குறித்து மட்டும் மத்திய அரசைக் குறை கூறவில்லை.

அதாவது இலங்கைத் தமிழர் விவகாரம் என்பது வடஇந்திய முக்கிய கட்சிகளுக்கு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் வெளியுறவுக் கொள்கை ஜன்னலுக்கூடான பார்வையாகவே உள்ளது என்பதையும் இந்த வெளியுறவு நலன் சார்ந்த கொள்கைகளுக்கப்பால் இலங்கையின் இன விவகாரம் பார்க்கப்படுவதற்கு சாத்தியமில்லை என்பதையும் சத்தியமூர்த்தி வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

அந்த வகையில் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் தேசியக்கட்சிகளுக்கு இந்திய நலன், இறையாண்மை, பாதுகாப்பு, அண்டை நாடுகளுடனான நல்லுறவு என்பதே பிரதானமாக உள்ளது. இலங்கைத் தமிழர் விவகாரம் என்பது அண்டை நாடுகளுடனான நல்லுறவில் குறிப்பாக இலங்கை, இந்திய நலன்களுக்குள் தொடர்ந்தும் கட்டுண்டு கிடக்க வேண்டியதே.

இந்தியாவின் பிரதமராக பதவியேற்பதற்கு முன்பதாக நரேந்திர மோடி ECONOMIC TIMES பத்திரிகையில் RAJEEV DESH PANDEக்கு (07.05.2014) வழங்கிய செவ்வியில் நாங்கள் முரண்பாடுகளுடனான வெளிநாட்டுக்கொள்கையை எந்த ஒரு நாட்டுடனும் கொண்டிருக்கத் தேவையில்லை. குறிப்பாக அயல் நாடுகளுடன் பரஸ்பர ஒத்துழைப்பைப் பேணுவதாகவும் அர்த்தமுள்ள நம்பிக்கையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஒரு பின்னணியில் இந்தியாவின் அடுத்த பிரதமர்? என்று மேலை நாட்டு

## பொருத்தமான அஞ்சலி

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத்தில் மகத்தான ஆளுமையாக வலம்வந்த கொலம்பிய எழுத்தாளர் காபிரியேல் கார்சியா மார்க்வெஸின் மறைவுக்குப் பிறகு அவரைப் பற்றி இரு கட்டுரைகளை வெளியிட்டு சமகாலம் சஞ்சிகை மிகவும் பொருத்தமான அஞ்சலியைச் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ் வாசகர் பரப்புக்கு புதியவையான பல விடயங்களை பிரசுரிப்பதில் சமகாலம் ஆசிரியர் குழு பிரத்தியேகமான அக்கறை காட்டுகிறது. இந்த அக்கறை இடையீடின்றித் தொடரட்டும்.

கதிரமலை சண்முகப்பிரியா,
கரவெட்டி.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிக்கைகளால் முன்னிறுத்தப்பட்ட பி.சிதம்பரம் அவர்கள் பற்றிய சிதம்பர ரகசியத்தையும் சத்தியமூர்த்தி வெளிக்கொண்டு வந்துள்ளார். சிதம்பரம் அவர்களின் தனி முயற்சியால் இலங்கை-இந்திய ஒப்பந்தம் முதற்கொண்டு 2012-13 ஜெனீவா வாக்கெடுப்பு பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மகாநாட்டைப் புறக்கணித்தமை என வரிசையாக இலங்கைத் தமிழ் மக்களுக்காக உருப்படியாக ஏதோ செய்ததை வரிசைப்படுத்தியுள்ளார். அப்படியாயின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வேறு எந்த அமைச்சரும் ஆதரவளிக்கவில்லை என்றே கொள்ள வேண்டும். இறுதியில் மற்றவர்களின் கை பலமாகியதால் சிதம்பரம் அவர்களும் இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டுவிட்டார்.

அதே வேளையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உருவாகிய ராஜீவ், ஜே.ஆர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அந்த மை காய்வதற்குள்ளேயே இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்திற்கு மாறாக நடக்க முற்பட்டது. இது பற்றி மறைந்த தமிழர் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கம் அவர்கள் எழுதிய கடிதத்தைக் கூட காங்கிரஸ் அரசு கணக்கில் எடுக்கவில்லை. மொத்தத்தில் அனைவராலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். 13ஆவது திருத்தமும் இன்று இல்லை என்ற நிலையில் சத்தியமூர்த்தி இதனைத் தெளிவாக்கியுள்ளார்.

முத்தையா ஜீவராணி, கொழும்பு - 10.

## கே.ஆர். டேவிட்டின் கவனத்துக்கு

தமிழ்த் தேசியத்தின் தள மாற்றங்களும் இலக்கியக் களமாற்றங்களும் என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் அவர்கள் எழுத ஆரம்பித்திருக்கும் கட்டுரை இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தின் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுடன் சமாந்தரமாக நகர்ந்த தமிழ் இலக்கியப் போக்குகளை எதிர்காலச் சந்ததியினரின் நலனுக்காக ஆவணப்படுத்தும் ஒரு கனதியான முயற்சியாகும்.

இலக்கியத்தைப் பற்றிப் பேசுகின்ற இக்கட்டுரையில் படைப்பாளிகளின் பெயர்களும் படைப்புகளின் பெயர்களும் முற்றாகவே தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்றும் இது தவறுதலாக ஏற்பட்டதல்ல திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் என்றும் டேவிட் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருப்பதைக் காணமுடிந்தது. ஏன் அவ்வாறு அவர் செய்ய முடிவெடுத்தார் என்பது விளங்கவில்லை.

அவ்வாறாக படைப்பாளிகளினதும் படைப்புகளினதும் பெயர்கள் தவிர்க்கப்பட்டதன் விளைவாக டேவிட் அவர்கள் இக் கட்டுரையை எழுதத் தலைப்பட்டதன் அடிப்படை நோக்கம் முழுமைபெற முடியாமல் போவதுடன், யார் யார் எத்தகைய தன்மையுடைய பங்களிப்புகளை, எந்தெந்தக் காலகட்டங்களில் செய்தார்கள் என்பதை இளஞ்சமுதாயம் இனங்காண முடியாத துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகிறது என்பது என் அபிப்பிராயம்.

இராமசாமி கேசவன், ஹட்டன்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 23
2014, ஜூன் 01-15

A Fortnigtly Tamil News Magazine


**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



தோல்வியிலிருந்து நாம் படிப்பனைகளைப் பெற்றுக்கொள்வோமேயானால் அத்தோல்வி எமக்கு வெற்றியாகிறது.

- மல்கம் ஃபோர்பஸ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....




மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் படித்துவிட்டுவந்த எதிர்க்கட்சித் தலைவர் என் மீதும் எனது குடும்ப உறுப்பினர்கள் மீதும் தனிப்பட்டதாக்குதலைக் தொடுக்கிறார். இது எனக்கு கவலை தருகிறது. என்மீது எவராவது சேற்றைவாரி வீச ஆரம்பிப்பார்களேயானால், றோயல் கல்லூரியில் கல்வி கற்றவர்களை விடவும் திறமையாக என்னால் சேற்றைவாரி வீச முடியும். அதில் வெற்றி பெறவும் முடியும். ஏனென்றால் நான் கிராமப் புறத்திலிருந்து வந்தவன்.

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**



எனது வாழ்க்கை வரலாற்றை பாடப்புத்தகங்களில் சேர்க்கக்கூடாது. வாழும் தலைவர்களின் வரலாற்றை பாடத்திட்டங்களில் சேர்ப்பது முறையான செயல் அல்ல.

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி**



இன்றைய உலகில் அமெரிக்காவினால் மாத்திரமே தீர்த்துவைக்கக்கூடிய ஒரு சில பிரச்சினைகள் இருக்கின்ற அதேவேளை, அமெரிக்கா இல்லாமல் தீர்த்து வைக்கப்படக்கூடிய ஒரு சில பிரச்சினைகளும் கூட இருக்கின்றன.

**ஹிலாரி கிளிண்டன்**

சராசரி மனிதன் 80 அல்லது 90 அல்லது 100 வயது வரையும் கூட வாழ்கிறான். 60 வயதில் சேவையில் இருந்து ஓய்வுபெறும் ஒருவர் தனது ஜீவனோபாயத்தை எவ்வாறு தேடிக்கொள்கிறார் என்பது எம்முன் உள்ள பெரிய கேள்வி. இலங்கையில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. தற்போது இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை சனத்தொகையில் 14 சதவீதம் இருக்கிறது. நிலைவரம் போகிற போக்கைப் பார்த்தால் வயோதிபர்களின் அலுவல்களைக் கவனிப்பதற்கென்று திணைக்களம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழக்கூடும். நாட்டில் ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகை 5 இலட்சத்துக்கும் அதிகம்.



**சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர**



அடுத்த தேர்தலில் வாக்காளர் முன்னால் இருக்கப்போகின்ற கேள்வி மிகவும் எளிதானது. உறுதியானது. நாடா அல்லது ஒரு குடும்பமா முக்கியமானது?

**கருஜெயசூரிய**

ரணில் விக்கிரமசிங்க ஒருபோதுமே ஐக்கியதேசியக் கட்சியை விட்டு வெளியேற மாட்டார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுமாக இருந்தால் அவரே ஐ.தே.க.வின் வேட்பாளராக இருப்பார். எதிர்காலத் தேர்தலில் ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளரை ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) ஒரு போதுமே ஆதரிக்காது.



**ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்**



கல்வித்துறைக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டை குறைப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உடன்பாடொன்றைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் நிரூபித்தால் ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்வார்.

**கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஐரோப்பிய ஒன்றிணைவின் நிச்சயமற்ற எதிர்காலம்

மே மாத பிற்பகுதியில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சிகளும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிரான உணர்வுகளைக் கொண்ட கட்சிகளும் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கின்றமை ஐரோப்பிய ஒன்றிணைவுக்கு (European Integration) எதிரான உணர்வுகள் கடுமையாக அதிகரித்துவருவதை தெளிவாக வெளிக்காட்டுகின்றது.

இந்தக் கட்சிகள் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அவற்றின் பிரதிநிதித்துவத்தை இருமடங்காக அதிகரித்திருக்கும் நிலையில், ஐரோப்பிய ஒன்றிணைவின் எதிர்காலம் நெருக்கடிக்குள்ளாகப் போகிறது என்றே தோன்றுகிறது. இக்கட்சிகள் எதிர்காலத் தேர்தல்களில் மேலும் அவற்றின் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ளுமேயானால், ஐரோப்பியக் கனவை மூழ்கடித்து விட முடியுமென்று அவதானிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் தற்போது ஐரோப்பிய பாராளுமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஆதரவான மத்திய -வலது மற்றும் மத்திய இடது கட்சிகளின் கட்டுப்பாட்டிலேயே இன்னமும் இருக்கிறது. அரைவாசிக்கும் அதிகமான ஆசனங்கள் இக்கட்சிகளின் வசமே இருக்கின்றன. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்துக்கெதிரான கட்சிகள் ஒன்றிணைவை வலுப்படுத்தக்கூடிய சட்ட மூலங்களுக்கு எதிராக ஒரு குழுவாக ஐக்கியப்பட்டு வாக்களிக்கத் தீர்மானித்தால் அவற்றின் செல்வாக்கை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், தங்களுக்குள் கடுமையான வேற்றுமைகளைக் கொண்ட இக்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றுமா என்ற கேள்வியையும் அவதானிகள் கிளப்புகிறார்கள்.




ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பிரெஞ்சு தீவிர வலதுசாரிகள் பெற்ற வெற்றியை ஆட்சேபித்து பாரிஸில் ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்கள் (மே 29)

பிரான்ஸின் வலதுசாரி தேசிய முன்னணியின் (National Front) அக்கறைகளும் நோக்கும் தங்களுக்கு ஏற்புடையவையல்ல என்று ஐக்கிய இராச்சியத்தின் சுதந்திரக் கட்சி (United kingdom Independence party) யினர் கூறியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பிரான்ஸின் தேசிய முன்னணியும் கிரேக்கத்தின் இடதுசாரி சிறிஸா கட்சியும் பொதுவான நிலைப்பாட்டுக்கு எவ்வாறு வரமுடியும் என்றும் கேள்வியெழுப்பும் அரசியல் ஆய்வாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிரான உணர்வைக் கொண்ட கட்சிகள் மத்தியில் இருக்கக் கூடிய பிளவுகள் ஐரோப்பிய ஒன்றிணைவின் ஆதரவாளர்களுக்கு ஆறுதல் தரக்கூடியவை என்று கூறுகிறார்கள்.

மே 22-25 நடைபெற்ற தேர்தலில் ஐரோப்பிய ஒன்றிணைவுக்கு எதிரான கட்சிகள் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றமை ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக அமைவதால், ஐரோப்பா பூராகவும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தை நடுங்கவைப்பதற்கு அப்பால், இத்தேர்தல் முடிவுகள் உறுப்புநாடுகள் பலவற்றின் உள்நாட்டு அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில் ஆளும் பிரதான கட்சிகளை தீவிரவலதுசாரிக் கட்சிகள் பின்னுக்குத் தள்ளியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நாடுகளில்

(25ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# வியட்நாமில் சீனர்களுக்கெதிரான கலகம் ஆசிய அரசுகளுக்கு கற்றுத்தரும் பாடம்

தென்சீனக் கடலில் சர்ச்சைக்குரிய பகுதிக்கு சீனா அதன் எண்ணெய் அகழ்வுச் சாதனமொன்றை நகர்த்தியதையடுத்து வியட்நாம் பூராகவும் சீனாவுக்கு எதிரான உணர்வு அலை தீவிரமடைந்திருக்கிறது. ஆத்திரமடைந்த வியட்நாமிய மக்கள் கூட்டத்தினர் சீனப் பிரஜைகள் மீதும் வியட்நாமில் உள்ள சீன வர்த்தக நிறுவனங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தினர். சீனா அதன் பிரஜைகளை ஆகாயமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் திருப்பியழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. பீதியடைந்த பெரும் எண்ணிக்கையான சீனர்கள் எல்லையைக் கடந்து கம்போடியாவுக்குள் புகுந்து தஞ்சமடைந்தார்கள்.

வன்முறைகளைக் கட்டுப்படுத்த வியட்நாமிய அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் தெரிவிக்கப்பட்டது. வியட்நாமியர்களுக்கு சீனா மீது ஆத்திரமேற்பட்டதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறதெனினும், சீன அரசாங்கம் மேற்கொள்கின்ற சர்ச்சைக்குரிய தீர்மானங்களுடன் எந்தவித தொடர்புமில்லாத அப்பாவிச் சீனப் பிரஜைகளுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவதை எதுவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

வியட்நாமுக்கு அண்மையாக சர்ச்சைக்குரிய கடல் பகுதிக்கு எண்ணெய் அகழ்வுச் சாதனத்தை நகர்த்துவதற்கு சீனா மேற்கொண்ட தீர்மானம் அநாவசியமான ஒரு ஆத்திரமூட்டல் என்று கூறும் அரசியல் அவதானிகள் வியட்நாமில் சீனர்களுக்கு எதிராக மூண்ட கலவரத்திலிருந்து சீனா படிப்பதற்கு பாடங்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.



வியட்நாமின் ஹோ சி மின் நகரில் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

சர்ச்சைக்குரிய நிலப்பிராந்தியம் அல்லது தகராறுக்குரிய கடல் பகுதி மீதான சுயாதிபத்தியத்தை முனைப்புறுத்துவதற்கு சீனா அதன் வலிமையைக் காட்டும் வகையிலான செயற்பாடுகளில் இறங்குவது உள்நாட்டில் தேசியவாத கடும் போக்காளர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடும். ஆனால், அது அயல்நாடுகளுக்கு பீதியை ஏற்படுத்துகிறது. எது எவ்வாறிருப்பினும் இத்தகைய தந்திரோபாய நகர்வுகளுக்காக பெய்ஜிங் பெரும் விலையைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று அவதானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள். அயல் நாடுகளில் வாழுகின்ற சீனர்கள் வன்முறைகளில் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்படுகிறது.

பிராந்தியங்கள் தொடர்பில் மூழும் சர்ச்சைகள் இருதரப்பு உறவுகளைப் பாதிக்கக்கூடியதாக பதற்றநிலையைத் தோற்றுவிக்கின்றன. இதனால் பாதிக்கப்படுவது வெளிநாடுகளில் வாழும் சீனப் பிரஜைகளும் சீன நிறுவனங்களும் மாத்திரமல்ல.

2012 ஆம் ஆண்டு கிழக்கு சீனக் கடலில் பிராந்திய உரிமை தொடர்பான போட்டியில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே பதற்றம் மூண்ட போது சீனாவில் ஜப்பானிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. சீன ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜப்பானிய கடைகளைச் சூறையாடினர். ஜப்பானில் தயாரிக்கப்பட்ட கார்களை நிர்மூலஞ்செய்தனர். பல நாட்களுக்குப் பிறகே அந்த வன்முறைகளை சீன அதிகாரிகளினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருந்தது.

நிலப்பிராந்தியம் அல்லது கடல் பகுதி தொடர்பான சர்ச்சைகளும் இவைபோன்ற வேறு தகராறுகளும் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டியவை என்பதை ஆசிய அரசாங்கங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். தீர்வொன்றைத் திணிப்பதற்கு அல்லது எல்லையொன்றை மீளவரைவதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய ஒருதலைப்பட்சமான எந்தவொரு முயற்சியுமே பழிவாங்கல் வன்முறைகளையே மூளவைக்கும். தேசியவாதம் தீவிரமடையும் போது அது அந்நியர் மீதான வெறுப்பாக மாறுகிறது. சர்ச்சைக்குரிய கடல் பகுதியில் இருந்து சீனா பின்வாங்க வேண்டும். தகராறுக்குரிய விவகாரங்களைத் தீர்த்துவைப்பதற்கு வழிமல்லுக்கட்டத் தயாராகுவதல்ல,

(33ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# போரின் முடிவுக்குப் பின்னரான ஐந்து வருடங்கள்



பேராசிரியர்
சுமனசிறி லியனகே

**கடந்த ஐந்து வருடங்களையும் அரசாங்கம் விவேகமான முறையில் கையாண்டிருந்தால் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் உண்மையான தேசியத்தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலோங்கியிருப்பார். பதிலாக அவர் இன்று இறுதியில் ஒரு குலத்தின் தலைவராக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது**

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த விதம் ஆயுத மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருகின்ற விவகாரத்தைப் பொறுத்தவரை நான் நம்பிக்கை கொண்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைவானதாக அமையாவிட்டாலும் கூட, ஐந்து வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்துவிட்டது என்பது எனக்கு மகிழ்ச்சியையே தருகிறது. மோதல்களுக்கும் முரண்நிலைகளுக்கும் தீர்வைக் காண்பது தொடர்பிலான பாரம்பரியமான கோட்பாடு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது முரண்நிலைகளை மாற்றியமைப்பதற்கு இராணுவத்தீர்வை விட பேச்சுவார்த்தை மூலமான இணக்கத் தீர்வே விரும்பத்தக்கது என்பதை ஏற்றுக்கொள்கிறது.

ஆனால், போரின் முடிவு எந்தவிதத்தில் அமைந்திருந்தாலும், அதன் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தை இலங்கை அரசாங்கம் விவேகமான முறையில் கையாண்டிருந்தால், அமைதியானதும் இணக்கமானதுமான இலங்கை ஒன்றுக்கான வெளி தோற்றுவிக்கப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும் அரசாங்கம் அந்த வகையாக நடந்து கொண்டிருந்தால் சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் உண்மையான தேசியத்தலைவராக மகிந்த ராஜபக்ஷ மேலோங்கியிருப்பார். ஆனால், கடந்த ஐந்துவருடங்களிலும் அரசாங்கத்தின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் கவலைக்குரியவையாகவே இருக்கின்றன. எதிர்காலம் அச்சமூட்டுவதாக இருக்கிறது.

உண்மையான தேசியத்தலைவராக மேலோங்குவதற்குப் பதிலாக மகிந்த ராஜபக்ஷ இறுதியில் ஒரு குலத்தின் தலைவராகியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதானமாக போர் வெற்றியின் காரணமாகவே 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அவர், இலங்கையின் சகல சமூகங்க ளினாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒருவரை எதிர்க்கட்சிகளும் குழுக்களும் பொதுவேட்பாளராக நிறுத்தினால் 2015 ஜனாதிபதித் தேர் தலில் தோற்கடிக்கப்படலாம். அரசாங் கக் கூட்டணி பெரும் குழப்பத்துக் குள்ளாகியிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் போது அக் கூட்டணி மூன்று அல்லது நான்கு பிரிவுகளாக பிளவடையக் கூடும். ஒரு கணம் நில்லுங்கள். 2009 இல் நான் கொண்டிருந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் தவறாகவே போயிருந்தன என்பதை நான் ஒத்துக்கொண்டேயாக வேண்டும். 2015 ஜனாதிபதித் தேர் தல் தொடர்பிலான எனது எதிர்வு கூறல்களும் பிழையாகப் போகுமா? இருவெளிப்படையான காரணங்க ளுக்காக இதற்குப் பதில் 'ஆம்' ஆக இருக்கக்கூடும்.

முதலாவதாக, எனது நம்பிக்கைக ளும் எதிர்பார்ப்புகளும் மாத்திர மல்ல, எனது எதிர்வு கூறல்களும் நான் முன்னிலைப்படுத்துகின்ற கருத் துகளும் கூட, அகவுணர்வு நிலைக் குரிய தன்மையைக் கொண்டிருக்கின் றன. அதனால், அவை நிச்சயமாக சரியானவையாக இல்லாமலும் போகக்கூடும். எனது நம்பிக்கைக ளும் எதிர்பார்ப்புகளும் நான் உயர் வாக மதிக்கின்ற கோட்பாடுகளையும் விதிமுறைகளையும் இயல்பாகவே பிரதிபலிக்கும். அதற்காக, நான் அக வுணர்வுகளுக்கு அப்பால் சிந்திக்காத ஒரு பேர்வழி என்று அர்த்தப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஒரு சூழ் நிலையின் மாற்றமும் விரிவும் எல்லை வரையறையைக் கொண்ட வையல்ல. அவற்றின் உண்மையான வீச்சுக்கள் முன்கூட்டியே தீர்மானிக் கப்பட முடியாதவை. சூழ்நிலை விரி வடையக் கூடிய பல்வேறு திசைமார்க் கங்களை அடையாளம் கண்ட பிறகு, ஒருவர் தான் உயர்வாக மதிக்கின்ற பாதை எவ்வளவுதான் நெருக்கடியா னதாக இருந்தாலும், அந்தப் பாதையி லேயே நிகழ்வுப் போக்குகள் அமைய வேண்டும் என்று நம்புகிறார், எதிர் பார்க்கிறார். முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் தீர்க்கப்படாவிட்டால் என்ன நேரும் என்ற கேள்வியை எழுப்பிய றோசா லக்ஸம் பேர்க் ஒன் றில் சோசலிசம் வரும் அல்லது காட்டு மிரண்டித்தனம் தோன்றும் என்று பதி லையும் அளித்தார். அவர் சோசலிசம் வருமென்றே எதிர்பார்த்திருப்பார். காட்டுமிராண்டித்தனமோ அல்லது இரண்டுக்கும் இடைப்பட்ட வேறு ஏதாவது ஒன்று வரும் என்று ஒரு போதும் எதிர்பார்த்திருக்கமாட்டார். ஒன்றை உருவாக்குவதற்கு முன்ன தாக மனிதர்கள் மனப்படத்தை தோற் றுவித்துக்கொள்கிறார்கள். (இதே பாதையை ஏனைய மிருகங்கள் பின்பற்றுவதில்லை என்று நான் நிராக ரிக்கவில்லை)

## ஐந்து காரணிகளும் பாத்திரங்களும்

இரண்டாவது காரணம் முதலாவது டன் சம்பந்தப்பட்டது. உண்மையான மாற்றமும் விரிவும் பல்வகைப்பட்ட காரணிகளினாலும் பாத்திரங்களி னாலும் தீர்மானிக்கப்படுகின்றன. இந் தப் பாத்திரங்களுக்கும் காரணிகளுக் கும் கொடுக்கப்படுகின்ற பெறுமானங் கள் வேறுபட்டவையாக இருக்கலாம். ஏற்கனவே நான் எழுதிய கட்டுரை யொன்றில் இன்று நாம் இருக்கின்ற கவலைக்குரியதும் இருள் நிறைந்தது மான சூழ்நிலையைக் கொண்டு வந்த ஐந்து காரணிகளை அடையாளம் காட்டியிருந்தேன்.

முதலாவது, இலங்கை அரசியல் பின்புலத்தில் தற்போதுள்ள பிரச்சி னையை அரசாங்கத்தின் முன்னணி அரசியல்வாதிகள் எவ்வாறு பார்க்கி றார்கள் என்பது பிரதான தீர்மானக் காரணிகளில் ஒன்றாக இருக்கிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தவர்கள் உட்பட அரசாங்கத்தரப்பு தலைவர்கள் கடு மையான சிங்கள-பௌத்த தேசிய வாத நிலைப்பாட்டைக் கொண்டிருக் கிறார்கள். தேசிய இனப்பிரச்சினை யென்று ஒன்று இருப்பதாகவே அவர் கள் உணரவில்லை என்பதையே அவர்களின் பேச்சுகளும் செயற்திட் டங்களும் கொள்கை ஆவணங்களும் வெளிக்காட்டுகின்றன. கடந்த மூன்று தசாப்தங்களாக அல்லது அதற்கும் கூடுதலான காலமாக தமிழர்கள் பெரு வாரியான நெருக்கடிகளையும் இடர் பாடுகளையும் எதிர்நோக்கி வந்திருக் கிறார்கள் என்பதை ராஜபக்ஷாக்க ளும் அரசாங்கத்தின் முன்னணித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள் என்பது உண்மையே. ஆனால், இந்த இடர்பாடுகளெல்லாம் ஆயுத மோதலுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்பதே அவர்க ளின் நிலைப்பாடு. இனத்துவ அடை யாள அரசியல் பரிமாணத்தை முற்று முழுதாக அலட்சியம் செய்து அந்தப் பிரச்சினைகளைக் கவனிப்பதே கடந்த ஐந்து வருடங்களிலும் இலங்கை அரசாங்கத்தின் அணுகுமு றையாக இருந்துவந்திருக்கிறது.

இரண்டாவது, விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட் டமையும் அந்த இயக்கத்தின் தலை மைத்துவம் முழுவதும் அழித்தொ ழிக்கப்பட்டமையும் இலங்கையில் தமிழ்த்தேசியவாதத்தில் நிரவமுடி யாத ஒரு வெற்றிடத்தைத் தோற்று வித்திருக்கிறது. கடந்த காலத்தில் இலங்கையில் தமிழ்த்தேசியவாதத்தி ற்குள் முக்கியமான போக்குகள் விடு தலைப் புலிகள் தொடர்பான மனப் பான்மையை சுற்றிச் சுழன்றவையா கவே இருந்தன. சவால் விட முடியாத

> தற்போதுள்ள பிரச்சினையை அரசாங்கத்தின் முன்னணி அரசியல்வாதிகள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது முக்கியமானதொரு விடயம். ஜனாதிபதி ராஜபக்ஷ, அவரது குடும்பத்தவர்கள் உட்பட அரசாங் கத்தரப்பு தலைவர்கள் தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதாகவே உணரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஆற்றலை விடுதலைப் புலிகள் அப்போது கொண்டிருந்தார்கள். இரண்டேயிரண்டு தெரிவுகளே இருந்தன. ஒன்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் போன்று விடுதலைப் புலி



களின் முகவர்கள் போன்று இருக்க வேண்டும் அல்லது ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைப் போன்று விடுதலைப் புலிகளின் எதிராளிகளாக இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட போது இந்த இரு பிரிவினில் எந்தவொரு பிரிவினருமே தமிழ் மக்களுக்கு ஏற்புடைய தான ஒப்பேறக்கூடிய மாற்றுத் தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டை முன்வைக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

இந்த அரசியல் வெற்றிடம் அண்மைய எதிர்காலத்தில் நிரப்பப்படும் என்பதற்கான எந்தவிதமான அறிகுறியையும் காணவில்லை.

நீண்டகாலமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முகவராகச் செயற்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடந்த வருடம் வடமாகாண சபைக்கு முதற்தடவையாக நடத்தப்பட்ட தேர்தலுக்குப் பிறகு சில சாதகமான செயற்பாடுகளில் இறங்குவதற்கான அக்கறையை வெளிக்காட்டியிருந்த போதிலும், ஒப்பேறக்கூடிய ஜன நாயக மாற்று யோசனையொன்றை இன்னமும் முன்வைக்கவில்லை.

> அரசு மிகையாக இராணுவ மயப்படுத்தப்படுவது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செய்ன் முறைகளை மிகவும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் இராணுவத்தின் ஈடுபாடு குறைவற்றதாகத் தொடர்கிறது. அரசாங்கம் சகல விடயங்களையும் அதன் சொந்த பாதுகாப்பின் அடிப்படையிலேயே நோக்குகிறது

மூன்றாவது, அரசு மிகையாக இராணுவமயப்படுத்தப்படுவது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான செயன்முறைகளை மிகவும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. அரச பாதுகாப்புக்கு அதி முன்னுரிமை கொடுக்கின்றபோக்கு மூன்று தசாப்தகால ஆயுதமோதலின் இயல்பான விளைவேயாகும். அந்த ஆயுதமோதல் இராணுவத்துக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையேயான நடுநிலையமைதியை இராணுவத்துக்குச் சாதகமான முறையில் முற்றுமுழுதாக குழப்பியடித்துவிட்டது. அரசாங்க பாதுகாப்புப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான ஆயுதமோதல் முடிவுக்குவந்து ஐந்து வருடங்கள் கடந்து விட்டபோதிலும், அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் இராணுவத்தின் ஈடுபாடு குறைவற்றதாகத் தொடருகிறது. இது ஒரு தோற்றப்பாடாகவோ அல்லது நிகழ்வாகவோ மாத்திரமல்லாமல், ஒரு பொதுவான மனப்போக்காவும் வந்துவிட்டது. அரசாங்கம் அனேகமாக சகல விடயங்களையும் அதன் சொந்தப் பாதுகாப்பு என்ற அரியத்தின் (Prism) ஊடாகவே பார்க்கின்றது போலத் தோன்றுகிறது. இந்தப் போக்கு பல துறைகளில் அரசாங்கத்தின் நடைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் கொள்கைகளிலும் ஆழமாகச் செல்வாக்கைச் செலுத்துகிறது.

நான்காவது, போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய போர்க்குற்றங்கள் தொடர்பான விவகாரத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வருகின்ற நெருக்குதல்களும் புலம் பெயர் தமிழ்ச்சமூகத்தினால் செய்யப்படுகின்ற பிரசாரங்களும் சினேகபூர்வமற்ற சர்வதேச சூழ்நிலையொன்றில் செயற்பட வேண்டியிருக்கிறதென்று அரசாங்கம் நம்புகின்ற ஒரு நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. இந்த நிலைவரத்தை வெற்றிகொள்வதற்கு அரசாங்கத்துக்கு இரு தெரிவுகளே இருக்கின்றன. அதிகாரப்பகிர்வுக்கான அரசியல் கட்டமைப்பொன்றை அறிமுகப் படுத்துவதற்கும் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிசெய்யக்கூடியதாக நிலைவரத்தை மேம்படுத்துவதற்கும் சுயாதீனமான தீர்மானமொன்றை எடுப்பது முதலாவது தெரிவு. அத்தகையதொரு அடியை அரசாங்கம் எடுத்து வைக்குமேயானால், இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தீவிர சர்வதேச பிரசாரங்களும் செயற்பாடுகளும் நாளடைவில் பலவீனப்படக்கூடிய சூழ்நிலை தோன்றும். ஆனால், அரசாங்கமோ இரண்டாவது தெரிவையே விரும்பியிருக்கிறது. அதாவது, கடுமையான சிங்களத் தேசியவாத ஆதரவை நோக்கி மேலும் மேலும் சாய்வதிலேயே அது அக்கறைகாட்டிக் கொண்டிருக்கிறது. நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலமாக தன்னை நிலைகுலையச் செய்வதற்கு சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது என்று கருதுகின்ற அரசாங்கம், 2009 நடுப்பகுதியில் ஆயுத மோதல் முடிவுக்குவந்துவிட்ட போதிலும் கூட, இலங்கையின் சுயாதிபத்தியத்துக்கும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் எதிரான சர்வதேச சதி முயற்சிகள் தொடருகின்றன என்று கூறிக்கொண்டு தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது.

எச்சரிக்கை உணர்வுடனான இக்கருத்து அரசாங்கத்தினால் அதன் சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது என்று எவரும் வாதிடக்கூடும். அக்கருத்து உண்மையானதா இல்லையா என்பது விவாதத்துக்குரியது. ஆனால், ஒன்றை மாத்திரம் உறுதியாகச்சொல்ல முடியும். அதாவது, இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையிலான பட்ட இந்த மாற்றம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவருவதன் தாக்கத்தின் விளைவானது என்றும் ஊகிக்க முடியும். பிராந்திய நிருவாகத்தில் சில வகையான சுயாட்சியைத் தமிழர்கள் செயற்படுத்தக் கூடியதாக அதிகாரப் பகிர்வு முறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை இந்தி

> விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பொழுது தமிழ் அரசியல் சக்திகள் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதான ஒப்பேறக்கூடிய மாற்றுத் தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாட்டை முன்வைக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இந்த அரசியல் வெற்றிடம் அண்மைய எதிர்காலத்தில் நிரப்பப்படும் என்பதற்கான எந்தவிதமான அறிகுறியையும் காணவில்லை

இந்த முரண்பாடு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளை மிகக் கடுமையாகப் பாதித்திருக்கிறது.

இறுதியாக, கடந்த இரு தசாப்தங்களில், இந்தியா உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைவதற்காக அதன் முன்னுரிமைக்குரிய விவகாரங்களை மாற்றிக்கொண்டுவிட்டது என்றே தோன்றுகிறது. அதன் விளைவாக அயல்நாடுகள் தொடர்பிலான இந்தியாவின் கொள்கைகள் கணிசமான அளவுக்கு மாற்றங் கண்டுவிட்டன. 1980களில் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை மீது கடுமையான நெருக்குதலைப் பிரயோகித்து 1987ஆம் ஆண்டு இலங்கையில் இரு அடுக்கு அரசாங்க முறைமையை (Two - tier system of government) அறிமுகப்படுத்தியதில் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகித்தது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டின் முக்கியத்துவம் குறித்தே இந்தியா எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால், கடந்த தசாப்தத்தில் அந்த நெருக்குதல் பல்வேறுபட்ட காரணங்களின் நிமித்தம் கணிசமான அளவுக்கு பலவீனப்பட்டுவிட்டது. இவற்றில் சில உள்நாட்டு விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட காரணிகளாக இருக்கின்றன. இந்தியாவின் அணுகுமுறையில் ஏற்பட்ட இந்த மாற்றம் ... யத் தூதுக்குழுக்கள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய போதிலும், அண்மைய கடந்த காலத்தில் இந்திய நெருக்குதல் மிகவும் தளர்வான முறையிலேயே பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

### முன்னோக்கிச் செல்வதற்கு வழி என்ன?


பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்ட தேசிய இனங்களினதும் இனத்துவக் குழுக்களினதும் அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் திருப்திப்படுத்துவதன் மூலமாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணக்கூடிய ஆற்றல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு இல்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது.வேறு மார்க்கங்களின் ஊடாக போரைத் தொடருவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றே தோன்றுகிறது. அதாவது அதன் அரசியல் வேறுமார்க்கங்களிலான போரே ஆகும். வேறு மார்க்கங்கள் என்று நான் இங்கே குறிப்பிடுகின்றவற்றில் சிறுபான்மை இன, மதக் குழுக்கள் மீதான பொதுபல சேனா போன்ற அமைப்புகளின் தாக்குதல்களும் உள்ளடங்குகின்றன.

தேசிய இனப்பிரச்சினையின் பிணைப்புகளை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இனத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக் குழுக்கள் ஆளும் வர்க்கத்தினால் பாரபட்சமாக நடத்தப்பட்டதன் விளைவாகத் தோன்றியதே தேசிய இனப்பிரச்சினையாகும். இந்தப் பாரபட்சம் இனத்துவக் குழுக்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. சமுதாயத்தின் கீழ் மட்டங்களுக்கும் பாரபட்சம் விரிவுபடுத்தப்பட்டது. விவசாயிகளிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன; நகர்ப்புற வறிய மக்கள் அவர்களின் வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக போர் ஒன்று தொடுக்கப்படுகிறது. தொழிற்சங்கவாதிகள் தாக்கப்படுகிறார்கள். மீனவ சமுதாயம் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுகிறது. எனவே, போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், நவதாராளவாத அரசாங்கமும் அதன் சமூக பொருளாதாரக் கொள்கைகளும் முற்றுமுழுதான பாரபட்சத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் அட்டூழியத்துக்கும் சுரண்டலுக்குமே வழி வகுத்திருக்கின்றன என்பதை வெகுஜன வர்க்கங்கள் படிப்படியாக விளங்கிக் கொண்டுள்ளன. இதன் ஒரு பிரதிபலிப்பாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் தற்போது தோன்றியிருக்கும் உள் முரண்பாடுகளை நோக்கவேண்டும்.

இத்தருவாயில் ஒரு முக்கியமான விடயத்தைக் கவனத்திலெடுக்க வேண்டும். அதாவது இலங்கையில் 1970களின் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக விரோதச் செயன்முறைகள் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் உச்ச நிலைக்கு வந்திருக்கின்றன. இந்த ஜனநாயக விரோதச் செயன்முறைகளை மறுதலையாக்கக் கூடிய பரந்தளவிலான வெகுஜன அரசியல் அணியொன்று தோற்றுவிக்கப்பட்டு அதன் தலைமையின் கீழான அரசியல் அணுகுமுறைகளின் மூலமாக மாத்திரமே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்கக்கூடியதாக இருக்கும். ஆட்சி மாற்றமொன்றைப்பற்றி மாத்திரமல்ல, தற்போதைய முறைமைகளில் இருக்கின்ற சில அம்சங்களிலும் மாற்றமொன்று தேவை என்றும் மக்கள் சிந்திக்கின்றார்கள் என்பது உற்சாகம் தருவதாகவுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றுவது பற்றியும் சிந்திக்கின்றார்கள். இந்த நோக்கங்களைச் சாதிக்கக்கூடிய ஆர்வமும் ஆற்றலும் கொண்ட உகந்த ஒரு வேட்பாளரை அடையாளம் காண முடியுமென்றால் அது முன்னோக்கிச் செல்வதற்கான உருப்படியான அடியெடுத்துவைப்பாக இருக்குமென்று நம்பலாம். அடுத்த வருட முற்பகுதியில் நடத்தப்படக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான ஒரு பொதுவேட்பாளராக வடமாகாண முதலமைச்சர் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்துவது குறித்து சில வட்டாரங்கள் நினைக்க ஆரம்பித்திருப்பது கவனத்தைத் தூண்டுகின்ற அம்சமாகும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமார் டேவிட்





உள்நாட்டு அரசியல்

மக்களின் நம்பிக்கையும் விசுவாசமும் சர்வதேச ஆதரவும் இருந்தால் போதும் ஈவிரக்கமற்ற இயக்கங்களால் கூட வெற்றியை அடைய முடியும். இதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு.

# விடுதலைப்புலிகள் தோல்வியைத் தழுவியது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுதலைப் புலிகள் ஏன் தோற்கடிக்கப்பட்டனர் என்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். ஆனால் அக்காரணங்களுள் ஏதாவது ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு இதுவே விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறமுடியாது. இவை ஒன்றோடொன்று தொடர்புபட்டவை; சில மற்றவற்றை விட முக்கியமானவை. போர் முடிந்து இன்று ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன.

விடுதலைப் புலிகளின் தோல்விக்கான பல காரணங்கள் பலகோணங்களில் இருந்து கூறப்பட்டுள்ளன. நெல்மணியைப் பதலில் இருந்து பிரித்துப் பார்ப்பது போல் வலிதான காரணங்களை நாம் கண்டுகொள்ள வேண்டும். இது வாதம்-எதிர்வாதம் என்ற முறையில் இல்லாமல் உண்மையைக்கண்டறியும் நோக்குடன் செய்யப்படவேண்டும். 2014 ஜெனீவாவிற்குப் பிந்திய கட்டத்தில் எம்மிடம் தெளிவான ஒரு பார்வை/ நோக்கு அவசியமல்லவா?

தென்னிலங்கையில் திரும்பத் திரும்பக்கூறப்படும் ஒரு விடயம் உள்ளது. உறுதியான தலைமைத்துவம் தான் வெற்றியின் அடிப்படை (நிதிவளங்களை போருக்குத் திருப்புதல், தளர்வில்லாத அரசியல் ஆதரவு, இராணுவத் தந்திரோபாயம், அந்நிய அழுத்தங்களுக்குப் பணிந்து போகாமை என்பன) என்று வாதிக்கப்படுகிறது. ஆனால் இது முழு உண்மையல்ல. பகுதி உண்மை தான். இரண்டாவது வாதப்படி விடுதலைப்புலிகள் தார்மீக பலத்தை இழந்துவிட்டனர்.

சிங்களவர்களான பொது மக்கள் மீதும், தமிழ்த்தலைவர்கள் மீதும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதும், தமிழ்க்குழுக்கள் மீது தம் கொலை வெறியையும் இரத்தப் பசியையும் வெளிப்படுத்தியதும் விடுதலைப் புலிகளின் ஆத்ம பலத்தின் வீழ்ச்சியாகும். இக்கருத்தை தாராள சிந்தனையும் முற்போக்கு எண்ணமும் கொண்ட தமிழ் முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஆரம்பித்த போர் வெல்லப்பட முடியாதது என்ற வாதத்தைச் சாய்வு நாற்காலிச் சிந்தனையாளர்களான வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்நாட்டில் தமிழர்கள் 13% ஆகும்; சிங்களவர் 75% ஆகப் பலத்தோடு உள்ளனர். மேலும் இப்போர் அரசு ஒன்றிற்கும் அரசு அல்லாத தரப்புக்கும் (Non-state actor) இடையில் ஏற்பட்ட மோதல். அரசை வெல்வது எப்படிச் சாத்தியமாகும்? ஆனால் உலக வரலாற்றில் இருந்து இவ்வாதத்தை மறுக்கக்கூடிய பல உதாரணங்களைக் காட்ட முடியும்.

நான்காவது இந்தியாவும் சர்வதேச சமூகமும் துரோகம் இழைத்துவிட்டன; நட்டாற்றில் விட்டுவிட்டன என்ற வாதம். இதனை விடுதலைப் புலிகள் மீது அனுதாபம் கொண்ட தமிழர்கள் கூறுகின்றார்கள். இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்குப் புலனாய்வுத் தகவல்களை வழங்கி உதவின என்று அவர்கள் குமுறுகின்றனர். இது விரிவாக நோக்கப்படவேண்டிய ஒரு விடயம்.

இதனைப் பற்றி நான் பின்னர் என் கருத்தைக் கூறுவேன். ஐந்தாவதும் இறுதியானதுமான காரணம், விடுதலைப் புலிகளிடம் சரியான அரசியல் கொள்கை இல்லை. அவர்களது அரசியல் தான் அவர்களைப் படுகுழியில் வீழ்த்தியது என்பது. இதுவே என்னைப் பொறுத்தவரை முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. விடுதலைப் புலிகளின் மிக அடிப்படையான பலவீனம் இது. ஏனைய எதிர்மறைக் காரணிகள் செயற்பட இப்பலவீனமே உதவியிருக்கிறது. காரணங்கள் பலவற்றைச் சொல்லலாம். அவை ஒன்றும் நாம் அறிந்திராத புது விடயங்கள் அல்ல. முக்கியமான விடயம் என்னவென்றால் விடுதலைப் புலிகளின் தோல்விக்கான காரணங்களைத் தரமதிப்பீடு செய்து வரிசைப்படுத்திக் கொள்வதுதான். காரணங்களைத் தரவரிசைப்படுத்தும் போது அவை ஒன்றோடொன்று தொடர்புபட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை பற்றிக் கூறப்படும் சில விளக்கங்கள் அர்த்தமற்றவை. மகிந்தவின் கிரகநிலை, கருணாநிதியின் இரட்டைவேடம், புலம்பெயர் தமிழர்களிடம் ஒற்றுமையின்மையும் உட்சண்டைகளும், பழைய இடதுசாரிகளின் துரோகம், சிங்கள இனவாதத்தின் விட்டுக்கொடுக்காத பிடிவாதம் என்று இன்னும் பல காரணங்கள் உள்ளன. இவை யாவற்றையும் ஒன்று சேர்த்து இவற்றையும் சேர்க்கலாம் என்று மட்டும் கூறுவேன். ஆனால், மகிந்தவின் கிரகநிலை பற்றிப்பேசுவது சிரிப்புக்கிடமான சுத்த அபத்தம். இந்த இரண்டாம் நிலைக் காரணங்கள் பற்றி இக்கட்டுரையில் இனி நான் எதுவும் கூறப்போவதில்லை.

## தலைமைத்துவம்

முதலாவதாக சொன்ன தலைமைத்துவம் என்ற விடயத்தில் மகிந்த, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா என்ற மூவருக்கும் முக்கிய இடம் உள்ளது. ஒருவர் இவர்களின் எதிரியாகவோ நண்பராகவோ இருக்கலாம்; அவர்களின் பங்களிப்பை மறுக்க முடியாது. (இந்திய வரலாற்றில் ஹூணா என்ற ஆக்கிரமிப்பாளர்களின் தலைவன் அட்டில்ல வெறுப்புக்குரியவனாக இருக்கலாம். அவனது போர்த்திறமையை மறுக்கலாமா?) இம்மூவரும் விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதில் குறியாக இருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. மாவிலாறு விவகாரத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் சர்வதேச மட்டத்தில் மதிப்பை இழந்தனர். நிலைமைகள் தமக்குச் சாதகமாக இருப்பதைக்கண்ட இவர்கள், தம் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டு பணத்தை வாரி இறைத்தனர், ஆளணியை அதிகரித்தனர், சர்வதேச அழுத்தத்திற்கு இடம் கொடுக்காமலும், பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றி அக்கறைப்படாமலும் செயற்பட்டனர். சிங்கள அரசாங்கம் வேண்டுமென்றே தமிழ்ப் பொதுமக்களைக் கொலை செய்தது என்று நான் கூறமாட்டேன். அரசு உயிரழிவைப் பற்றி அக்கறைப்படவில்லை. ஒரு விடுதலைப்புலி பெருமளவு சிவிலியன்கள் மத்தியில் நின்றிருந்தாலும் கூட அந்தப் புலியை அழிப்பதற்காக அவ்வளவு சிவிலியன்களையும் அழிக்க அரசு தயங்கவில்லை. 1989-90 காலத்தில் தென்பகுதி இளைஞர்களின் இரத்தத்தைக் குடித்த இராணுவம் இவ்வாறு செயற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஒரு கருத்தை மட்டும் சொல்லி அடுத்த விடயத்திற்கு வருகிறேன். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணை போர்க் குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் குறித்தனவாக இருக்கலாம். ஆனால் இனச்சுத்திகரிப்பு என்ற குற்றத்திற்கு ஆதாரம் கிடையாது. ஒரு இனத்தை அல்லது குழுவை அழித்தொழித்தல் என்பதற்கான ஆதாரம் வேண்டும்.

தலைமைத்துவம் அவசியமான ஒன்று தான். ஆனால் இதுதான் விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தீர்மானித்த பிரதான காரணி என்று கூறுவது தவறு. இதற்கு முன்னர் இரு தடவைகளில் துணிவான அரசியல் இராணுவ தலைமைத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் அது பயன் தரவில்லை. ஜே.ஆர்.லலித் காலத்தில் வடமராட்சித் தாக்குதல் 1987இல் ஏறக்குறைய முழுவெற்றியாக முடிய இருந்தது. ஆனால், அது முறியடிக்கப்பட்டது. 1990களில் சந்திரிகா அனுருத்த ரத்வத்த படை நடத்துகைகளும், 2000 ஆம் ஆண்டில் அக்கினி கீல படையெடுப்பு, ஆனையிறவில் 2000 ஆம் ஆண்டு ஏப்ரலிலும் உறுதியான தலைமைத்துவம் வழங்கப்பட்டபோதும் அவை தோல்வியில் முடிந்தன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப்புலிகள் செய் அல்லது செத்துமடி என்ற பாணியிலான தாக்குதலை ஆரம்பித்தனர். ஆயினும் ஜனக பெரேராவின் தலைமையில் இம்முயற்சி தோற்கடிக்கப்பட்டது. 1990 களின் நடுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் ஏமாற்று நடவடிக்கைகளில் சினங்கொண்ட சந்திரிகா உறுதியான தலைமைத்துவத்தையும் ஆதரவையும் வழங்கினார். இதை யாராலும் மறுத்துரைக்க முடியாது.

1987இல் ஜே.ஆர். தோல்வியுற்றார். 1990களில் சந்திரிகாவும் தோல்வியைத் தழுவினார். இவ்விரு தோல்விகளும் தலைமைத்துவம் இன்மையால் ஏற்பட்டவையல்ல. ஏனைய காரணிகள் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டன. இந்தியத் தலையீடும், விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பிளவுபடுத்த இந்தியா எடுத்த முயற்சியின் தோல்வியும் அரசுக்கு எதிராகச் செயற்பட்ட காரணிகளாகும். ஜே.ஆர். இந்திராகாந்தியை பகைக்கும் முட்டாள்தனத்தில் இறங்கியதால், தமிழ்த்தீவிரவாத இளைஞர்களுக்கு அயலில் உள்ள இந்தியா ஆயுதம் கொடுத்துப் பயிற்சியும் வழங்கியது. 1987 இல் ஜே.ஆர். இந்தியாவிடம் மண்டியிட்டார். வடமராட்சி படை நடவடிக்கையை அவர் நிறுத்தியிருக்காவிட்டால் அவரது இராணுவ நிலைகள் மீது குண்டுகள் பொழிந்திருக்கும். துறைமுகம், போக்குவரத்து முடங்கிப் போயிருக்கும். அவருக்கு வேறு மாற்றுவழி இருக்கவில்லை.

1990களிலும் 2000த்திலும் சந்திரிகா உறுதியான தலைமைத்துவத்தை வழங்கி துணிச்சலான முடிவுகளை எடுத்தார். அவரின் உறுதிக்கு விடுதலைப்புலிகளின் துரோகம் காரணமாயிற்று. அவருடைய பிரச்சினைகளின் மூலகாரணம் இராணுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான். அது எவ்வளவு முயன்ற போதும் வெற்றிபெற முடியவில்லை. அப்போது விடுதலைப்புலிகள் ஐக்கியப்பட்டு நின்றனர். சர்வதேச ஆதரவும், புலம்பெயர் தமிழர்களின் ஆதரவும் கிடைத்தது. இலங்கைக்கு உள்ளேயும் தமிழர்களின் ஆதரவு இருந்தது. ஆயினும் அப்போது கூட தனி ஈழம் கனியும் என்ற நிலை இருக்கவில்லை. கொழும்பைத் தாக்கி ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்கள் என்ற நிலையில் விடுதலைப் புலிகள் இருக்கவும் இல்லை. கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பிளவுகளால் விடுதலைப் புலிகள் பலம் இழக்கும் வரை இராணுவத்தால் அவர்களைத் தோற்கடிக்கும் ஆபத்து எழவில்லை. அரசாங்கத்தரப்பில் தலைமைத்துவம் இல்லை என்பதால் தோல்வி ஏற்படவில்லை. வேறு பல காரணிகள் அரசுக்கு எதிராக அக்காலத்தில் செயற்பட்டன. தமக்குள்ளே ஏற்பட இருந்த பிளவைத் தடுத்து நிறுத்தும் தூர நோக்கு விடுதலைப் புலிகளிடம் இருக்கவில்லை. பத்துவருடம் கழிவதற்குள் அவர்களின் சரித்திரம் முடிந்துவிட்டது.

**விடுதலைப்புலிகளின் தோல்விக்கான பிரதான காரணம் அவ்வியக்கம் இராணுவ நடவடிக்கையை முதன்மைப்படுத்தி அரசியலை பின்னுக்கு தள்ளியதாகும். ஆயுதப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை நான் மறுதலிக்கவில்லை. ஆனால் அது துணை அம்சமாக இருக்க வேண்டுமேயன்றி அரசியலின் இடத்தைப்பெற முடியாது. முதன்மையானது எது, இரண்டாவதானது எது என்ற தெளிவின்மைகாரணமாக விடுதலைப்புலிகள் தம்மை ஒரு இராணுவமாக மாற்றினர். அரசியல் இயக்கம் என்ற தன்மை நீங்கிப்போயிற்று.**

விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தின் துணையை நாடியதும், தார்மீக பலத்தை இழந்ததும் இரண்டாவது காரணம். மூன்றாவது தமிழ் ஈழம் என்பது ஒரு கனவு; இது அடைய முடியாத இலக்கு என்பது. இவையிரண்டிலும் ஓரளவு உண்மை கலந்துள்ளது. தமிழ்த்தீவிரவாதிகள் (விடுதலைப் புலிகளை மட்டும் நான் குறிப்பிடவில்லை) உத்தமர்களான புனிதர்கள் என்று கூற முடியாது. அரசு பழிவாங்கும் முறையிலான செயல்களில் ஈடுபட்டது. பொதுமக்களின் படுகொலை, பாலியல் வன்புணர்ச்சி, தீ வைத்தல் என்பன இடம்பெற்றன. இனவாதத் தீ கொளுந்துவிட்டு எரிந்தது. தமிழ்த் தீவிரவாதம் தலையெடுத்தபோது, ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்து தம் இரத்தப் பசியைத் தீர்த்துக் கொண்டனர். 1987 ஆம் ஆண்டில் ஹபரண படுகொலைகளும், புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டு வெடிப்பும், பொதுமக்களைப் பலிகொண்டன. இவ்விரு சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் 100 க்கு மேற்பட்ட பொது மக்கள் பலியாகினர். 1990 இல் 600 பொலிஸ்காரர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளில் திடீர் மாற்றம் ஒன்று வெளிப்பட்டது. விடுதலைப் போரில் பொதுமக்களுக்கு எதிரான பயங்கரவாதம் என்ற அம்சமும் கலந்துகொண்டது. 1991 இல் யாழ்ப்பாண முஸ்லிம்களை வெளியேற்றியமை இன்னொரு வகையான கொடுஞ்செயல்.

மேற்குறித்த செய்கைகள் யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போன்று அரசியல்படுகொலைகள் அமைந்தன. அமிர்தலிங்கம் (1989) அத்துலத் முதலி (1993), பிரேமதாச (1993) காமினி திசாநாயக்க (1994) நீலன் திருச்செல்வம் (1999) என் போர் கொலை செய்யப்பட்டனர். நவசமசமாஜக் கட்சியின் அண்ணாமலையும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார். விடுதலைப்புலிகளின் பகுத்தறிவு அற்ற போக்குக்கு 9/11 இன் பின்னரும் அவர்கள் பயங்கரவாதத்தைத் தொடர்ந்ததில் வெளிப்பட்டது. உலகம் மாறிவிட்டது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தமது சவக்குழியைத் தாமே தோண்டிக் கொண்டிருந்தனர். 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் பொதுமக்களுக்கு எதிரான 15 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றை இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரி மீதான தாக்குதல் என்று சொல்வதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. அது அதிகார வெறியின் உச்சமான பைத்தியநிலையைச் சுட்டுவது. யதார்த்தத்தில் இருந்து வெகுதூரம் விலகிச்சென்ற பிரபாகரன் தனிநபர் பயங்கரவாதத்தில் இறங்கினார். 9/11க்குப் பின்னரும் இதனைத் தொடர்ந்தார். லக்ஸ்மன் கதிர்காமர் (2005) ஜனகபெரேரா (2008), ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே (2008) என்போரின் கொலைகள் போன்று பல கொலைகள் நடந்தன. இவற்றை யார் செய்தனர் என்பது யார் கதையை நம்புவது என்பதைப் பொறுத்து அமைவது.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தைக் கையாண்டனர். அரச பயங்கரவாதம் இதனை விட மோசமானது. அதில் பாலியல் வன்புணர்ச்சியும் உள்ளடங்கும். விடுதலைப்புலிகள் இக்குற்றத்தைச் செய்யவில்லை. மிகப்பெரிய உரிமை மீறல்களைச் செய்வது அரசு ஆகும். மக்களை ஒடுக்குவதும் அரசு தான். இந்த உண்மையை உலகின் எல்லாப் பாகத்திலும் உள்ள மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், விடுதலைக்காக உழைப்பவர்கள் வேறுபட்டவர்களாய் இருத்தல் வேண்டும். தங்கள் பிள்ளைகளைக் கடத்திச் செல்பவர்கள் என்று விடுதலைப் புலிகளைக் கண்டு தமிழ் மக்களே பயப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் தார்மீகப் பலம் வீழ்ச்சியுறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இன்று வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இளைஞர்களில் பலர் விடுதலைப் புலிகளினால் கடத்தப்படுவதற்கு அஞ்சி ஓடியவர்கள். விசித்திரம் என்னவெனில் அவ்வாறு ஓடியவர்கள் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்களாய் உள்ளனர்.

இவையாவும் உண்மைகளே. ஆயினும் பயங்கரவாதமும் தார்மீக பலத்தை இழந்ததும் விடுதலைப் புலிகளின் தோல்விக்கான பிரதான காரணம் அன்று. மக்களின் நம்பிக்கையும் விசுவாசமும் சர்வதேச ஆதரவும் இருந்தால் போதும் ஈவிரக்கமற்ற இயக்கங்களால் கூட வெற்றியை அடைய முடியும். இதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்கள் உள்ளன. இஸ்ரேல் மிகச் சிறந்த உதாரணம். நிஜ உலகின் அரசியல் நன்மைக்காக உழைக்கும் இயக்கங்கள் வெற்றி பெறாமல் போவதுண்டு. பயங்கரவாதிகள் வெற்றி பெறுவதும் உண்டு. அரச பயங்கரவாதத்திற்கு சிறிதும் குறைவில்லாமல் விடுதலைப்புலிகளும் பயங்கர



வாதத்தில் ஈடுபட்டனர். அதனால் தான் விடுதலைப் புலிகள் தோல்வியுற்றனர் என்ற வாதத்திற்கு நான் குறைந்த முக்கியத்துவத்தையே கொடுக்கிறேன். எனது பட்டியலில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட பயங்கரவாதம் விடுதலைப் புலிகளின் தோல்விக்கு நேரடிக் காரணியாக இருக்கவில்லை.

மூன்றாவது காரணம் தமிழ் ஈழம் என்பது ஒரு கனவு. கானல் நீர். முடியாத இலக்கு அது. இலங்கைத் தமிழர் மொத்த சனத்தொகை 13%, சிங்களவர் 75%. தமிழர்களுக்கு அரசில் பங்கோ அதிகாரமோ கிடையாது. அவர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் உள்ளனர். இலங்கை ஒரு தீவு. இதனை இரு நாடுகளாகப் பிரித்தால், நாட்டு எல்லைகள் நீண்டனவாக இருக்கும். எல்லைப் பாதுகாப்பு முடிவுறாத பிரச்சினையாகும். பிரிவினைக்கும் பின் இந்தியாவும் பாகிஸ்தானும் 65 ஆண்டுகளாகப் போரிடுகின்றன. ஆகவே விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கனவு அடைய முடியா இலக்கு எனலாம். இந்த வாதத்தில் சில உண்மைகள் உள்ளன. ஆனால் உலகில் புதிய அரசுகள் தோன்றியிருக்கின்றன. இவை பிரச்சினைகளின் மத்தியில் தான் தோன்றின. ஏனைய காரணிகள் சாதகமாக இருந்தால் புதிய அரசுகள் உருவாக முடியும். சைபிரஸ் என்ற சிறிய தீவு நடைமுறையில் இரு நாடுகளாகப் பிளவுபட்டுவிட்டது. இது சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாகவே இருந்துள்ளது. சிறிய பகுதியான கொசோவோ சின்னஞ்சிறு மொல்டோவா என்பனவும் உதாரணங்களாகும். எதிர்காலத்தில் கிழக்கு உக்ரெயின் பிளவுறலாம். ஆதலால் விடுதலைப் புலிகளின் திட்டத்திற்கு இந்தக் காரணி தாண்டமுடியாத தடையாக இருந்தது என்று கூறமுடியாது.

### நான்காவது கோட்பாடு

மூன்று கோட்பாடுகளைக் கூறி அவை பிரதான காரணிகளாகக் கொள்ளப்பட முடியாது என விளக்கினேன். இப்போது நான்காவது கோட்பாட்டிற்கு வருகிறேன். இன்று போரின் ஐந்து ஆண்டுகளின் முடிவு கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில் சர்ச்சைக்குரிய எனது கருத்தைக் கூறுகிறேன். முன்னர் கூறிய மூன்று கோட்பாடுகளுக்கு மாறாக இந்நான்காவது கோட்பாடு இரண்டு காரணிகளைப் பிரதானமானவையாக முதன்மைப்படுத்துகிறது. இவ்விர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டு காரணிகளில் முதலாவது, விடுதலைப் புலிகளின் கருத்தியல் ஆகும். இது விடுதலைப்புலிகளின் பிறப்பில் -டி.என்.ஏ.யில் அமைந்துள்ள விடயம். இரண்டாவது காரணி சர்வதேச சமூகம் ஆகும். குறிப்பாக டில்லி, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் என்பன விடுதலைப் புலிகளின் திட்டத்தை நிறைவேற்றுவதை அனுமதிக்கப்போவதில்லை.

சர்வதேச காரணியை எடுத்து நோக்கும் போது அருகில் உள்ள இந்தியா மிக முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது. பிற எல்லாத்தேசங்களில் இருந்தும் தனித்து நிற்கும் தீவான இலங்கைக்கு அண்மையில் உள்ள இந்தியா மிக முக்கியமானது. உக்ரெயினின் நிகழ்வுகள் எனது கருத்திற்கு வலுச்சேர்ப்பன. உக்ரெயினின் தலைவிதியை ரஷ்யா தீர்மானிக்கப்போகிறது. கிரிமியாவின் கதை முடிந்துவிட்டது. கிழக்கு உக்ரெயின் விடயமாக பராக் ஒபாமா, ஜேர்மனியின் அஞ்சல் மார்க்கெல், நேட்டோத் தலைவர்கள் என்போர் முணு முணுக்கலாம். இது அவர்கள் தங்கள் மனத்திருப்திக்காக செய்து கொள்ள வேண்டியது. கிரிக்கெட் விளையாட்டில் மைதானத்தில் விளையாடுபவர்களை விட சிலர் வெளியே கதிரையில் உட்கார்ந்திருப்பார்கள். இவர்களைப் பன்னிரெண்டாவது ஆள் என கிரிக்கெட் பரிபாசையில் கூறுவார்கள். அமெரிக்கா, ஜேர்மனி, நேட்டோ என்பன பன்னிரண்டாவது ஆட்கள் தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றால் ஒன்றும் ஆகப்போவதில்லை. உக்ரெயின் தலைநகர் கியேவ்வில் உள்ள ஆட்சியாளர்கள் சமஷ்டிக்கு ஒப்பான சுய ஆட்சியை கிழக்கு உக்ரெயினுக்கு வழங்க வேண்டும். அல்லாவிடில் அவை பிரிந்து தனிநாடாகப் போகும் அல்லது ரஷ்யாவுடன் இணைந்து கொள்ளப்போகின்றன. இலங்கையில் உள்ள நிலைமை உக்ரெயின் போன்று எளிமையான வாய்ப்பாடாக் கூறக்கூடியதன்று. ஆனால் ஒன்று நிச்சயம், நீண்ட கால எல்லையில் அதிகாரப் பகிர்வு வழங்கியே ஆக வேண்டும், இல்லையென்றால் ஐக்கியப்பட்ட இலங்கையின் கதை முடிந்துவிடும்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் சர்வதேச நிலை என்ற காரணி முக்கியம் பெற்றதொன்றாய் இருக்கும். கிட்டிய அயல்நாடு வல்லரசாக இருக்குமானால் அதன் செல்வாக்கில் இருந்து தப்ப முடியாது. ராஜபக்ஷ குழுமம் கண்ணிருந்தும் குருடர் போல் செயல்படுகின்றது. வல்லரசு ஒன்றின் இருப்பைக் காணத்தவறியதால் அழிந்தவர்கள் என்ற கூற்று இக்குழுமத்தின் கல்லறையில் பொறிக்கப்படும். ராஜீவ்காந்தி இறந்தபோது கூடவே தமிழீழமும் மரணத்தைத் தழுவியது. விடுதலைப்புலிகள் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணரத்தவறினர். பிரபாகரன் என்ற மூன்றாவது நபரும் அன்றே இறந்தார். இந்தியாவின் முன்னாள் பிரதமரும் வருங்காலப் பிரதமருமான ஒருவரைக்கொலை செய்து விட்டு காடுகளுக்குள் ஒளிந்து தப்பிக்கொள்ளலாம் என்று கற்பனை செய்தது எத்தனை முட்டாள் தனம் !

**21ஆம் நூற்றாண்டில் சர்வதேச நிலை என்ற காரணி முக்கியம் பெற்ற ஒன்றாக இருக்கும். கிட்டிய அயல்நாடு வல்லரசாக இருக்குமானால் அதன் செல்வாக்கிலிருந்து தப்ப முடியாது. ராஜபக்ஷ குழுமம் கண்ணிருந்தும் குருடர்கள் போல் செயற்படுகிறது.**

அலை வீசும் பக்கமாக நீச்சலடித்து வடக்கு- கிழக்கு மாகாண சபையை 13ஆவது, யாப்புத்திருத்தப்படி இயக்கி சுயாட்சி அலகாக சர்வதேச உறுதிப்பாடுகளுடன் முன்னெடுத்துச் சென்றிருந்தால் இலங்கையின் வரலாறு இன்று வேறாக இருந்திருக்கும். தமிழ் மக்கள் இத்தனை துன்பங்களையும் அனுபவித்திருக்க வேண்டியிருந்திருக்காது. ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது போன்றே மாகாண சபையை உதறித் தள்ளிய தவறையும் பிரபாகரன் செய்தார்.

இந்தியாவின் ஆதரவு இல்லை; மேற்குலகும் கைவிட்டது; தனிமைப் பட்டுப்போன விடுதலைப் புலிகளின் தோல்வி நிச்சயமாயிற்று. கே.பி. மில்லியன் கணக்கான நிதிவளங்களை புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து திரட்டினார். விடுதலைப் புலிகள் கப்பல்களை வைத்திருந்தனர். போதைப் பொருள் வர்த்தகத்தினால் கிடைத்த பணமும் இருந்தது. ஆயினும் இவையெல்லாம் சர்வதேச அரசுகளின் அதிகாரம் என்பதற்கு ஈடாக முடியுமா? என்று சர்வதேசத்தின் அனுதாபத்தை விடுதலைப் புலிகள் இழந்தனரோ அன்றே அவர்களின் கதை முடிந்து விட்டது. படுகுழியில் வீழ்ந்தார்கள். கோத்தாபயவும் மகிந்தவும் இதே நிலைக்கு இன்று தள்ளப்பட்டு விட்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்த இந்த யுகத்தில் புதிய அரசுகள் பல தோன்றியுள்ளன. புதிய பிராந்தியங்கள் பிரிந்து போய் தனித்து நிற்கின்றன. இவ்வாறு பிரிந்து செல்வனவற்றில் விதிவிலக்கான சில தேசங்களே மொழி, பண்பாடு, இனக் குழுமம் என்பன சார்ந்த ஓரினத் தன்மையைக் கொண்டுள்ளன. பிரிந்து போவதற்கு ஓரினத் தன்மையுள்ள இனக்குழுமம் என்ற தகுதி இன்று தேவையில்லாத விடயமாகப் போய் விட்டது, தேசியங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கருத்து முக்கியத்துவத்தை இழந்து செல்கிறது. ஒரு தேசம் பிரிந்து போகிறதோ, பிரியாது ஒன்றாக இருக்கிறதோ அது இன்றைய யதார்த்தமான உலக பொருளாதாரம், தொழில்நுட்பம், வர்த்தகம், வல்லரசுகளின் செல்வாக்கு, உள்ளக ஜனநாயகம் ஆகியவற்றோடும் ஓரினத் தன்மை என்பதோடு சம்மந்தப் பட்டதாக உள்ளது. ஓரினத் தன்மை என்பதுதான் தீர்மானக் காரணி அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1990ஆம் ஆண்டு முஸ்லிம்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றியது ஓரினத்தன்மையை உருவாக்குவதற்குத்தான். இது ஒரு குற்றச்செயல் என்பது மாத்திரமன்றி நவீன அரசுகளின் அடிப்படை இயல்பு பன்மைத்துவம் தான் என்பதை புரிந்துக்கொள்ளாத பரிதாப நிலையின் வெளிப்பாடுமாகும். காலத்திற்கேற்ற சிந்தனை மாற்றங்களை விடுதலைப்புலிகள் உள்வாங்கவில்லை.**

1991ஆம் ஆண்டு முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றியது ஓரினத்தன்மையை உருவாக்குவதற்குத்தான். இச்செயல் ஒரு குற்றச் செயல் என்பது மட்டுமன்றி நவீன அரசுகளின் அடிப்படை இயல்பு பன்மைத்துவம் தான் என்பதைப் புரிந்துகொள்ளாத பரிதாப நிலையின் வெளிப்பாடு. காலத்திற்கு ஏற்ற சிந்தனை மாற்றங்களை விடுதலைப் புலிகள் உள்வாங்கவில்லை. சோவியத் யூனியன் உடைவினால் தனிநாடுகளான பதினைந்து நாடுகளும் பன்மைத்துவம் கொண்ட நாடுகளே. இதேபோன்று தான் முன்னைய யூகோஸ்லாவியாவின் உடைவின் போது உருவான ஏழுநாடுகளும் பன்மைத்துவ சமூகங்களைக் கொண்டிருந்தன. ஆபிரிக்காவில் உருவான புதிய நாடுகள், இப்போது பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் கிழக்கு உக்ரெயின் என்பனவும் பல்லின,பல்மொழி இனக்குழுமங்களைக் கொண்ட நாடுகளே ஆகும். இவை யாவும் ஓரினத்தன்மையுடைய தேசியங்கள் சுயநிர்ணய உரிமையைக் கோரி நிற்பதற்கான உதாரணங்க்ள் அல்ல. புதிய சூழ்நிலைகளில் பல்லினச்சமூகங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கான உதாரணங்களாக இவை உள்ளன.

### அரசியலே தீர்மானக் காரணி

விடுதலைப் புலிகளின் தோல்விக்கான பிரதான காரணம் அவ்வியக்கம் இராணுவ நடவடிக்கையை முதன்மைப்படுத்தி அரசியலைப் பின்னுக்குத் தள்ளியதாகும். இது ஒரு தவறான முடிவு- விடுதலைப் புலிகளின் குட்டி முதலாளித்துவ, மார்க்சியம் அல்லாத உயிரணுக்கூறில் அல்லது டி.என்.ஏ.யில் இராணுவம் என்பதே உள்ளது.அங்கு அரசியல் இல்லை. இது பிறவிக் குறைபாடு. நான் ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுக்கவில்லை. அது துணையான அம்சமாக இருக்க வேண்டுமே அன்றி அரசியலின் இடத்தைப் பெற முடியாது. இதைத்தான் நான் வலியுறுத்திக் கூறுகிறேன். முதன்மையானது எது இரண்டாவதான விடயம் எது என்ற தெளிவின்மை காரணமாக விடுதலைப் புலிகள் ஒரு இராணுவமாக தம்மை மாற்றினர். அரசியல் இயக்கம் என்ற தன்மை நீங்கிப் போயிற்று. அந்த இருண்ட கொடிய காலத்தில் அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக விடுதலைப் புலிகள் போரிட்டனர் என்பதை மறுக்க முடியாது. இதனால் தான் பல தமிழர்கள் (எல்லாத் தமிழர்களும் அல்ல) விடுதலைப் புலிகள் மீது ஒருவித அனுதாபம் கொண்டவர்களாய் 'பெடியன்' என்று அன்பு பாராட்டினர். இறுதியில் இவையெல்லாம் கண்ணீர்க் கதையாகத் தான் முடியப்போகிறது என்று தெரிந்தும் ஆதரித்தனர். எவ்வாறாயினும் பிரபாகரனிடம் லெனின், மா ஓ, அல்லது மண்டேலா ஆகியோரின் அரசியல் முதிர்ச்சியைக் காண முடியாது. (பெருநாட்டின்) சைனிங் பாத் கொரில்லா போன்றே அவரின் நடத்தை இருந்தது.

அரசியல் தந்திரோபாயத்தைக் கைவிட்டு இராணுவத்தீர்வில் நம்பிக்கை வைத்த விடுதலைப்புலிகள் இறுதியில் ஒரு சிறிய இராணுவ அலகாகச் சுருங்கிப்போயினர். மூடுண்ட ஒரு பாதை வழி பயணித்து முள்ளி வாய்க்காலை அடைந்தனர். அது ஒதுக்கிடமான ஒரு மூலையில் அமைந்திருந்த கடலோரப்பகுதி. அங்கே அவர்கள் வாழ்வு முடிந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலை, பேச்சுவார்த்தைகளில் நேர்மையின்மை, ஏமாற்று, பொறுப்பில்லாத பயங்கர வாதம் என்பன விடுதலைப் புலிகளின் தலைவரின் இயல்புகள். அவரின் அரசியல் ஒரு மேல் நிர்ணயக் காரணி என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. களத்தில் வெற்றி என்ற நோக்குடன் செயற்படும் இராணுவத்தின் இயல்புகள் இவையாகும். அரசியல் ஞானம், முதிர்ச்சி இங்கே இல்லை. விடுதலைப் புலிகள் ஒரு மாயை உலகில் வாழ்ந்து மடிந்தார்கள். இவ்வியக்கம் பற்றி நான் சமசமாஜக் கட்சியில் (இடது பிரிவு) இருந்த காலமான முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பே 1970களில் இந்த விதமான மதிப்பீட்டைக் கொண்டிருந்தேன். 1980களிலும் என் கருத்து இதுவே. 1989இல் நான் சீலன் கதிர்காமருடன் இணைந்து 'ETHNICITY' (இனக்குழுமம்) என்றொரு கட்டுரைத் தொகுதியைப் பதிப்பித்தேன். அதனை அரினா பப்ளிக்கேசன்ஸ் (ARENA PUBLICATION) வெளியிட்டது. அந்நூலிலும் அதற்குப் பிந்திய எனது எழுத்துக்களிலும் இக்கருத்தையே நான் கூறினேன்.

இக்கட்டுரையின் இறுதிப் பந்தியிலும் எனது கருத்தை மீண்டும் அழுத்திக் கூறுகிறேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



யதீந்திரா

# தமிழர் நலனில் நின்று இந்தியாவைக் கையாளுதல்..?

**இந்தியாவிற்கு தமிழர் விவகாரத்தில் உரிமை உண்டு என்பது எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு அந்த உரிமையின் எல்லைக்கோட்டை விளங்கிக்கொண்டு அதற்கேற்றவாறு அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டியதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொறுப்பாகும். ஆனால் அந்தப் பணியை கூட்டமைப்பு இன்றுவரை சரிவரச் செய்யவில்லை**

இந்தியாவில் ஏற்படும் எந்தவொரு அரசியல் மாற்றமும் இலங்கை அரசியலில் தாக்கம் செலுத்துவது தவிர்க்க முடியாதவொன்றே. அந்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு அரசியலைச் சிந்திக்க வேண்டிய, முன்னெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை இலங்கைத் தரப்பினர் எவருமே தவிர்த்துச் செல்ல முடியாது. இது ஒரு தெற்காசிய அரசியல் யதார்த்தம் ஆகும். இலங்கைத் தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் இந்த யதார்த்தம் கனதியுடையதாகும். இங்கு இலங்கைத் தமிழர் அரசியல் என்பதால் குறிக்கப்படுவது, இலங்கையின் வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டு முன்னெடுக்கப் பட்டுவரும் அரசியலையேயாகும். அந்த வகையில் மோடி தலைமையிலான புதிய அரசாங்கத்துடன் தொடர்பாடவேண்டிய பொறுப்பு தற்போது தமிழர் தரப்பிற்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில்தான் இந்தக் கட்டுரை, இந்தியாவைக் கையாளுதல் என்னும் விடய த்தை நோக்க விளைகிறது.

இந்தியாவைக் கையாளுதல் என்பது, குறிப்பிட்ட காலத்தில் மத்தியில் ஆட்சியமைத்திருக்கும் இந்திய அரசாங்கங்களை தமிழர் நலனில் நின்றவாறு, கையாளுதல் என்னும் பொருள் கொண்டதாகும். ஆனால் கடந்த காலத்தில் தமிழர் தரப்பு அப்படியாக இந்தியாவைக் கையாண்ட சந்தர்ப்பங்கள் ஏதாவது இருக்கின்றனவா? ஒரேயொரு சந்தர்ப்பத்தைத்தான் இதற்கான பதிலாகக் குறிப்பிட முடியும். 1987ஜூலை இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணசபையைப் பொறுப்பேற்று நிர்வகிக்க முற்பட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம். இந்திய ஆதரவுடன் ஒரு மாகாண சபையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் தமிழர் தரப்பிற்கு கிடைத்தது. ஆனால் அப்போது தமிழர் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்த ஏனைய எந்தவொரு தரப்பினரும் இந்தியாவுடன் இணைந்து நிற்க விரும்பாததால், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்). அந்தப் பணியை பொறுப்பேற்றுக் கொண்டது. ஆனால் பிரபாகரனின் செயற்பாடுகளால் அந்த மாகாணசபை ஆட்சியைத்தொடர முடியாமல் போய்விட்டது. இது பலரும் அறிந்த ஒன்று. இந்தியாவைக் கையாளுதல் என்னும் பொருளில் பேச விளைவதால், இந்த விடயத்தை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது. இதன் பின்னர், தமிழர் தரப்பு, இந்தியாவை தமிழர் நலனில் நின்றவாறு கையாண்ட சந்தர்ப்பம் எதுவுமில்லை.

பிரபாகரனால் முன்னெடுக்கப்பட்ட கடந்த முப்பது வருடகால ஆயுத நடவடிக்கைகள் என்பது, இந்தியாவை முற்றிலும் புறம்தள்ளி முன்னெடுக்கப்பட்ட ஒன்றாகும். இந்தக் காலத்தில் தமிழர் அரசியலுடன் இந்தியா எந்தவிதமான இருதரப்பு உறவையும் (Bilateral relations) மேற்கொண்டிருக்கவில்லை. இந்தியா விரும்பினாலும் கூட அதனை மேற்கொண்டிருக்கவும் முடியாது. இந்தக் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் கையாளத்தகுதியற்ற ஒரு அமைப்பாகவே கருதப்பட்டது. மத்தியில் எக்கட்சி ஆட்சியில் இருந்த போதும் விடுதலைப் புலிகள் விடயத்தில் மாறுபாடான அபிப்பிராயங்கள் இருந்திருக்கவில்லை. ஆனால் பிரபாகரனைப் பொறுத்தவரையில் ஒப்பீட்டளவில் காங்கிரஸ் இந்தியாவைவிடவும் பாரதிய ஜனதா இந்தியா பரவாயில்லை என்னும் கணிப்பே இருந்திருப்பதாகத் தெரிகிறது.

ஒருவேளை இவ்வாறானதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையை, பிரபாகரனின் தமிழ் நாட்டு முகவர்கள் வழங்கியிருக்கக் கூடும். எனவே இந்தக் காலத்தில் தமிழர் நலனில் நின்று, இந்தியாவைக் கையாளுதல் என்னும் விடயம் தமிழர் அரசியல் அரங்கிலிருந்து முற்றிலுமாக பிடுங்கப்பட்டிருந்தது. புலிகளை மேவி எந்தவொரு தமிழ் அமைப்பும் இந்தியாவைக் கையாள முடியாதவொரு நிலையும் இக்காலத்தில் இருந்தது. இக்காலத்தில் தமிழர் நலன் குறித்து சிந்திக்கக்கூடிய அனைத்து அமைப்புகளும் விடுதலைப்புலிகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். தமிழர் அரசியல் அரங்கில் இந்தியாவுடனான இருதரப்பு உறவுக்கான வாய்ப்பு இல்லாமல் போனதால் நஷ்டப்பட்டது இந்தியா அல்ல, மாறாக தமிழ் மக்கள் என்பதையும் இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். ஆனால், விடுதலைப் புலிகள் தமிழர் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், இந்தியாவுடன் இணைந்து செயலாற்றும் முன்னைய தமிழர் அரசியல் போக்கும் உயிர்பெற்றது. ஆனால் புலிகளுக்குப் பின்னரான கடந்த ஐந்து வருடகாலத் தமிழர் அரசியலில் கூட்டமைப்பால் இந்தியாவைக் கையாளுவதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றங்களைக் காட்ட முடிந்திருக்கிறதா?

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வடக்கு மாகாணசபையை பொறுப்பேற்ற பின்புலத்தில், இந்தியாவுடன் நெருங்கிச் செயலாற்றுவதற்கான வாய்ப்பு உருவாகியது. ஆனால், கூட்டமைப்பு அதனைச் சரிவர பயன்படுத்தியிருக்கவில்லை. வடக்கு மாகாணசபையை வெறுமனே அரச எதிர்ப்புச் சுலோகங்களை உயர்த்திப் பிடிப்பதற்கான ஒரு களமாகவே கூட்டமைப்பு பயன்படுத்த எத்தனித்தது. விக்னேஸ்வரன் வடக்கு முதலமைச்சராக பதவியேற்றதன் பின்னர் ஆகக் குறைந்தது தமிழ் நாட்டின் முதலமைச்சரான ஜெயலலிதாவைக் கூட அவரால் சந்திக்க முடிந்திருக்கவில்லை. ஏன்? பொதுவாக இந்தியாவை அணுகும் நோக்கில், தமிழ் நாட்டை ஒரு வாயிலாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கொன்று, தமிழர் அரசியலில் நீண்ட காலமாகவே நிலவி வருகிறது. ஆனால் அந்த வழக்கமான அணுகுமுறையின் வாயிலாகக் கூட, கூட்டமைப்பு எந்தவொரு முயற்சியையும் மேற்கொண்டிருக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான், தற்போது நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசாங்கத்தைக் கையாள வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பின் மேல் விழுந்திருக்கிறது. அது கூட்டமைப்பால் முடியுமா?

இந்தியாவை தமிழர் தரப்பு ஏன் கையாள வேண்டும்? இலங்கைத் தமிழர் தொடர்பில் உரிமையுடன் தலையீடு செய்வதற்கான தகுதி கொண்ட ஒரேயொரு நட்புநாடு இந்தியாவாகும். இந்த அடிப்படையில் தான் இந்தியாவிற்கும் தமிழருக்குமான உறவு அமைந்திருக்கிறது. ஏனைய சக்திகள் இலங்கை விடயத்தில் தலையீடுசெய்து வந்தாலும் கூட அவை எவையும் இறுதியில் இந்திய ஆலோசனைக்கே செவிசாய்க்கும். அதிலும் தற்போது நிலைமை மேலும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. மோடியின் வரலாற்று வெற்றியைத் தொடர்ந்து மேற்கின் பார்வை இந்தியாவின் பக்கமாகத் திரும்பியிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் மேற்கினால் மேற்கொள்ளப்படும் இலங்கை தொடர்பான முடிவுகளில் இந்தியாவின் தலையீடு முன்னரைக்காட்டிலும் அதிகமாக இருக்கலாம். எனவே இவற்றையெல்லாம் துல்லியமாகக் கணித்தே கூட்டமைப்பினர் தங்களின் எதிர்காலச் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டியுள்ளது.

இந்தியாவிற்கு தமிழர் விவகாரத்தில் உரிமை உண்டு என்பது எந்தளவிற்கு உண்மையோ, அந்தளவிற்கு அந்த உரிமையின் எல்லைக் கோட்டை விளங்கிக் கொண்டு, அதற்கேற்றவாறு அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டியதே கூட்டமைப்பின் பொறுப்பாகும். ஆனால் அந்தப்பணியை கூட்டமைப்பு இன்றுவரை சரிவரச் செய்யவில்லை. மோடியின் பதவியேற்பின் பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை ஜனாதிபதியிடம் மோடி வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. காங்கிரஸ் அரசாங்கமும் சரி, பாரதீய ஜனதாக் கட்சியும் சரி, 13ஆவது திருத்தச் சட்டம் பற்றித்தான் குறிப்பிடுகின்றன என்றால், அதுதானே இந்தியாவிற்குள்ள உரிமையின் எல்லையாக இருக்க வேண்டும். ஆனால் கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து தெளிவானதொரு நிலைப்பாட்டை இன்றுவரை வெளியிடவில்லை. இது அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்பின் பக்கத்திலுள்ள பாரிய குறைபாடாகும். நீண்ட காலத்திற்குப் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தமது எதிர்பார்ப்பு ஒரு இந்திய மாதிரி (Indian Model) மாநில ஆட்சி முறையே யாகும் என்று சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அதிலும் திட்டவட்டமான நிலைப்பாடு தெரியவில்லை. எனவே மோடி அரசாங்கத்தை கூட்டமைப்பு இத்தகைய முன்னைய குளறுபடியான நிலைப்பாட்டின் வாயிலாக அணுக முடியாது. தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மோடி அரசாங்கம் உடனடியாக ஆர்வம் காட்டுமா என்பதிலும் தெளிவில்லை. அயல் நாடுகளுடன் நல்லுறவைக்

> இந்தியாவை கொழும்புக்கு எதிராக திருப்ப முடியும் என்னும் நம்பிக்கையில் கூட்டமைப்பு அதன் செயற்பாடுகளை திட்டமிடுமாக இருந்தால் மோடி தலைமையிலான இந்தியாவைக் கையாள்வதில் நிச்சயம் அது தோல்வியடைய நேரிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்புவதை விரும்பும் நோக்கிலேயே, தனது பதவியேற்பிற்கு சார்க் தலைவர்கள் அனைவரையும் மோடி அழைத்திருக்கின்றார். இந்தப் பின்னணியில் நோக்கினால், உடனடியாக கொழும்பின் மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே தென்படுகிறது. ஆயினும் இந்தியாவிற்குள்ள பொறுப்பின் அடிப்படையில் நட்பு சார்ந்து சில அழுத்தங்களை மோடி பிரயோகிக்கலாம். ஆனால் கூட்டமைப்பு இந்தியாவிடமிருந்து எதை எதிர்பார்க்கிறது என்பதில் தெளிவில்லாது போனால், இந்தியாவே எங்களுக்காகப் பேச முற்படும். 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இதுதான் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தெளிவாகவும் உறுதியாகவும் பேசாதிருப்பதால், புதுடில்லியில் இருப்பவர்கள் தங்களுக்குத் தெரிந்தவாறு பேசி வருகின்றனர்.

எனவே இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டுதான் கூட்டமைப்பு தனது இந்தியா தொடர்பான புதிய அணுகுமுறையைத் திட்டமிட வேண்டும். ஆனால் இங்கு ஒரு விடயத்தை கூட்டமைப்பின் உயர் பீடம் கருத்தில்கொள்ள வேண்டும். இந்தியாவை கொழும்பிற்கு எதிராகத் திருப்ப முடியுமென்னும் நம்பிக்கையில், கூட்டமைப்பு தன்னுடைய செயற்பாடுகளை திட்டமிடுமாக இருப்பின், மோடி தலைமையிலான இந்தியாவைக் கையாளுவதில் நிச்சயம் கூட்டமைப்பு தோல்வியடைய நேரிடும். ஏனெனில் உள்விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியா கொழும்பை பகைக்கப் போவதில்லை. இந்தியாவிற்கும் - இலங்கைக்குமான கடந்தகால முரண்பாடுகளை உற்றுநோக்கினால் ஒரு விடயம் துலாம்பரமாகும். வெளிவிவகாரங்கள் தொடர்பான முரண்பாட்டைக் கையாளுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாகவே உள்விவகாரம் எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம். இதுவே பெரியண்ணன் அணுகுமுறை. எனவே இந்த அணுகுமுறையை அனுசரித்துத்தான் கூட்டமைப்பு எதிர்காலத்தில் செயலாற்ற வேண்டியிருக்கும். இந்தியாவிற்கு உத்தரவிடுவது போன்ற செயற்பாடுகளை கூட்டமைப்பு முன்னெடுக்குமாயின் அது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். மேலும் இந்தியாவிலிருந்து அந்நியப்படவும் நேரிடும். ■

---

*(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஆளும் கட்சிகள் அவற்றின் கொள்கைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நெருக்குதல்களை சந்திக்க வேண்டிவரும்.

பிரான்ஸில் தேசிய முன்னணிக் கட்சி சோசலிஸ்டுகளை மூன்றாவது இடத்துக்குத் தள்ளிவிட்டது. அதனால் தேசிய முன்னணியில் தலைவி மரைன் லீ பென்னின் குடியேற்றவாசிகளுக்கு எதிரான பிரசாரங்களை சோசலிஸ்டுகள் இனிமேலும் அலட்சியம் செய்ய முடியாது போகும்.

தீவிர வலது சாரிகளினால் தோற்றுவிக்கப்படுகின்ற சவாலுக்கு முகங்கொடுப்பதில் பிரான்ஸின் சோசலிஸ்டுகளும் ஐக்கிய இராச்சியத்தின் கன்சர்வேட்டிவ் கட்சியினரும் திரிசங்கு நிலையை எதிர்நோக்குகின் றனர். இத்தகைய நிலையில் இருந்து சுலபமாக விடுபடுவதற்கான மார்க்கமாக இக்கட்சிகள் குடிவரவுச் சட்ட விதிகளை கடுமையாக்குவதில் நாட்டம் காட்டுமா என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு குடிவரவு சட்டவிதிகள் கடுமையாக்கப்படுமானால், அது நிறவெறி அரசியலையே வலுப்படுத்துவதாக அமையும்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் வெற்றி பெற்ற தீவிர வலதுசாரி அரசியல்வாதிகளில் குடியேற்ற வாசிகளுக்கு எதிரான செயற்பாட்டாளர்கள், வெளிநாட்டவர் மீது வெறுப்புக் கொண்டவர்கள், நிறவெறியர்கள், நவ நாஜிகள் என்று பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வெற்றி ஐரோப்பாவில் அதிகரிக்கும் நிறவெறியுணர்வு தொடர்பில் கவலையை ஏற்படுத்துகிறது.

அரசாங்க செலவினத்தைக் குறைப்பது, அரசாங்க ஊழியர்களை பதவி நீக்கம் செய்வது, குறைந்தபட்ச வேதனத்தில் குறைப்புச் செய்வது என்று ஐரோப்பிய அரசாங்கங்கள் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றன. இந்த நடவடிக்கைகள் ஐரோப்பிய வாக்காளர்களை விரக்தியடையச் செய்கின்றன. இந்த விரக்தியில் அவர்கள் தீவிரவலதுசாரிக் கட்சிகளின் பக்கம் சாய்வதற்கு தலைப்படுகின்றனர்.

வலது சாரிக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பதைத் தடுப்பதற்கு குடியேற்றவாசிகளின் வருகையைக் கட்டுப்படுத்த தடைகளைப் போடுவதற்குப் பதிலாக ஐரோப்பிய அரசாங்கங்கள் அவற்றின் பொருளாதாரக் கொள்கைகளை மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டும் என்று அவதானிகள் வலியுறுத்துகிறார்கள். ■

---

*(66ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இருக்கத்தானே செய்கிறார்கள். ஆளும் கூட்டணி அரசாங்கத்திலும் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப் படவேண்டும் என வாதாடும் கட்சிகள் இருக்கத்தானே செய்கின்றன. இவர்களை நாம் ஏன் நிராகரிக்கின்றோம்? எங்கள் மக்களை ஒழுங்கமைப்பதைவிட அவர்களை அணிதிரட்டுவதைவிட நாம் அந்நிய சக்திகளை நம்பி நம்பி ஏமாந்தோம். இந்தியா எம்மை ஒருபோதும் கைவிடாது எனக்கனவு கண்டோம். நோர்வே எமது உரிமைகளைப் பெற்றுத்தரும் என்று ஏமாந்தோம். அமெரிக்கா என்ற வல்லரசு என்றும் எமக்கு ஆதரவானதே எனக் காத்திருந்தோம். இன்று ஐ.நா சபையின் காலடியில் கிடக்கின்றோம். நாளை மோடி எம்மைத் தேடி வந்து எமது மீட்பராவார் என மக்களின் கவனத்தைத் திசை திருப்புகின்றோம். ஒரு கையால் ஓசை என்றுமே எழுவதில்லை. இனிமேலாவது அரசியலுக்காக மக்களைப் பலியிடுவதைவிட மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பது பற்றிச் சிந்திப்போமாக. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோடியும் இலங்கை இனப்பிரச்சினையும்



என்.சத்தியமூர்த்தி

> அயல்நாடுகளுடனான பிரச்சினைகள் தொடர்பான இந்திய அரசின் கொள்கைகளில் தான் எந்த மாற்றத்தையும் செய்துவிடப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்கே சார்க் தலைவர்களுடனான தனது சந்திப்புக்களை பிரதமர் நரேந்திர மோடி பயன்படுத்திக்கொண்டார் போலத் தெரிகிறது

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தனது தேர்தல் வெற்றிக்குப் பிறகு, இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, தெற்காசிய நாடுகள் அனைத்திற்குமே 'சரித்திர புருஷர்' ஆகி விட்டார். 'நமோ, நமோ' என்று 'நரேந்திர மோடி' என்ற அவரது பெயரைச் சுருக்கிச்சொல்லி, அவருடனான இல்லாத உறவை உறுதி செய்து கொண்ட இந்திய வாக்காளர்களில் பலரும், அவர் பிரதமரான பிறகு, அரசியல்வாதிக்கும் அரசுத் தலைவருக்கும் உள்ள இடைவெளியை உணரத் தொடங்கி இருக்கிறார்கள்.

அந்த வகையில், அரசியல்வாதி மோடியின் ஆதரவாளர்கள், அவரது பாகிஸ்தான், இலங்கை உட்பட்ட அண்டை நாடுகளுக்கான கொள்கைகளைத் தாங்களாகவே உருவகப்படுத்திக் கொண்டு, அதில் இனம் புரியாத ஆறுதலும் அடைந்தார்கள். ஆனால், தனது பதவியேற்பு விழாவிற்கு தெற்காசியாவின் அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்ததன் மூலம், தனது அரசியல் வேறு, அரசு வேறு என்பதை பிரதமர் மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.

அதேசமயம், 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்ற வகையில், பதவியேற்பு விழாவிற்கு 'சார்க்' உறுப்பு-நாட்டுத் தலைவர்களை அழைத்ததன் மூலம், இந்திய வெளியுறவுக் கொள்கையில் தனக்கு உள்ள ஆர்வத்தையும் பிடிப்பையும் கூட மோடி வெளிப்படுத்தி விட்டார். மாறிவரும் உலகச் சூழலில் இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளில் தெற்காசியாவின் முக்கியத்துவத்தையும் இதன் மூலம் அவர் பறைசாற்றியுள்ளார்.

தெற்காசியத் தலைவர்கள் இல்லாமலே கூட, மோடியின் பதவியேற்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டு அரசியல்

விழா பிரம்மாண்டமானதாக மாற இருந்தது. நாட்டின் மக்கள் தொகை 125 கோடியாக இருந்தாலும், இந்தியாவின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியேற்பு விழா போன்ற வைபவங்கள் 1000-1500 பேர் மட்டுமே கலந்து கொள்ளும் விழாவாகவே இருந்து வந்துள்ளது. மதம், மொழி, இனம் போன்ற அனைத்துப் பிரிவினைகளுக்கும் அப்பால், நாடு முழுவதுமே நல்லெண்ண ஆதரவு பெற்ற தலைவராக மோடி பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அனைத்துப் தரப்பு மக்களின் மத்தியில் அவர் பதவியேற்பதே பொருத்தமாக இருந்திருக்கும். இருந்தது.

தெரிந்தோ, தெரியாமலோ தெற்காசியத் தலைவர்கள் அனைவரையும் தனது பதவியேற்பு விழாவிற்கு அழைத்ததன் மூலம் பிரதமர் மோடி மற்றொரு சொல்லப்படாத செய்தியையும் தனது மக்களுக்கும் தனது அண்டை நாட்டு மக்களுக்கும் சொல்லியுள்ளார். இந்து மதம் மட்டுமே சார்ந்த ஒரு 'ஹிந்துத்வா' தலைவராக அவர் சித்தரிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில், சிறுபான்மை மதத்தினருக்கும் அவர்கள் அதிக பட்ச மக்கள் தொகை கொண்டுள்ள அண்டை நாடுகளுக்கு தான் எதிரி அல்ல என்ற செய்தியையும் அவரது பதவிப் பிரமாணம் வெளியுலகிற்கு அறிவித்துள்ளது.

ஒருபுறம், முன் வரிசையில் இந்து மதத் தலைவர்கள். அவர்களுக்கு அப்பால், பெரும்பாலும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த 'பொலிவுட்' திரைப்பட நட்சத்திரப் பட்டாளம், அவர்களுக்கு எல்லாம் அப்பால் சென்று, முன் வரிசையிலேயே, இஸ்லாம், புத்த மதம் போன்ற இந்திய சிறுபான்மை இனங்களை 'தேசிய மதம்' என்று ஏற்றுக் கொண்டுள்ள தெற்காசியத் தலைவர்கள்... இதன் மூலம் பிரதமர் மோடி தனது கடந்த கால அரசியலுக்கும், அரசியல் 'இமேஜ்'-ஜிற்கும் அவற்றிற்கு எதிரான எதிர்கால ஆட்சி மற்றும் கொள்கை முடிவுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசங்களை படம் பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிவிட்டார்.

தெற்காசிய நாடுகளில், இந்தியாவைத் தவிர்ந்து நேபாளம் மற்றும் வங்கதேசம் இரண்டும் மட்டுமே 'மதச்சார்பின்மையை' அரசுக் கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ளன. அவற்றில், நேபாளம், மாவோயிஸ்ட் புரட்சிக்குப் பின்னருள்ள காலத்தில் 'இந்து மதம்' அரசின் மதம் என்ற கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. வங்க தேசம் 'மதச்சார்பின்மை' அடிப்படையில் பிறந்தாலும், பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்களின் போது, தன்னை ஒரு 'முஸ்லிம் நாடு' என்று பிரகடனப்படுத்திக் கொண்டது. அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் இரண்டாண்டுகளுக்கு முன்னர் தீர்ப்பளித்தது. வங்கதேசத்தின் 'மதச்சார்பின்மை'-யை மீண்டும் பிரகடனப்படுத்தியமை குறிப்பிடத் தக்கது.

அந்த வகையில், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலைதீவு என்ற மூன்று 'இஸ்லாமிய' நாடுகளின் தலைவர்களும், திபெத் மற்றும் இலங்கை ஆகிய இரு பௌத்த நாடுகளின் தலைவர்களும் பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கு பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது போதாது என்பது போல, இந்தியச் செய்தி நிறுவனங்களும், தொலைக்காட்சி நிலையங்களும் இந்திய-பாகிஸ்தான் உறவுகளை முன்னிலைப்படுத்தியும் புதிய பிரதமரின் பதவியேற்பு நிகழ்ச்சியை பார்க்கத் தொடங்கியது. அதில் 'தீவிரவாதம்' உட்பட்ட இரு நாட்டுப் பிரச்சினைகள் முன்னிலை வகித்தாலும், அவற்றின் பின்புலமான மதமாச்சரியங்களும் இடம்பெறத் தவறவில்லை என்பதே உண்மை.

இத்தகைய மதம் தழுவிய மாற்றுக் கருத்துகள் இந்திய-இலங்கை உறவுகளுக்கு பொருந்தாது என்றாலும், இரு நாடுகளிடையே, 'இலங்கை இனப் பிரச்சினை' குறித்த கருத்து வேறுபாடுகள், இருநாட்டு அரசு தரப்புகளின் இடையேயும் இருக்கத்தான் செய்கின்றன. 'பதின்மூன்றாவது திருத்தம்' குறித்து இரு நாட்டு அரசும் காகித அளவில் ஒத்த கருத்துக் கொண்டிருந்தாலும், செயல்பாட்டு விடயத்தில் மாபெரும் மாற்றுக் கருத்துகள் அடிப்படை தொட்டே உள்ளன என்ற உண்மையையும் மறப்பதற்கோ, மறுப்பதற்கோ இல்லை.

இது இரு நாட்டு அரசு சார்ந்த விடயம் மட்டுமல்ல, இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் முக்கிய பங்களிப்புடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. அதுவே, இந்தியாவில் உள்ள தமிழ் மக்கள், மற்றும் தென் தமிழ் நாடு அரசியல் தலைமைகளின் மனப் போராட்டங்களின் வடிகாலாகவும் வடிவெடுத்து தசாப்தங்கள் பலவாகி விட்டன. இன்னும் சொல்லப்போனால், ஆண்டுகள் செல்லும் போதும், தமிழ் நாட்டின் எண்ணவோட்டம் வலுப்பெற்றுள்ளதே தவிர, அது குறைந்துவிடவில்லை. இது சரியா-தவறா, உண்மையா அல்லது தமிழ் நாட்டில் தேர்தல் அரசியலுக்கான விடயம் மட்டும் தானா, என்ற ஆராய்ச்சிக்கு இங்கு அர்த்தம் இல்லை.

## அரசியல்வாதியும் பிரதம மந்திரியும்

அந்த வகையில், பாகிஸ்தானுடனான எல்லை மற்றும் இந்தியா-எதிர் தீவிரவாத பிரச்சினையாகட்டும், அல்லது வங்காள தேசத்தில் வாழும் இந்துக்கள் குறித்த கவலைகள் ஆகட்டும், அல்லது இலங்கை இனப்பிரச்சினை ஆகட்டும், இவை எதனையுமே பிரதமர் நரேந்திர மோடி எந்தவித குறுகிய கண்ணோட்டத்திலும் அணுக மாட்டார். அதேசமயம், தொடர்ந்து வரும் பிரச்சினைகளில், இந்திய அரசின் தொடர் நிலைப்பாட்டை வெகுவாக மாற்றி அமைக்கவும் அதிரடி முடிவுகளை எடுக்கமாட்டார்.

இன்னும் சொல்லப்போனால், தேர்தல் அரசியலுக்கு தன்னையும் தனது பாரதீய ஜனதாக்கட்சியையும் முன்னிலைப்படுத்திக்கொள்ள அவர் செய்த பிரசாரங்களை, பிரதமரான பின்னரும் அவரது அரசின் கொள்கை விளக்கம் என்று யாராவது இன்னமும் கருதுவார்களேயானால், அவர்கள் தவறு செய்பவர்கள். இது, இலங்கை அல்லது இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைக்கு மட்டுமல்ல, உள்நாட்டின் பல பிரச்சினைகளுக்கும் பொருந்தும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் அரசு சம்பந்தப்பட்டது, அரசியல் சம்பந்தப்பட்டது அல்ல. இதன் அடிப்படையிலேயே இனப்பிரச்சினையின் தொடரும் பகுதியாக மோடிக்கு முந்தைய மன்மோகன் சிங் அரசு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இரண்டு முறை வாக்களித்தது. ஆனால், அதற்கு வழி வகை செய்த தீர்மான சரத்துகளில் இந்தியாவின் நீண்ட நாளைய அரசுக் கொள்கை நிலைப்பாடுகளை இந்த முறை அமெரிக்கா மாற்றியபோது, அந்த வாக்களிப்பை இந்தியா புறக்கணித்தது. அதுபோன்றே, அரசியல் ரீதியாக பிரதமர் மன்மோகன் சிங், பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டை புறக்கணித்தார். அதே சமயம், அரசு சார்பில் அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷீத்தும் அவர்களும் வெளியுறவுத் துறைச் செயலாளர் சுஜாதா சிங்கும் கலந்து கொண்டார்கள். மன்மோகன் சிங்கின் புறக்கணிப்பு ஒரு அறிகுறி மட்டும் தான், அதுவே இந்திய அரசின் என்றென்றைக்குமான முடிவு அல்ல.

இதனைப் புரிந்து கொள்ள வேண்டிய நேரத்தில் புரிந்து கொள்ளாமல் இருக்கும் இலங்கை தமிழ்த் தலைவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் குழுக்களால், மோடியின் பதவியேற்பு விழாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் அவர் அதில் பங்கு பெற்றதையும் சரியான கோணத்தில் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒன்று, அரசு தழுவியது. மற்றது, ஒரு அரசியல் அறிகுறி. அவ்வளவு தான்.

மகிந்தவிற்கு செய்தி 26 மே மாலை நடைபெற்ற பதவியேற்பு வைபவத்திற்கு அடுத்த நாள், பிரதமர் நரேந்திர மோடி அதிகமாக எதனையும் சாதித்து விடுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். உள்நாட்டுப் பிரச்சினைகளை விட வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு பிரச்சினைகளுக்கு இது முக்கியமாகப் பொருந்தும். அந்த வகையில், இலங்கை ஜனாதிபதி மகிந்தவாகட்டும் அல்லது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிஃப் ஆகட்டும், சார்க் நாட்டு தலைவர்களுடன் அவர் அடுத்த நாள் நடத்திய சிறுசிறு பேச்சுவார்த்தைகள் பல்வேறு பிரச்சினைகளில், புதிய அரசின் கொள்கைகள் அதிகமாக மாறிவிடப் போவதில்லை என்பதையே பறைசாற்றுவதாக மட்டுமே உள்ளது.

அந்த வகையில், ஜனாதிபதி மகிந்தவுடனான பேச்சுவார்த்தையில், புதிய பிரதமர் நரேந்திர மோடி தனக்கு முன்னர் பதவி வகித்த முந்தைய அரசுகளின் கொள்கைகளில் இருந்து புதிதாக எதனையும் சொல்லிவிடவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஆட்சி மாறினாலும், இந்திய அரசின் அண்டை நாடுகளுடனான பிரச்சினைகள் குறித்த கொள்கைகளில் தான் எந்த மாற்றங்களையும் செய்துவிடப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்கே, பிரதமர் மோடி தனது இந்தச் சந்திப்புகளைப் பயன்படுத்தினார் என்று கூட கருத இடமிருக்கிறது.

அந்த வகையில், ஒன்றுபட்ட இலங்கையில், தமிழ் மக்களுக்கு சரிசமமான அந்தஸ்தும், உரிமைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுடைய நியாயமான எதிர்பார்ப்புகளை இலங்கை அரசு சந்திக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி, தனது பங்கிற்கு ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார் என்று கூடச் சொல்லலாம். அந்த வகையில், பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்து அதற்கு அப்பாலும் சென்று தமிழர்களுக்கு அதிக உரிமை கொடுக்க வேண்டும் என்பது குறித்தும், பிரதமர் மோடி, ஜனாதிபதி மகிந்தவிடம் கூறியதில் புதிதாக எதுவும் இல்லை.

இதனைத்தான் அவர், தன்னைச் சந்திக்க இருக்கும் தமிழ் அரசியல் தலைமைகளிடமும் கூறுவார் என்றும் எதிர்பார்க்கலாம். மோடி பதவியேற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு தங்களுக்கு நேரம் ஒதுக்கித்தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். அத்தகைய சந்திப்பு எப்போது நடைபெற்றாலும், அவர்களிடமும் மோடி இதனைத் தான் கூறுவார் என்று எதிர்பார்க்கலாம். அதாவது, பதவியேற்பு விழாவிற்குப் பின்னர் தன்னை மரியாதை நிமித்தம் சந்தித்த ஜனாதிபதி

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து இனப்பிரச்சினைக்கு பல்வேறு தரப்புகளின் பங்களிப்போடு பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக்காண வேண்டும் என்று இந்திய பாராளுமன்ற தூதுக்குழுவுக்கு தலைமைதாங்கி இலங்கை வந்தபோது சுஷ்மா சுவராஜ் கருத்துத் தெரிவித்திருந்தார். அவர் வெளியுறவு அமைச்சரானதைத் தொடர்ந்து அந்த நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை



ராஜபக்ஷவிடம் தான் இனப்பிரச்சினை குறித்து இந்திய அரசின் தொடர் நிலைப்பாட்டை தனது பங்கிற்கும் வலியுறுத்தியதாகவும், அதனை முன்னெடுத்துச் செல்ல கூட்டமைப்பு அவருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று தான் கருதுவதாகவும் மட்டுமே பிரதமர் மோடியால், கூட்டமைப்புத் தலைவர்களிடம் இப்போதும் எப்போதும் கூற முடியும். இது தான் உண்மையான நிலைமையும் கூட.

பாம்பின் கால் அப்படியென்றால், பிரதமர் மோடிக்கும், அவருக்கு முன்னர் அந்தப் பதவியை அலங்கரித்த மன்மோகன் சிங் மற்றும் வாஜ்பாய் உட்பட்ட தலைவர்களின் இடையே என்ன வித்தியாசத்தை இந்திய வாக்காளர்கள் கண்டு விட்டார்கள்? அல்லது, எத்தகைய மாற்றத்தை, இலங்கை அரசு தரப்போ அல்லது தமிழர்களும் கூட்டமைப்புத் தலைமையும் எதிர்பார்க்க முடியும்? இந்தியாவுடன் உறவும் பிரச்சினைகளும் ஒருசேர உள்ள பிற அண்டை நாடுகளும், அயல் நாடுகளும் கூட எந்த வித அதிரடிக் கொள்கை மாற்றங்களை எதிர்பார்க்கமாட்டார்கள். அதனால், அவர்கள் ஏமாறவும் மாட்டார்கள்.

இந்தியா போன்ற பரந்து விரிந்த ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை, ஒவ்வொரு அரசிற்கும் அரசியல் தலைமைக்கும் ஏற்ப மாற்றிவிட முடியாது. அவ்வாறு முயற்சி செய்வது கூட அபத்தமான செயல், அதில் அவர்களால் வெற்றி பெறவும் முடியாது. இதுவே நாட்டிற்கு நாடு மாறுபடலாம். அது அந்தந்த நாட்டின் சரித்திரம், அரசியல் கலாசாரம், அரசு மற்றும் அரசியல் பின்னணி, மற்றும் 'வேற்றுமையில் ஒற்றுமை' போன்ற அடிப்படை மனோபாவங்கள் இந்த மாற்றங்களுக்குக் காரணமாக அமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யலாம்.

இலங்கையில், தவறுதலாக இத்தகைய மாற்றங்களுக்கு எல்லாம், 'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி முறையைக் குறை கூறி அனைத்துத் தரப்பினரும் ஆறுதல் அடைந்து கொள்கிறார்கள். தங்களைத் தாமே ஆசுவாசப்படுத்திக் கொள்கிறார்கள். அல்லது, அதன் அடிப்படையிலேயே அரசியல் செய்கிறார்கள். ஏன், 'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி தோன்றுவதற்கு முன்னர் மட்டும், எதிர்க்கட்சிகளுக்கும், சிறுபான்மையினருக்கும் அதிகப்படியான உரிமைகள் இருந்ததா என்ன?

என்ன, கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன காலகட்டத்தில் தோன்றிய 'நிறைவேற்று ஜனாதிபதி' பதவி மீது அனைத்துப் பழியையும் போட்டுவிட்டு அனைத்துத் தரப்பினரும் தங்களைப் பழியில் இருந்து விடுவித்துக் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்தப் பதவியை தமிழ் மொழியில் 'நிறைவேற்று ஜனாதிபதி' என்று அழைப்பது கூடத் தவறு. அது அகராதி தனமான மொழிபெயர்ப்பு. உண்மையில், அது 'நிர்வாக ஜனாதிபதி' அல்லது 'செயல்முறை' ஜனாதிபதி என்றே மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அதாவது, பாராளுமன்றம் 'நிறைவேற்றும்' சட்டங்களை 'நிர்வகிக்கும்' அல்லது 'செயல்படுத்தும்' ஜனாதிபதி மட்டுமே. அதாவது, ஜனாதிபதி என்பவர், நாடு மற்றும் நாட்டின் பாராளுமன்றத்தின் 'நிர்வாக செயல் அலுவலர்' மட்டுமே. 'ஜனாதிபதி ஆட்சி முறையை' இலங்கை முதலில் கற்றறிந்த அமெரிக்கா உட்பட்ட மேலை நாடுகளில் இத்தகைய முறையே நடைமுறையில் இருந்து வருகிறது என்பதும் உண்மை.

அந்த வகையில், பிரதமர் மோடிக்கும் அவருக்கு முன்பு பதவியில் இருந்த பிற இந்திய அரசு தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவர்களது அரசியல் தலைமையில் இல்லை. அவர்களது, அரசியல் ஆளுமை மற்றும் தனி மனித மனோபாவம் ஆகியவற்றிலேயே உள்ளடங்கி உள்ளது. தன்னுடைய தலைமுறை மற்றும், ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அரசியலில் தான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், வாஜ்பாய் பிரதமரான போது அவரது முடிவுகள் இருந்தன எனலாம்.

தனது வாழ்க்கையை அரசு உயர் அதிகாரியாகவே பெரிதும் கழித்த பிரதமர் மன்மோகன் சிங்கின் தலைமையும் அவரது கடந்தகால அனுபவங்களின் உறைவிடமாகவே இருந்தது. இருவருமே ஆழ்ந்து யோசித்து, யாருக்கும் பங்கம் வராத விதத்திலேயே கொள்கை முடிவுகளை எடுத்து வந்தார்கள் எனலாம். அதனால், அவர்களது தலைமைக்கே பங்கம் வந்தாலும், தங்களது இயல்பை அவர்களால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. அதற்கு அவர்கள் முயலவில்லை.

இந்த வகையில் தான், நரேந்திர மோடியின் அரசியல் தலைமை இந்தியாவில் புதிய மாறுதல்களைக் கொண்டுவர இருக்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. மன்மோகன் சிங் அல்லது வாஜ்பாய் போல் அல்லாமல், தேசிய அரசியலிலோ, மத்திய அரசிலோ எந்தவித முன்னனுபவமும் இல்லாமல் அவர் பிரதமராகியுள்ளார். முன்னர் தனது சொந்த மாநிலமான குஜராத்தில் அவர் முதல்வரானதும் இவ்வாறு தான். அப்போது, குஜராத் முதல்வரன கட்சி மூத்தவர் கேசுபாய் படேல் அமைச்சரவையில் பங்குபெறும் வாய்ப்பு இருந்தும் அடைந்தால் முதல்வர் பதவி மட்டுமே என்று உறுதியாக இருந்து வெற்றியும் பெற்றிருக்கிறார்.

பிரதமர் பதவிக்கும், கட்சித் தலைமைக்கு மேலாக தொண்டர்களை அணுகியும், பின்னர் பத்தாண்டுகளாக பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்காமலே, மக்களைச் சென்றடைந்து, தற்போது பிரதமராகியிருப்பதும் அவரது வாழ்க்கை என்றல்ல, இந்தியா போன்ற பரந்து விரிந்த நாட்டில் ஓர் அரசியல் சரித்திரமாகும். அந்த வகையில், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் அதிரடி அரசியல் வாழ்விற்கும் நரேந்திர மோடியின் அரசியல் பயணத்திற்கும் நிரம்ப ஒற்றுமைகள் உள்ளன.

இதன் காரணமாகவே, பாம்பின் கால் பாம்பு அறியும் என்ற பழமொழி இருவருக்குமே பொருந்தும். அது போன்றே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவதற்கு அவர்களின் கடந்தகால அரசியல் பயணம் நல்ல படிப்பினையாகவும் இருக்கும். இத்தகைய காரணத்தால், இரு நாட்டுத் தலைமைகளின் 'கெமிஸ்ட்ரி' நன்றாக, ஒன்றாக வேலை செய்வதற்கே வாய்ப்புகள் அதிகம் எனலாம். இது, ஜனாதிபதி மகிந்த விடயத்தில், முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முழுவதும் பொருந்தாது என்பதும் உண்மை.

இந்தப் பின்னணி காரணமாகத் தானோ என்னவோ, தன்னைக் குறித்தும் தனது அரசைக் குறித்தும், தமிழ் நாட்டு அரசியல் தலைமைகள் கொச்சையான குற்றச்சாட்டுகளைக் கூட முன்வைத்த போதும், ஜனாதிபதி மகிந்தவால் அமைதி காக்க முடிந்தது. தனக்கு 'சிங்கள-பௌத்த தேசியவாதிகள்' கொடுக்கும் அழுத்தத்தைப் போலவே, தமிழ் நாட்டு அரசு மற்றும் அரசு தலைமைகளும் அரசியல் அழுத்தங்களுக்கு உள்ளாகிறது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். அதே அழுத்தம், இந்திய பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கிற்கும் இருந்ததையும் ஒரு அரசியல்வாதியாக அவரால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. இது அவரது அரசியல் மற்றும் அமைச்சரவை சகாக்களுக்கெல்லாம் பொருந்தாது.

அது போன்றே, இனப்பிரச்சினை, அதனால் தோன்றியுள்ள பிற விவகாரங்களில் எல்லாம், கூட்டமைப்புத் தலைமை எதிர்கொள்ளும் பல்வேறு அழுத்தங்களையும் தேர்ந்தெடுத்த அரசியல்வாதி என்ற வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் உணர்வுபூர்வமாகவும் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில், இலங்கையில் பல்வேறு தரப்பினரின் அரசியல் எதிர்பார்ப்புகளையும் அதற்கு பின்னர் உள்ள கட்டாயங்களையும் அழுத்தங்களையும் கூட அவரால் ஏற்றுக்கொள்ளமுடியும் என்றே எண்ணத் தோன்றுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், பிரதமர் மோடியால், அடுத்தவர்களது அரசியல் நிர்ப்பந்தங்களையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடிகிறது என்ற ஒரே காரணத்திற்காக, அவர் தலைமை மீது அதிக மற்றும் அதீத அழுத்தம் கொடுக்க எந்தத் தரப்பாவது முயலுமேயானால், அவர்களுக்கு ஏமாற்றமும் தோல்வியும் தான் மிஞ்சும் என்பதையும் எதிர்பார்க்கலாம். அந்த வகையிலும் அடுத்த பாம்பின் காலையும் அவர் தெரிந்து வைத்திருக்கவில்லை என்றாலும், அதனை நிச்சயமாக உணர்ந்து வைத்திருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

### இரு நாட்டவர் பிரச்சினை

இலங்கை இனப்பிரச்சினை மட்டுமல்ல, இரண்டு நாட்டு மீனவர்களிடையேயான பிரச்சினைகளையும் ஜனாதிபதி மகிந்தவும் பிரதமர் மோடியும் விவாதித்ததாக இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சுஜாதா சிங் செய்தியாளர்களிடம் பின்னர் தெரிவித்தார். இந்தப் பிரச்சினையிலும், பிரதமர் மோடி முந்தைய இந்திய அரசு எடுத்த நிலைப்பாட்டை ஒட்டியே பேசினார் என்று செய்திகள் கூறுகின்றன.

அந்த வகையில், இந்தப் பிரச்சினையை இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக மட்டுமே கருதி இரண்டு அரசுகளும் செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்தவுடனான பேச்சுவார்த்தையில் பிரதமர் மோடி பேசியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது இந்திய மீனவர்களுக்கு மட்டுமல்ல, இலங்கையின் வட மாகாண தமிழ் மீனவர்களுக்கும் ஒரு ஆறுதலான விடயம். மன்மோகன் சிங் அரசு வெளிப்படையாகச் சொல்லத் தவறிய 'இரு நாட்டு' மீனவர்களின் வாழ்வாதாரம் என்ற அடிப்படையை, பிரதமர் மோடியே அடிக்கோடிட்டுக் காட்டியது குறிப்பிடத்தக்கது.



**ஜனாதிபதி ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் டில்லி சென்றிருந்தால் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவரும் ஜனாதிபதியும் உடனிருந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்க முடியும். வெளிநாட்டுத்தலைவர் ஒருவரை ஜனாதிபதியும் முதலமைச்சரும் சேர்ந்து நேரடியாகச் சந்தித்துப்பேசும் முதல் சந்தர்ப்பமாகவும் அது அமைந்திருக்கும்.**

இதனையொட்டி, இரு நாட்டு மீனவர்கள் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராஜீத சேனாரத்னவின் முந்தைய அறிவிப்பையும் வரவேற்பது போல் பிரதமர் மோடி கருத்து தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், அமைச்சர் ராஜீத கூறியது போல், ஜூன் மாதமே அதிகாரிகள் தரப்பு பேச்சுவார்த்தை தொடங்குமா, அல்லது மீண்டும் ஒரு முறை மீனவப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்களா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்னர், தமிழ் நாட்டில் பிரசாரம் செய்யும் போது, குஜராத் முதல்வராக, அண்டை நாடான பாகிஸ்தானுடனான மீனவர் பிரச்சினையை தான் நன்கு உணர்ந்துள்ளதாக நரேந்திர மோடி கூறினார். அந்த வகையில், இலங்கை மீனவர் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயற்சி செய்யும் அதே சமயம், நாட்டின் பிரதமர் என்ற வகையில், தமிழ் நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு முடிவு காணும் அதே சமயம், இது குறித்த தேசிய கொள்கையின் அவசியத்தையும் அவர் பிற முதலமைச்சர்களை விட அதிகமாக அறிந்தே வைத்திருப்பார்.

அந்த வகையில், இலங்கைச் சிறையில் வாடும் தமிழ் நாட்டு மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுவிப்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷவின் அறிவிப்பின் ஆழத்தை பிரதமர் மோடியால் உணர்ந்து கொள்ள முடியும். காரணம், இலங்கையைப் போலவே பாகிஸ்தான் சிறைகளில் வாடும் குஜராத் மாநிலம் உள்ளிட்ட இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் வாழும் மீனவ குடும்பங்களின் உணர்வுகளை அவர் நேரடியாகவே அறிந்து வைத்திருப்பவர். அதனால் தான் என்னவோ, மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு வருகை தந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிஃப் சுமார் 150 இந்திய மீனவர்களை விடுவிப்பதாக அறிவித்தார்.

### சுஷ்மா, வெறும் சும்மா அல்ல

புதிய நரேந்திர மோடி அரசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள சுஷ்மா சுவராஜ் மட்டுமே அமைச்சரவையில் உள்ள மற்ற எவரையும் விட இலங்கைப் பிரச்சினை குறித்து அதிகமாக அறிந்தவர் எனலாம். கடந்த ஐந்து ஆண்டு காலமாக மக்களவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த காலத்திலும் சரி, அந்தக் காலகட்டத்தில் இந்தியப்பாராளுமன்ற குழுவிற்கு தலைமை தாங்கி இலங்கை விஜயம் செய்த போதும் சரி, அவர் இந்தப் பிரச்சினை குறித்து நன்றாகவே படித்து அறிந்துள்ளார் என்பது புலப்பட்டது.

தனது இலங்கை விஜயத்தின் போது, சுஷ்மா சுவராஜ் தமிழர் பகுதிகளுக்கும் விஜயம் செய்தார். ஜனாதிபதி மகிந்த மற்றும் கூட்டமைப்புத் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, அவர் அன்று பதவியில் இருந்த மன்மோகன் சிங் அரசின் கொள்கை வெளிப்பாடாகவே தனது கருத்துக்களை முன்வைத்தார். இது இலங்கை போன்ற நாடுகளில் எதிர்க்கட்சிகள் என்றுமே பின்பற்றாத முறை என்பதால், பல்வேறு அரசியல் தலைமைகள் அதனை ஆச்சரியம் மற்றும் அதிர்ச்சியுடனேயே அசை போட்டன எனலாம். அதே சமயம், அவர் எடுப்பார் கைப்பிள்ளையாக செயல்படாமல், சுஷ்மா ஒன்றும் சும்மா இல்லை என்பதனை நிரூபிப்பார் என்றும் எதிர்பார்க்கலாம்.

அந்த வகையில், இலங்கை அரசின் சிலபல கருத்துகளை அப்போது சுஷ்மா ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே உண்மை. அது போன்றே, இந்திய அரசின் கொள்கைக்கேற்ப, கூட்டமைப்பு இலங்கை அரசு முன் வைத்துள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்து இனப்பிரச்சினைக்கு பல்வேறு தரப்பினரின் பங்களிப்போடு பேச்சுவார்த்தை மூலம் முடிவு காண வேண்டும் என்றும் கூறினார். இந்த இரு நிலைப்பாடுகளிலும் கூட தற்போது அவர் வெளியுறவுத்துறை அமைச்சரானதைத் தொடர்ந்து எந்தவித மாற்றமும் ஏற்பட்டுவிடாது.

## இழந்த வாய்ப்பு?

அதிரடி அரசியல் என்று எடுத்துக் கொண்டாலும், நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவிற்குச் செல்லும் இலங்கைக் குழுவில் வட மாகாணத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதல்வர், நீதியரசர் விக்னேஸ்வரனும் பங்குபெற- வேண்டும் என்று, அவருக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ அழைப்பு விடுத்தது வரவேற்கத் தக்க விடயம். அதனை விக்னேஸ்வரன் தன்னிச்சையாக நிராகரித்தார் என்று கூறுவதை விட, தான் சேர்ந்த கூட்டமைப்பின் முடிவை அவர் செயல் படுத்தினார் என்று கருதுவதே முறை.

முதல்வர் விக்னேஸ்வரன் கூறியது போல், ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் இந்தியா சென்றதால் மட்டுமே, இலங்கையில் மத்திய-மாகாண உறவுகளிலோ இரு சமூகத்தவரிடையேயோ சுமுகமான நிலைமை நிலவுவதாக அர்த்தமாகி விடாது. இது, இலங்கை தமிழ்ச் சமூகமும் அவர்களது அரசியல் தலைமையும் இந்திய அதிகாரிகள் அனுபவபூர்வமாக அறிந்தவற்றையும், அதன் காரணமாக அவர்கள் புதிய பிரதமருக்கு தெரிவிக்கும் கருத்துகளையும் சந்தேகப்படுவது போன்ற தோற்றத்தையே கொடுத்தது.

மாறாக, இந்தியாவுடனான 'தொப்புள் கொடி உறவு' குறித்து தொடர்ந்து பெருமையாகவும் உரிமையுடனும் பேசிவரும் இலங்கைத் தமிழ் தலைமைகள், ஜனாதிபதி ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்றுக்கொண்டிருந்தால், பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் விக்னேஸ்வரனும் உடனிருந்து சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்க முடியும். ஏன், ஜனாதிபதி, முதல்வர் ஆகிய இருவரும் எந்த வொரு வெளிநாட்டு தலைவரையும் நேரடியாக சேர்ந்து சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதும் அதுவே முதல் தடவையாக இருந்திருக்கும். அத்தகைய கூட்டத்தில், அதுவும் தனது பதவியேற்பு விழா முடிந்த கையோடு, இந்தியாவின் புதிய பிரதமர் முன்வைக்கும் எந்தக் கருத்தையும் அவரது கோரிக்கையாகவே பரிசீலித்து, ஜனாதிபதி ராஜபக்ஷ அரசியல் முடிவுகள் எடுப்பதும் சாத்தியமான ஒரு விடயமாகவே கூட இருந்திருக்கலாம்.

மாறாக, ஜனாதிபதியுடன் முதல்வர் விக்னேஸ்வரன் புதுடில்லி செல்லாததற்கு, கூட்டமைப்புத் தலைவர்களில் சிலர், மகிந்தவின் புது டில்லி விஜயத்திற்கு எதிராக தமிழ் நாட்டின் அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் போது, தாங்கள் மட்டும் எவ்வாறு செல்வது என்று தொனிபட கருத்துத் தெரிவித்திருந்தனர். மாறாக, இந்தப் பின்னணியிலும், முதல்வர் விக்னேஸ்வரன், ஜனாதிபதி மகிந்தவுடன் புதுடில்லி சென்றிருந்தால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மட்டுமே அழுத்தம் கொடுக்க வேண்டும். மற்றப்படி, அதனை இரு இன மக்களிடையே ஏற்பட்டுள்ள தீராத பகையாக கருதக் கூடாது என்ற எண்ணம் தமிழ் நாட்டையும் சென்றடைந்திருக்கும்.

அத்தகைய நிலைமை நிலவாத காரணத்தினால் தான், கடந்த வருடங்களில் தமிழ் நாடு வரும் இலங்கை அமைச்சர்களையும், சிங்கள மக்களையும் தமிழ் நாட்டில் தாக்கும் சில நிகழ்வுகள் அரங்கேறின. இதன் எதிர் விளைவுகளை இன்றல்லது நாளை யாவது இருக்கும் என்ற உண்மையை தமிழ் நாட்டுக் குழுக்கள் அறிவார்களோ இல்லையோ, இலங்கைத் தமிழ்ச் சமூகம் அனுபவ ரீதியாக நன்றாகவே அறிந்துணர்ந்து வைத்துள்ளது என்பதே கசப்பான உண்மை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி..)*

இராஜதந்திரமேயாகும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதேவேளை, இன்னொரு முக்கிய விடயத்தையும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஏனைய நாடுகளில் வர்த்தகத்தில் அல்லது தொழில் துறைகளில் ஈடுபடும் போது கடைப்பிடிக்கின்ற வழிமுறைகளைச் சீனா மாற்றிக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் இயங்கும் சீனக் கம்பனிகள் அந்தந்த நாட்டவர்களை வேலைக்கமர்த்துவது அரிது. சீனாவில் இருந்தே வேலைக்கு ஆட்களையும் அக்கம்பனிகள் கொண்டு போவதிலேயே அக்கறை காட்டுகின்றன. (இலங்கையிலும் சீனா முன்னெடுக்கின்ற உட்கட்டமைப்பு திட்டங்கள் பலவற்றில் பெரும் எண்ணிக் கையான சீனர்கள் வேலை செய்கிறார்கள்).

இதனால் உள்நாட்டவர்கள் மத்தியில் வெறுப்புணர்வு ஏற்படுகிறது. வியட்நாம், மியன்மார் மற்றும் காம்பியா போன்ற பல ஆபிரிக்க நாடுகளில் அதிகரிக்கும் சீனர் விரோத உணர்வுகளுக்கு இதுவே முக்கிய காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

மே மாத நடுப்பகுதியில் வியட்நாமில் இடம்பெற்ற கலவரத்தில் சீனர்கள் அல்லாத வெளிநாட்டவர்களின் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் உள்நாட்டவர்களை வேலைக்கு அமர்த்தாததே அதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. வெளிநாடுகளில் முதலீடு செய்யும் நாடுகளுக்கு வியட்நாம் கலவரம் முறையான பாடமொன்றைக் கொண்டிருக்கிறது. ■

---

*(58ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இவை யாவற்றையும் இலங்கை ஞாபகத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். ராஜபக்ஷ சகோதரர்கள் இப்போது தொலைதூரம் சென்றுவிட்டார்கள். வடக்கு மாகாணத்திற்கு அதிகாரப்பரவலாக்கத்தை மறுத்தமை மிகப்பெரிய தவறு. இனி இப்பாதையில் இருந்து மீண்டும் வருவது சாத்தியமாகுமோ என்பது ஐயமே. காலம் கடந்துவிட்டது. அத்தோடு அவர்கள் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்ப வேண்டிய தருணமும் நெருங்கிவிட்டது.

இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட வல்லரசுகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றும் உக்ரெயின் விவகாரத்தில் உள்ளது. இலங்கையில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர விரும்பி இவ்வல்லரசுகள் ஜெனீவாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தன. இலங்கையின் அரசாங்கம் ஆட்சியில் தொடருவதற்கு வேண்டிய தார்மீக உரிமையை எப்பொழுதோ இழந்துவிட்டது. ஆட்சிக்குள் களவும் மோசடியும் மலிந்துள்ளன. இருந்தபோதும் இங்கு தேவையானது அரசியல் யாப்பு அனுமதிக்கும் வழியிலான ஆட்சிமாற்றமேயன்றி அரசியல் யாப்புக்கு மாறான வழிமுறைகள் அல்ல. யாரையாவது இவ்வழி முறைகளில் செல்லும்படி தூண்டினால் அவ்வல்லரசுகள் மாபெரும் தவறு ஒன்றைச் செய்தவர்களாவர். என்னைப் பொறுத்தளவில் இந்த அரசு பின் முதுகு காட்டி ஓடுவதைப் பார்த்து ரசிக்கவே விரும்புகிறேன். இவ்வரசாங்கம் தானாகவே தேர்தல்களைக் குழப்புவது, இராணுவ சர்வாதிகாரத்தைக்கொண்டு வருவது போன்ற வழிமுறைகளைக் கையாண்டு படுகுழியில் தானே விழலாம். ஆனால், அரசியல் சட்டபூர்வமான வழிகளைக் கைவிட்டு அதனை நீக்கும் முயற்சிக்கு வல்லரசுகள் ஆதரவு அளிக்கக்கூடாது.

டொனஸ்க் ஒப்லாஸ்க் மாகாணம் கிழக்கு உக்ரெயினில் உள்ளது. இதனைவிட வேறு இரு மாகாணங்கள் டொனஸ்க் மாகாணத்திற்கு வடக்கே அருகருகாக உள்ளன. தென் மேற்கிலே ஒனிட்டோ என்ற மாகாணம் உள்ளது. இம்மாகாணங்களில் எல்லாம் ரஷ்ய இனக்குழுமத்தினர் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். ரஷ்யர்கள் பெரும்பான்மையாக உள்ள கிரிமியா தெற்கே உள்ளது. உக்ரெயின் என்ற பல்லினக்குழுமங்களின் சமூகம் என்ற பின்னணியில் தான் அது வல்லரசுகளின் மோதல் களமாக உள்ளதைப் பரிசீலிக்க வேண்டும். ■

---

*(54ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

'உனக்கும் எனக்கும் எதிரி' என்ற அடிப்படையில் காங்கிரஸும், அ.தி.மு.க.வும் தி.மு.க.விற்கு எதிராக கை கோர்க்கலாம்.

தேர்தல் முடிவுகள் தமிழக அரசுக்கும், மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும் புதிய அத்தியாயத்தை உருவாக்குகிறது. ஏற்கனவே மத்திய அரசுக்கு எதிர்ப்பு என்பதை மூலதனமாக வைத்தே இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது. இனி இரு வருடங்கள் மாநிலத்தில் ஆட்சியிலிருக்கப் போகும் அ.தி.மு.க. அதே 'மத்திய அரசு எதிர்ப்பை' தொடருவதற்கு வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. ராஜபக்ஷ வரவேற்பு விடயத்திலேயே அது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள முதல் கண்டனமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை அமைந்திருக்கிறது. அடுத்த கட்டத்தில் ராஜீவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்யும் வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் வரப் போகிறது. அதில் பிரச்சினையே விடுதலை செய்யும் அதிகாரம் தமிழகத்திற்கா, அல்லது மத்திய அரசுக்கா என்பதுதான். அதைத் தொடர்ந்து காவிரிப் பிரச்சினை. அதிலும் அங்குள்ள பா.ஜ.க.வின் நலனைக் கருதியே மோடி தலைமையிலான அரசு முடிவு எடுக்கும். இதெல்லாம் அடுத்து வரப் போகும் அத்தியாயங்கள். அ.தி.மு.க. விற்கும், மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும் புதிய அத்தியாயம் தொடங்குவது போல், தி.மு.க.விற்கும், தமிழக வாக்காளர்களுக்கும் உள்ள அத்தியாயமும் புதிதாகத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் நடைபெற்ற தமிழகத் தேர்தலின் தலைப்புச் செய்தி! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி சுனாமி

பெரும்பான்மைப்பலத்துடனான தேர்தல் வெற்றி உறுதி நிலையை கட்டாயம் ஏற்படுத்தும் என்று கூற முடியாது. இன்றைய வெளிப்படையான யதார்த்தம் என்னவென்றால் மோடி என்ற ஆளுமை முதன்மை பெற்று நிற்பதாகும்.



ஜயந்த தனபால

உலகு முழுமையிலுமாக மக்கள் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை குன்றி வருகின்ற சூழ்நிலையில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் பொதுத்தேர்தல் அண்மையில் முடிந்திருப்பது மிக முக்கியம் வாய்ந்த நிகழ்வு. இந்தியாவின் இத்தேர்தல் மிகப்பெரிய தேர்தல். உலக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். ஒன்பது கட்டங்களாக நடைபெற்ற இத்தேர்தலில் 66.8 வீத வாக்காளர்கள் பங்குபற்றி வாக்களித்தனர். தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் (பி.ஜே.பி) பிரதமராக 63 வயதுடைய நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்டார். தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி செய்யும் பலம் அவருக்குக் கிடைத்துள்ளது. அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மியதான வெற்றி இது. இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிராந்தியக் கட்சிகளுடன் பி.ஜே.பி. இணைந்து அமைத்த கூட்டணியான தேசிய ஜனநாயகக் கூட்டணி இவ்வெற்றியை ஈட்டியது.

இலங்கையின் 2010 தேர்தலுடன் ஒப்பிட்டால் எழுத்தறிவு வீதத்தில் உயர்ந்து நிற்கும் இலங்கையில் 74.5 சதவீத வாக்காளர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர். அப்போது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 61.3 சதவீத வாக்காளர் வாக்களித்தனர்.

அபிப்பிராய வாக்கெடுப்புகளும் இறுதியில் நடந்த கணிப்பீடும் 'மோடி அலை' ஒன்று வீசுவதாகக் கூறின. இந்த அலை மோடி சுனாமியாகி ஜவகர்லால் நேரு அவரின் மகள் இந்திராகாந்தி ஆகியோர் கட்டி வளர்த்த காங்கிரஸ் கட்சியை எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூடப் பெறமுடியாத அளவுக்கு தோல்வியைத் தழுவச் செய்துள்ளது.

### ஒற்றுமைகள்

1956 இலும் 1977இலும் இலங்கையில் என்ன நிகழ்ந்ததோ அதனையொத்த முடிவுகள் இந்தியாவிலும் நடந்துள்ளன. 1977 இல் இந்திராகாந்தியின் படுமோசமான அவசரகால ஆட்சிக்கு ஜனதாக் கட்சியின் பெரு வெற்றி முற்றுப்புள்ளி வைத்தது. சுதந்திரத்துக்குப் பிந்திய இந்தியாவில் முதல் தடவையாக காங்கிரஸ் அல்லாத மாற்று அரசாங்கம் அப்போது பதவியேற்றது. அவ்வெற்றி மகாத்மாகாந்தியின் சீடரான ஜயபிரகாஷ் நாராயண் (ஜே.பி) கொடுத்த தலைமைத்துவத்தின் பெறுபேறாகும். அப்போது ஜயபிரகாஷ் நாராயண் 'முழுமையான புரட்சி' வேண்டும் என்றார். அத்தேர்தல் முடிவுற்றதும் பத்திரிகையொன்றில் ஒரு கேலிச்சித்திரம் வெளிவந்தது. ஒரு கிராமப்புறத்தில் ஒரு மரத்தின் கீழ் ஒரு விவசாயி குந்தியிருக்கின்றான். 'முழுமையான புரட்சி வந்துவிட்டதா?' என்று அவன் கேட்பதாகக் கேலிச்சித்திரம் இருந்தது. மொராஜி தேசாய் ஜனதாக் கட்சி அரசின் பிரதமரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல் பிஹாரி வாஜ்பாய் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தார். ஜனதாக் கட்சியில் ஏற்பட்ட உட்கட்சி மோதல் இந்திராகாந்தி மீண்டும் தேர்தலில் வெற்றிபெற வழிவகுத்தது.

பெரும்பான்மைப் பலத்துடனான தேர்தல் வெற்றி உறுதிநிலையைக் கட்டாயம் ஏற்படுத்தும் என்று கூறமுடியாது. இன்றைய வெளிப்படையான யதார்த்தம் என்னவென்றால், மோடி என்ற ஆளுமை முதன்மை பெற்று நிற்பதாகும். பாரதீய ஜனதாக் கட்சி எந்த ஒரு கட்சியுடனும் கூட்டுச்சேரும் தேவை இல்லை. ஊழல், விலைவாசி உயர்வும் பணவீக்கமும், தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு என்பனவற்றூடாக நவீனமயமாதல் என்பன வர்த்தகத் துறையினரையும் இளைஞர்களையும் கவர்ந்தது.

## மாற்றங்கள்

'இந்தியாவுக்கு வெற்றி' என்று தன் தேர்தல் வெற்றியைப் பற்றி மோடி குறிப்பிட்டார். பிராந்தியவாதம் முடிவுக்கு வந்துவிட்டது என இதன்மூலம் அவர் தெரிவித்தார். தமிழ்நாட்டில் ஜெயலலிதா பெற்ற 37 தொகுதிகளின் இடங்கள் மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியின் திரினாமுல் காங்கிரஸ் பெற்ற 34 ஆசனங்கள் மோடியின் பெரும்பான்மையை அசைக்க முடியாது. மத்தியின் இலங்கைக் கொள்கையில் தமிழ்நாடு வகிக்கக்கூடிய செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இந்தியா முழுமைக்குமாக உழைக்கப் போவதாகக் கூறும் மோடி, இவ்விரு பெண் தலைவர்களோடும் ஒத்துழைப்பதில் தவறிழைக்கமாட்டார் என்றே கூறலாம்.

மோடி இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தனது சொந்த மாநிலமான குஜராத்தின் வதோதரா தொகுதியிலும், உத்தரப் பிரதேசத்தில் உள்ள புனிதநகர் வாரணாசி யிலும் அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவ்விரு தொகுதி ஆசனங்களில் ஒன்றை அவர் கைவிட வேண்டும். உத்தரப் பிரதேசம் வாரணாசியில் அவர் ஆம் ஆத்மி கட்சியின் அரவிந்த் கெஜ்ரிவாலைத் தோற்கடித்தார். வாரணாசி கங்கைக் கரையில் உள்ள புனிதநகர் (காவி உடைகளுக்குக் கவர்ச்சியான இடம்) குஜராத் அவரது சொந்த மாநிலம். அங்கு 13 ஆண்டுகள் தொடர்ச்சியாக முதலமைச்சராக அவர் இருந்துள்ளார். எத் தொகுதியைக் கைவிடுவது என்பது சங்கடமான தெரிவு.

பாரதீய ஜனதா தலைவர்களுள் ஒருவரான அருண் ஜேட்லி அமிர்தசரஸ் தொகுதியில் தோற்றுள்ளார். ஆனாலும் அவர் மேற்சபையான ராஜ்ய சபாவுக்கு தெரிவு செய்யப்படலாம். மோடியுடன் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டுப் பின்னர் அதனை விட்டுக்கொடுத்த பழுத்த அரசியல் தலைவரான எல்.கே. அத்வானி பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதிநிதியாக காந்தி நகரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாரதீய ஜனதாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தொகுதி ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினையால் கட்சியைவிட்டு வெளியேறினார். இப்போது தேர்தலில் தோற்றுப்போயுள்ளார். சர்ச்சைக்குரியவராக. இருந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் விஜேகுமார் சிங் வெற்றி பெற்றுள்ளார். அவர் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளராக அரசியல் களத்தில் நுழைந்தார். பாரதீய ஜனதாவினைச் சேர்ந்த மேனகா காந்தியும் (சஞ்சய் காந்தியின் மனைவி) அவரது மகன் வருண் ஆகிய இருவரும் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

காங்கிரஸ் தலைவர்களுள் சோனியாகாந்தியும், ராகுல் காந்தியும் வெற்றி பெற்றுள்ளனர். ஆயினும் அவர்களுக்குக் கிடைத்த பெரும்பான்மை முன்னரைவிடக் குறைவு. காங்கிரஸின் பெரும் தோல்விக்கான பொறுப்பை இவர்கள் இருவரும் ஏற்றுள்ளனர். காங்கிரஸின் இளைஞர் பிரிவில் உள்ளோர் சிலர் ராகுல்காந்தியை நீக்கிவிட்டு அவருக்குப் பதில் பிரியங்காவை தலைமைத்துவத்திற்குள் கொண்டு வரவேண்டும் எனக் கேட்டுள்ளனர். இது தற்போது கட்சிக்குள் தலைமைத்துவம் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மையின் அறிகுறியாகும். இது ஆழமான நம்பிக்கையின்மை என்பதோடு குடும்ப அரசியலில் இருந்து விலகிச்செல்ல வேண்டும் என்ற விருப்பத்தின் அடையாளமும் ஆகும்.

## குறிப்பிடப்படவேண்டிய தோல்விகள்

ஜனநாயகச் செயன்முறையான தேர்தலின் போது வாக்கு வேட்டையில் ஈடுபட்டோர் மூட்டை மூட்டையாக பண நோட்டுகளை அள்ளி வீசினர். தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுள் 34 வீதத்தினருக்கு எதிராக குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. நாட்டின் 61.16 சதவீத வாக்காளர்கள் பாரதீய ஜனதாவுக்கு எதிராகவே வாக்களித்துள்ள போதும் அக்கட்சி வெற்றி ஈட்டியுள்ளது. இது ஒரு தொகுதியில் போட்டியில் நிற்பவர்களில் யார் அதிகக்கூடிய வாக்குகளைப் பெறுகின்றாரோ அவரையே தேர்ந்து கொள்ளும் முறையின் குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிறது. ( ஆங்கிலத்தில் First past the post என்று கூறப்படும் தேர்தல் முறை)

காங்கிரஸ் தரப்பில் தோல்வியடைந்தவர்களில் 13 அமைச்சர்களும் அடங்குவர். வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், சட்டம் நீதி அமைச்சர் கபில் சிபால், உள்துறை அமைச்சர் குசில் குமார் ஷிண்டே, முன்னாள் அமைச்சரும் இலங்கையின் நண்பருமான மணிசங்கர் ஐயர் ஆகியோர் தோல்வியுற்றோரில் குறிப்பிடத்தக்கவர்கள் (மணிசங்கர் ஐயர் போட்டியிட்ட தமிழ் நாட்டின் மயிலாடுதுறைத் தொகுதியில் நான்காம் இடத்திற்குத் தள்ளப்பட்டார்).

பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தனது இராஜிநாமாவை சமர்ப்பித்து விடைபெற்றது சோகமான ஒரு நிகழ்வுதான். நரசிம்மராவ்வின் நிதியமைச்சராக இருந்து இந்தியாவின் பொருளாதார வரலாற்றையே திசைமாற்றிய இவர், பின்னர் பத்து வருடங்கள் பிரதமராக இருந்து விட்டார். அவரது மகிமையைச் சிறிது மங்கச் செய்த இந்தக் காலம் முடிவுக்கு வந்தது. அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் விமர்சகர் ஒருவர் மன்மோகன் சிங் எப்பொழுதோ மண்ணில் வீழ்ந்து விட்டார். அவர் மறதி காரண மாக எழுந்து நிற்கவில்லை என்று எழுதினார்.

இடதுசாரிக் கட்சிகள் அவமானம் தரும் தோல்வியைத் தழுவின. அவை யாவற்றுக்குமாக ஒன்பது ஆசனங்கள் மட்டும் கிடைத்தன. புதிய கட்சியான ஆம் ஆத்மி கட்சி யும் நான்கு ஆசனங்களையே கைப் பற்றியது. அதன் ஊழல் எதிர்ப்பு இயக்கம் ஆம் ஆத்மி கட்சிக்குப் பிரபலத்தைக் கொடுத்தது. அன்னா ஹசாரேவுக்கு துதிபாடியபடி தேர்த லில் நின்ற இக்கட்சி வெற்றியை அடையவில்லை. அது பிற அரசியல் கட்சிகளோடு கோமாளித்தனமான மோதல்களை உண்டாக்கியது. குறிப் பாக டில்லியில் ஆட்சியில் இருந்து வெளியேறும் நாடகத்தை ஆடியது. தமிழ் நாட்டில் வைகோ தோல்வியுற் றார். 2ஜி ஊழல் விவகாரத்தில் குற் றம் சாட்டப்பட்ட ஆண்டிமுத்து ராஜாவும் தோல்வியைத் தழுவினார்.

தேர்தல் முடிவுகளில் பொதுப் போக்குகள் சிலவற்றை அடையாளம் காணலாம். மோடி செல்வாக்கு அலையில் மிதந்தார். அவரின் பிர சார இயக்கம் பிரமாதமாக இருந்தது. அவர் சாதி, வர்க்கம் ஆகிய எல்லைக ளைத் தாண்டி ஆதரவைப் பெருக்கிக் கொண்டார். தேனீர் விற்பவராக வாழ்க்கையை ஆரம்பித்த மோடி இன்று நாட்டின் பிரதமராக உயர்ந்து விட்டார். 150 ஆண்டுகளுக்கு முன் மரப்பலகையால் ஆன குடிசைக்குள் வாழ்ந்த ஆப்பிரஹாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஆகியதைப் போன்ற சாகசம் நிறைந்த வாழ்க்கை வரலாறு மோடிக்கும் உண்டு.

### இரும்பு மனிதர் பட்டேல் மோடியின் முன்மாதிரியான தலைவர்

குஜராத் மாநிலம் இந்தியாவுக்கு வழங்கிய பெருந்தலைவர்களில் மகாத்மாகாந்தி, வல்லபாய் பட்டேல் என்ற இருவர் குறிப்பிடத்தக்கவர் கள். மோடியின் மதிப்பிற்குரிய தலை வர் 'இந்தியாவின் - இரும்பு மனிதர்' எனப்பட்ட வல்லபாய் பட்டேல் தான் என்பதில் ஐயமில்லை. அவரை இந்தி யாவின் 'பிஸ்மார்க்' என்றும் அழைப் பர். பட்டேல் தீவிர தேசியவாதி. அத் தோடு அரசியலில் ஓர் நடைமுறை வாதி. காஷ்மீர், இந்தியாவைச் சிதை ந்துவிடாமல் ஐக்கியப்படுத்தல், இந் தியாவின் நிர்வாக சேவை போன்ற



**மன்மோகன் சிங் இராஜிநாமாவை சமர்ப்பித்து விடை பெற்றது சோகமான நிகழ்வுதான். பத்து வருடங்களாக பிரதமராக இருந்த அவரின் மகிமையை மங்கச்செய்த காலம் முடிவுக்கு வந்துவிட்டது. அரசியல் விமர்சகர் ஒருவர் மன்மோகன் சிங் எப்போதோ மண்ணில் வீழ்ந்து விட்டார். அவர் மறதி காரணமாக எழுந்து நிற்கவில்லை என்று எழுதினார்**

அகில இந்திய சேவைகளை உரு வாக்கி நாட்டின் நிர்வாகத்தை பலப் படுத்தியமை, ஏனைய அவரது பணி கள் என்பன இந்தியாவின் இரும்பு மனிதர் பட்டேலிற்கும் நேருவுக்கும் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. பட்டேலின் கொள்கைகள் நேருவின் மதச்சார்பின்மை, தாராண்மை வாதம் என்பனவற்றுடன் முரண்பட்டனவாக இருந்தன.

பட்டேல், நேரு முரண்பாடுகளை சமன்செய்து இணக்கம் கண்டவராக மகாத்மா காந்தி விளங்கினார். 1950 இல் பட்டேல் இறந்த போது இந்தியா எத்திசையில் எதிர்காலத்தில் பயணிக் கும் என்பது முடிவாயிற்று. காந்தி யின் படுகொலைச் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்பட்ட ராஷ்டிரிய சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்) போன்ற தேசியவாத அமைப்புகள் வளர்ச்சி பெற்றன. இழமையில் இருந்தே இப் பண்ணையில் வளர்ந்தவர் தான் மோடி. நேருவுக்குப் பதிலாக பட் டேல் இந்தியாவின் பிரதமராக இருந் திருப்பாரேயானால் இந்தியாவின் சரித்திரம் வேறாக இருந்திருக்கும் என்று நம்புபவர் நரேந்திர மோடி.

வர்த்தக தொழில் துறையினரின் நட்பு சக்தியாகவும், சிறந்த நிர்வாகி யாகவும் தன்னைப் பட்டேல் மாதிரி யில் வளர்த்துக் கொண்டார் நரேந்திர மோடி. முஸ்லிம்கள் தொடர்பான மோடியின் நிலைப்பாடு தெளிவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. பிற சிறுபான்மையினர் தொடர்பான நிலைப்பாடும் தெளிவற்றது. பாரதீய ஜனதாத் தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களில் மோடியின் கொள்கைகளை ஆதரித்துப் பேசினர். 2002 இல் குஜராத்தில் நிகழ்ந்த படுகொலைகள் மோடி மீதான ஒரு பெருங்கதை. இதுபற்றி அவர் மௌனம் சாதிக்கிறார். நீதிமன்றம் மோடியை இக்குற்றச்சாட்டில் இருந்து விடுவித்து விட்டது. இத்தேர்தலில் முஸ்லிம்களும் மோடிக்கு எதிராக ஒட்டுமொத்தமாக வாக்களித்தனர் என்று கூறமுடியாது.

### இராஜதந்திரம்

தேர்தல் பிரசாரத்தின் போது வெளிநாட்டுக் கொள்கை பற்றி பெரிதாக எதுவும் பேசப்படவில்லை. பாகிஸ்தானில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்று பதவியில் உள்ளது. இந்தியாவிலும் இப்போது பலம்மிக்க உறுதியான அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. இதனால் பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்க்கும் சாத்தியம் உள்ளது. ஆகக் குறைந்தது பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க முடியும். ஆப்கானிஸ்தானில் இருந்து படைகள் வாபஸ் பெறப்பட்டால் பாகிஸ்தான் – இந்திய உறவுகளில் சுமுக நிலை ஏற்படும்.

இந்தியாவின் அணுசக்திக் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்று ஒரு வதந்தி பரவியது. இதனை நம்புவது இயலாது. அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு மேம்படுவதில் மோடியைவிட பராக் ஒபாமா மிக ஆர்வமுடையவராக இருக்கிறார். பொருளாதார விடயங்களில் குறிப்பாகச் சீனாவுடனான உறவுகள் இராஜதந்திர மட்டத்தில் பலப்படுத்தப்படும் சாத்தியம் உள்ளது.

### இலங்கை – இந்திய உறவுகள்

மோடி தேர்தலில் வெற்றி பெற்றமை இலங்கையைப் பொறுத்தவரை மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும். தமிழ்நாடு முக்கியமான காரணியாகத் தொடர்ந்திருக்கப் போவதில்லை. மோடி இலங்கை தொடர்பாகச் சுதந்திரமான கொள்கையை வகுத்துக்கொள்ளும் வகையிலான நெகிழ்ச்சி உள்ளது. வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்கும் சவுத்புளொக் அதிகாரிகள் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, ஹர்தீப் சிங் பூரி ஆகியவர்கள் கொள்கை வகுப்பில் கலந்தாலோசிக்கப்படுவர். மோடியும் மகிந்த ராஜபக்ஷவும் இராஜதந்திர மட்டத்தில் நல்லுறவுகளின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில் வாழ்த்துச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். இலங்கைக்கு வருகைதரும் படி மகிந்த பதில் அழைப்பும் விடுத்துள்ளார்.

இலங்கையின் தூதுவராக டில்லியில் கடமையாற்றிய பிரசாத் காரியவசம் தேர்ச்சி மிக்க தூதுவர். தேர்தலுக்கு முன்பே அவர் மோடிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து நட்பை ஏற்படுத்திவிட்டார். இந்த ஆதாரத்தின் மீது நட்புறவை வலுப்படுத்தும் வேலை புதிய தூதுவர் பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்னவின் பணியாக அமையும். இராஜதந்திர வேலையில் முன் அனுபவம் இல்லாத அவருக்கு உதவக்கூடிய வெளிநாட்டுச் சேவை அனுபவம்மிக்க பிரதித் தூதுவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கலாம்.

**மோடி பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். ஆகையால் இலங்கை அரசாங்கம் அவரைப் பயன்படுத்தி இந்தியாவின் கவனத்தை அரசியல் – பாதுகாப்பு உறவுகளில் இருந்து இந்தியாவின் பொருளாதார அக்கறைகள் தொடர்பாக திருப்பம் செய்வதற்கு இதுவோர் தகுந்த தருணம் ஆகும். பொருளாதார விடயங்களில்** CEPA **உடன்பாட்டை பொருத்தமான மாற்றங்களுடன் செயற்படுத்தலாம்.** (CEPA **நெருங்கிய பொருளாதார பங்குடைமை ஒழுங்கு** – Closer Economic partnership arrangement **என்பது பொருள்) இந்தியாவில் இருந்து பெருமளவு முதலீடுகள் இங்கு உட்புகுமாயின் தமிழ்நாட்டின் உணர்வெழுச்சி அலையைத் தணிப்பதாக இருக்கும். அத்தோடு இலங்கை – சீன உறவுகளை இந்தியா கெட்டித்தனமாகக் கையாள்வதற்கு இது உதவும்.**


மகாத்மா காந்தியின் பேரன் கோபால் கிருஷ்ண காந்தி அண்மையில் இலங்கைக்கு வந்தார். (இவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ராஜாஜி எனப்படும் ராஜகோபாலச்சாரியின் தாய் வழிப் பேரனும் ஆவார்) இவர் இந்தியா - இலங்கை உறவுகள் பற்றிய சொற்பொழிவு ஒன்றை கொழும்பில் நிகழ்த்தினார். 'இந்தியாவும் இலங்கையும் எட்டித் தொடக்கூடிய தூரத்திலேயே உள்ளன. அவை இணைப்பை ஏற்படுத்த வேண்டும்' என்று தனது சொற்பொழிவில் அவர் குறிப்பிட்டார். 'எங்களுக்குத் தலையீடு செய்யும் உரிமை இல்லை. ஆனால் அக்கறை கொள்ளவும் கவலை கொள்ளவும் உரிமை உள்ளது. ஒருவரிடம் ஒருவர் கேள்வி கேட்டு விசாரிப்பதற்கு உரிமை உண்டு. அந்த விசாரிப்பு கேள்வி பெருமை, ஆணவம், இறுமாப்பு என்பனவற்றை வெளிப்படுத்தும் வகையிலானவையல்ல. அவை கேலியாகவோ கிண்டலாகவோ கூட இருக்கக்கூடாது. குறைகளும் பிரச்சினைகளும் நிறைந்த எமது சமூகங்களின் நிலையை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தால் எழும் கேள்விகளாகவே அவை இருக்கும்' என்றும் கோபால் கிருஷ்ண காந்தி குறிப்பிட்டார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்




# பாரதீய ஜனதாவின் வெற்றியைச் சாத்தியமாக்கியவர்கள்


அ.மார்க்ஸ்

இந்தியப் பொதுத்தேர்தலில் பாரதீய ஜனதாவின் அமோக வெற்றிக்குப் பின் கார்பொரேட்களும் ஊடகங்களும் இருந்தன என்பது ஊரறிந்த உண்மை. நேரடியான நிதி உதவிகள் தவிர அவையே களத்தில் இறங்கிக் கட்சிகளிடம் பேரம்பேசிக் கூட்டணி அமைத்தது, மாநில மொழிப் பத்திரிகைகளை விலைக்கு வாங்கியதுவரை அவை செய்யாதது ஏதுமில்லை. பா.ஜ.க.வின் தேர்தல் செலவு மொத்தம் 5000 கோடி ரூபா என்கின்றனர். மோடி தலைமையில் பா.ஜ.க. தான் வெல்லப்போகிறது, அதைத் தவிர வேறு தேர்வே மக்களுக்கு இல்லை என ஒவ்வொருவர் வீட்டிற்குள்ளும் வந்து தட்டி எழுப்பி ஊடகங்கள் நிமிடந்தோறும் காதுக்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. உலகப் பொருளாதார வீழ்ச்சி தொடங்கிதாணே புயல் வரை காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்றும் மக்கள் நம்ப வைக்கப்பட்டனர்.

இவை அனைத்தும் உண்மைதான் என்றாலும் பா.ஜ.க.வின் வெற்றிக்கு இவை மட்டுமே காரணம் என எதிர்க் கட்சிகள் நம்பினால் அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படத்தான் முடியும். முதலில் எதிர்க் கட்சிகள் சில உண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் ஆர்வமாக இந்தத் தேர்தலில் பங்கேற்றுள்ளனர். 63.8 சதவீத வாக்குப் பதிவு வரலாறு காணாதது. பா.ஜ.க இந்தி பேசும் மக்கள் வாழும் மாநிலங்களில் மட்டுமே உள்ள கட்சி, பார்ப்பன, சத்திரிய மேட்டுக்குடி மக்களின் கட்சி என்பன போன்ற விமர்சனங்களுக் கும் இந்தத் தேர்தல் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. கிழக்கு மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலும் அவர்கள் இன்று வேர் பாய்ச்சி விட்டனர். இமாசலப் பிரதேசம் முதல் கர்நாடகம் வரை அவர்களின் அலை வீசியுள்ளது. மோடி ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்கிற தகவலை மூடி மறைக்காமல் அதையே முன்னிறுத்தி இந்த வெற்றியை அவர்கள் ஈட்டியுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முஸ்லிம்கள் ஆகியோரை இணைத்து பகுஜன் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்த கான்ஷிராமுடைய அணுகல்முறை இன்று தகர்க்கப்பட்டு விட்டது. இதைத் தலைகீழாக மாற்றிய குருவை மிஞ்சிய சிஷ்யை மாயாவதியின் பார்ப்பனர் + சத்திரியர் + பிற்படுத்தப்பட்டோர் + பட்டியல் சாதியினர் என்கிற வெற்றிக் கூட்டணியை இன்று உண்மையிலேயே காரிய சாத்தியமாக்கியவர்களாக பா.ஜ.க.வினரே உள்ளனர். ஆக புவியியல் ரீதியிலும் சரி, சமூக ரீதியிலும் சரி பரந்துபட்ட ஒரு கட்சியாக அது விசாலித்து நிற்கும் உண்மையை நாம் முதலில் கணக்கில் எடுத்துக் கொள்வோம்.

இந்த வெற்றிக்குப் பின்னணியாக யார் இருந்துள்ளனர்? 1. முதலில் வாக்களித்த மக்கள். 55 கோடி வாக்காளர்களில் சுமார் 10 கோடிப் பேர் புதியவர்கள். உலகமயம், திறந்த பொருளாதாரம், கார்பொரேட் கலாசாரம் ஆகியன வேர்விட்ட பின் பிறந்த குழந்தைகள். வாக்காளர்களின் இன்னொரு பெருந் தொகுதி வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கம். இவர்களுக்கு வளர்ச்சி, வளர்ச்சியின் பலன்கள் ஆகிய ஒன்று மட்டுமே இலக்கு. வரலாறு, இலக்கியம், சமூகவியல் என்பதெல்லாம் இன்று கல்வி நிலையங்களிலும் கூடப் புறக்கணிக்கக்கூடிய பாடங்கள் ஆகிவிட்டன. சமத்துவம், ஜனநாயகம், பன்மைத்துவம் ஆகிய அரசியல் அறங்களின் இடத்தில் இன்று வல்லவன் வெல்வான் என்கிற கார்பொரேட் அறம் கொடிகட்டிப் பறக்கிறது. இதை முழுமையாக உள்வாங்கியுள்ளவர்கள் இந்தத் தலைமுறையினர் இவர்களிடம் போய், 'குஜராத்தில் 2002இல் 2000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், 2 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே அகதிகளாயினர். இதற்கெல்லாம் காரணம்....' எனத் தொடங்கினீர்களானால், 'அட, இந்தக் கதையெல்லாம் யாருக்கு சார் வேணும். உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது...' என்று பதிலளிப்பார்கள்.

> மதிப்பீடுகள் இன்று பெரியளவில் மாறிவிட்டன. முந்தைய தலைமுறையினரின் அரசியல் மொழி இன்றைய தலைமுறையினரிடம் எடுபடவில்லை. பகுத்தறிவு, மதச்சார்பின்மை, மார்க்ஸியம், சாதி ஒழிப்பு முதலிய அரசியல் மதிப்பீடுகளின் இடத்தில் இப்போது மதம் சார்ந்த அறங்கள், நம்பிக்கைகள், சுயமுன்னேற்றத்தை நோக்கிய விளைவு முதலியன இடம்பிடித்துக்கொண்டுள்ளன. இதனை நாம் மனம் கொள்ள வேண்டும்

மதிப்பீடுகள் இன்று பெரிய அளவில் மாறிவிட்டன. முந்தைய தலைமுறையினரின் அரசியல் மொழி இன்றைய தலைமுறையினரிடம் எடுபடவில்லை. பகுத்தறிவு, மதச்சார்பின்மை, மார்க்சீயம், சாதி ஒழிப்பு முதலிய அரசியல் மதிப்பீடுகளினிடத்தில் இப்போது மதம் சார்ந்த அறங்கள், நம்பிக்கைகள், சுய முன்னேற்றத்தை நோக்கிய விழைவு முதலியன இடம்பிடித்துக் கொண்டுள்ளன. இதை நாம் முதலில் மனங் கொள்வோம்.

இவர்களுக்கு ஊழலற்ற, சாதித்துக் காட்டுகிற ஆட்சி வேண்டும், செயல்படும் அரசு எந்திரம் வேண்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதம் சாத்தியமில்லாத அளவிற்கு இந்நாடு அண்டை நாடுகள் மத்தியில் தன்னை உறுதி செய்து கொள்ள வேண்டும். 'பொலிஸ் ஸ்டேஷன்களில் உங்களுக்கெல்லாம் என்னுடைய ஆட்சிக் காலத்தில் எத்தனை மரியாதை இருந்தது, மீண்டும் லாலு ஆட்சியை நிறுவுங்கள்' என லாலு பிரசாத் யாதவ் முழங்கிய முழக்கத்தை பீஹாரிகள் நிராகரித்து விட்டனர். அவரது மனைவி, மகள் இருவருமே படுதோல்வி அடைந்துள்ளனர். குடும்பப் பெருமை வாரிசு அரசியல், ஊழல் பின்புலம் இவற்றின் மூலம் இனி மோடி, பா.ஜ.க. வகை அரசியல்வாதிகளை எதிர்கொள்ள இயலாது.

திரிபுராவில் தம் பிடியைத் தக்க வைத்துக்கொண்ட மார்க்சிஸ்டுகளால் மேற்குவங்கத்தைத் தக்கவைக்க இயலவில்லை. அவர்களது முப்பதாண்டு கால ஆட்சி அங்குள்ள 25 சதவீத முஸ்லிம்களின் வாழ்க்கையில் விளக்கேற்ற இயலவில்லை என்பதை அந்தக் குள்ள நீதிபதி (சச்சார்) அம்பலப்படுத்தினார். அரசாங்கத்தைக் காட்டிலும் அங்கு மார்க்சிஸ்ட் கட்சி ரேஷன் கடை, பொலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் ஆட்சி செலுத்தியதை இன்றைய தலைமுறை ஏற்கவில்லை. மக்களையும் விடக் கட்சியே சரியானது, உயர்ந்தது என்கிற அவர்களின் நூறாண்டு வரலாற்றுச் சுமையை உதறாதவரை அவர்களுக்கு விடிவில்லை.

2. பா.ஜ.க.வின் இந்த வெற்றியைச் சாதகமாக்கிய இரண்டாவது தரப்பு அவர்களுக்குப் பின்புலமாக உள்ள ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர். மாறியுள்ள இந்த உலகச் சூழலையும் கருத்தியல் நிலையையும் அவர்கள் மிகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். ரோம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனுடன் நீதிமன்றத்தால் ஒப்பிடப்பட்ட மோடியையே அவர்கள் சர்வ வல்லமையாளனாக முன்னிறுத்தி பின்னர். எச்ச சொச்சமாகவேனும் நேரு காலத்திய சோசலிசத் தொங்கல்கள் ஒட்டிக் கொண்டுள்ள காங்கிரஸால் சிறு வணிகத்தில் அந்நிய முதலீடு போன்ற அம்சங்களிலும், கனிம வளங்களைக் கொள்ளையடித்தல், பிச் செய்வார்கள் என நாம் எதிர் பார்க்க வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் எந்தப் புதிய சக்திகள் இன்று ஆதரித்து நிற்கின்றனரோ அவர்களே வளர்ச்சி எனும் நோக்கத்திற்கு இது பொருத்தமில்லாதது என

> பாரதீய ஜனதாவின் வெற்றியின் பின்னணியாக இருந்த சக்திகளில் கார்பொரேட்டுகள் முக்கியமான தரப்பினர். எப்படி மோடி என்கிற ஒரு பிற்படுத்தப்பட்ட சாதிக்காரரை முன்னிறுத்தினாலும் பாரதீய ஜனதா தங்களின் நலன்களை விட்டுக்கொடுக்காது என்று உயர் சாதியினர் முழுமையாக அதற்கு பின்னால் நின்றனரோ அதேபோன்று மன்மோகன் சிங்-சோனியா ஆட்சியைக்காட்டிலும் மோடியின் ஆட்சி இன்னும் உறுதியாக தாராளமயக்கொள்கையை நிறைவேற்றும் என்று கார்போரேட்டுகள் உறுதியாக நம்புகிறார்கள்

வெற்றியையும் ஈட்டினர். தொடர்ச்சியாகவும் இறுக்கமாகவும் அமைதியாகவும் அவர்களின் பணி இந்தியத் தீபகற்பம் முழுவதும் மட்டுமல்ல அந்தமான் தீவுகள் வரைக்கும் பரவி இருந்தது. கல்விப் பணி தொடங்கி வெடி குண்டுத் தாக்குதல்கள் வரைக்கும் அவர்கள் தொலைநோக்குத் திட்டங்களுடன் செயற்பட்டனர். இராணுவம் தொடங்கி சகல துறைகளிலும் அவர்கள் ஊடுருவினர். பிற்படுத்தப்பட்டோர் பழங்குடியினர் ஆகியோரை சிறுபான்மை மக்களிடமிருந்து பிரித்து எதிர் எதிராக நிறுத்துவதை இலக்காக்கிச் செயற்பட்டனர். இவற்றை எதிர்கொள்வதை முன்னுரிமையாக்கிச் செயற்பட மதச் சார்பற்ற கட்சிகள் எதுவும் தயாராக இல்லை. மாறாக அவர்களைக் கண்டு அஞ்சவே செய்தனர்.

3. பா.ஜ.க் வெற்றியின் பின்னணியாக இருந்த மூன்றாவது தரப்பினர் கார்பொரேட்கள். எப்படி மோடி என்கிற ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியரை முன்னிறுத்தினாலும் பா.ஜ.க. தம் நலனை விட்டுக்கொடுக்காது என உயர் சாதியினர் முழுமையாக அதற்குப் பின் நின்றனரோ, அதேபோல மன்மோகன் சிங், சோனியா ஆட்சியைக் காட்டிலும் மோடி, பா.ஜ.க ஆட்சி இன்னும் உறுதியாகத் தாராளமயக் கொள்கையை நிறைவேற்றும் என கார்பொரேட்கள் உறுதியாக நம்பினர். எச்ச... விவசாய நிலங்களை அபகரித்தல் முதலான அம்சங்களிலும் உறுதியான நடவடிக்கை எடுக்க இயலவில்லை எனக் கருதினர்.

ஜனநாயக சக்திகளைக் காட்டிலும் கார்பொரேட்கள் வலதுசாரி பாசிச சக்திகளிடமே நெருக்கமாக இருப்பர். சென்ற நூற்றாண்டின் தொடக்க காலத்திய செவ்வியல் பாசிசத்தின் போது ஹிட்லர் மற்றும் முசோலினியின் கட்சிகளும் பெரு முதலாளிகளும் ஒன்றாக இருந்தனர். இந்தியாவில் பெரு முதலாளிகள் இது நாள் வரை காங்கிரஸுடன்தான் இருந்தனர். இன்று கார்பொரேட்களும் இந்துத்துவ சக்திகளும் இணைந்துள்ளனர். ஆக பாசிசம் இன்று முழுமை அடைந்துள்ளது.


இந்த எதார்த்தங்களைக் கணக்கில் எடுக்காதவரை பாசிச சக்திகளிடமிருந்து நாட்டை விடுவிக்க இயலாது. இன்றும் கூட 31 சதவீத வாக்குகளைத்தான் பா.ஜ.க பெற முடிந்துள்ளது. நமது தேர்தல்முறை அவர்களுக்கு இந்த அமோக வெற்றியைச் சாதகமாக்கியுள்ளது. 15 சதவீத சிறுபான்மையினர் அவர்களிடமிருந்து முற்றாக விலகி நிற்பது மட்டுமன்றி இந்த வெற்றியைக் கண்டு சற்றே பதற்றத்திலும் உள்ளனர். பா.ஜ.க.வினருக்கு வாக்களித்தவர்கள் எல்லோருமே இந்துத்துவவாதிகள் அல்ல என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

குஜராத் 2002 ஐ அவர்கள் திருப்பிச் செய்வார்கள்... அவர்களிடமிருந்து விலக நேர்வர். மாறாக இந்துத்துவ சக்திகள் தொலைநோக்குடன் செயற்பட்டு இந்த நாட்டின் எதிர்காலத் தலைமுறை, இராணுவம், அரசு எந்திரம் ஆகியவற்றைக் காவிமயமாக்குவதை நுணுக்கமாகவும் வேகமாகவும் செய்வர். இவர்களை ஆதரிக்கும் புதிய சக்திகள் இவற்றைக் கண்டு கொள்ளவும் மாட்டார்கள்.

இதைப் புரிந்துகொண்டு மதச் சார்பற்ற சக்திகள் அடுத்து வரும் நாட்களில் செயல்படவேண்டும். இந்த நாட்டின் முதன்மை எதிரி மதவாத சக்திகள்தான் எனப் புரிந்து கொண்டு மதச் சார்பற்ற சக்திகள் ஓரணியில் திரள்வதும், மதச்சார்பு நடவடிக்கைகளையும் ஊடுருவல்களையும் கவனமாகவும் உறுதியாகவும் எதிர்கொள்வதும் இன்றைய உடனடித் தேவை. இன்னொரு பக்கம் பழைய மொழி, பழைய அணுகல் முறை, பழைய வடிவம் ஆகியவற்றையும் இவர்கள் உதறத் தயாராக வேண்டும்.

இல்லையேல் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல அவர்களுக்கும் எதிர்காலமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சார்க் உச்சி மகாநாடு போன்று மோடியின் பதவிப்பிரமாணம்

ஆசியாவில் நாட்டுத் தலைவர் ஒருவரின் பதவியேற்பு முதற்தடவையாக முழு உலகினதும் கவனத்தை ஈர்த்திருந்தது. இந்தியாவின் 15ஆவது பிரதமராக நரேந்திர தாமோதர் தாஸ் மோடி பதவியேற்ற வைபவத்தின் காணொளிகள் உலகெங்கும் நேரடியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

உண்மையில் புதுடில்லியில் ஆட்சிமாற்றம் உலக நாடுகளின் தலைவர்களினாலும் உலகம் பூராவுமுள்ள மக்களாலும் மிகுந்த அக்கறையுடன் நோக்கப்பட்டது. அதிகாரமில்லாதவர் என்று கூறப்பட்ட வரும் மென்மையாகப் பேசும் சுபாவமுடையவருமான கலாநிதி மன்மோகன் சிங்கிடமிருந்து இந்தியாவின் ஆட்சி அண்மைக்காலம் வரை மேற்குலகினால் ஒதுக்கப்பட்ட ஒரு பாரதீய ஜனதா தலைவரின் கைக்கு மாறியிருக்கிறது.


குறுகியதொரு காலகட்டத்திற்குள் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளுக்கும் பயணம் செய்து நெருக்கடிமிக்க பிரசாரங்களை முன்னெடுத்து தனது கட்சியையும் தேசிய ஜனநாயகக் கூட்டணியையும் மகத்தான வெற்றிக்கு வழிநடத்திச் சென்ற பிறகு நரேந்திரமோடி தனது பதவிப் பிரமாண வைபவத்தை முற்றிலும் வேறுபட்ட முறையில் நடத்துவதற்கு முன்வந்தார். வழமையாக இந்த வைபவங்கள் ராஷ்டிரபதிபவனில் (ஜனாதிபதி மாளிகை) உள்ள அசோகா மண்டபத்திலேயே நடைபெறும். ஆனால் மோடியும் அவரது குழுவினரும் கூடுதல் எண்ணிக்கையானோர் பங்கேற்பதற்கு வசதியாக பதவியேற்பு வைபவத்தைத் திறந்த வெளியில் வைத்துக்கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு அறிவித்தார்கள். எனவே, ராஷ்டிரபதிபவனின் முன்வளாகத்தில் வைபவத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.



எம்.பி.வித்தியாதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவுகளையும் வர்த்தகம் மற்றும் வாணிபத்தையும் மேம்படுத்துவதற்கான பயணத்தில் பிரதமர் மோடியுடன் இணைந்துகொள்வதில் சார்க் தலைவர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை டில்லி விஜயத்தின் போதான அவர்கள் மனநிலை வெளிக்காட்டுகிறது

பழைய பாரம்பரியங்களுக்குக் கட்டுப்படாமல் புதியபாணியில் சிந்திப்பவர் என்று அறியப்பட்ட மோடி தனது பதவியேற்பு வைபவத்திற்கு பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உறுப்பு நாடுகள் சகலவற்றினதும் தலைவர்களை அழைக்க விரும்புவதாக தனது அணியினருக்குத் தெரிவித்தார். பயங்கரவாதத்தினாலும் வறுமையினாலும் நாடுகளுக்கிடையிலான போட்டி மனப்பான்மையினாலும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்ற ஒரு பிராந்தியத்திலே நாடொன்றின் தலைவரின் பதவியேற்பு வைபவத்துக்கு அயல்நாடுகளின் சகல தலைவர்களும் அழைக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும். மோடியின் விருப்பத்திற்கு இசைவாக சார்க் நாடுகளின் தலைவர்கள் சகலருக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டன. சார்க் அமைப்பில் அங்கம் வகிக்காவிட்டாலும் பாரம்பரியமாக இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டதும் இந்து சமுத்திரத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்தது மான மொரீசியஸ் நாட்டின் ஜனாதிபதியையும் மோடி அழைத்திருந்தார்.

இந்தத் தலைவர்களையெல்லாம் அழைப்பதற்கு மேற்கொண்ட தீர்மானத்தின் மூலமாக அயல்நாடுகளுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் மோடி கொண்டிருக்கும் நோக்கும் நாட்டமும் தெளிவாகத் தெரிகிறது. சகல அயல் நாடுகளுடனும் அமைதியான சினேகபூர்வ உறவுகளைக் கொண்டிருக்கவே மோடியின் அரசாங்கம் விரும்புகிறது. பொருளாதார வளர்ச்சியில் மிகையான அக்கறைகொண்ட மோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சகலவிதமான தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பயன்படுத்த விரும்புகிறார். வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்க பொருளாதார வளர்ச்சி முக்கியமானது என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதை அவர் அறிவார். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு வேலை வாய்ப்புகள் முக்கியமானவை. எந்த விதமான பீதியுமின்றி நாட்டில் முதலீடு செய்வதற்கு தொழிலதிபர்கள் உற்சாகப்படுத்தப்படக் கூடியதான சமநிலையான பொருளாதாரக் கொள்கையின் மூலமாக மாத்திரமே வளர்ச்சியைச் சாதிக்க முடியும்.

பிரதமராகுவதற்கு முன்னதாக மோடி ஒரு தசாப்தத்துக்கும் கூடுதலான காலமாக குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். அவரின் ஆட்சியின் கீழ் குஜராத் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. அதை அவரின் எதிராளிகள் கூட பாராட்டத் தவறுவதில்லை. டாட்டா நிறுவனத்தினர் தங்களது நனோ கார் உற்பத்தி தொழிற்சாலையை குழப்பநிலைக்குள்ளாகியிருந்த மேற்கு வங்காளத்திலிருந்து குஜராத்திற்கு மாற்றினார்கள். தொழிலாளர்களின் தகராறினால் நெருக்கடிக்குள்ளாகியிருந்த மாருதி சுசுகி நிறுவனமும் கூட குஜராத்தில் ஒரு உற்பத்தி நிலையமொன்றை ஆரம்பித்தது. இவையெல்லாம் கைத்தொழில் துறையைப் பொறுத்தவரை மோடியின் ஆளுகைப் பாணியின் ஆற்றலுக்கு உதாரணங்களாகும். கைத்தொழில்துறையினருக்கும் வர்த்தகப் பிரமுகர்களுக்கும் சகலவிதமான ஆதரவையும் மோடி வழங்கினார்.

**மோடிக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் உள்ளடக்கத்தைவிட அவர்களுக்கு இடையிலான சுமுக உறவு பிரத்தியேகமாக கவனத்தைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. நல்ல நேசத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இரு தலைவர்களும் இப்போது எந்த நேரத்திலும் எந்த விவகாரத்தையும் தீர்ப்பதற்கு பேசிக்கொள்ள முடியும்**

அத்தகையதொரு ஆற்றலுக்கு செயற்பாட்டுப் பின்னணியைக் கொண்ட மோடியின் கீழ் இந்தியா செல்வத்தைப் பெருக்கும் ஒரு மையமாக மாறக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சார்க் தலைவர்களிடமிருந்து கிடைக்கக் கூடிய ஆதரவின் விளைவாக செல்வத்தைப் பெருக்கும் செயன்முறைகள் ஏனைய அயல்நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்பட முடியும். இந்த நாடுகள் பெருமளவு இயற்கை வளங்களைக் கொண்டவை. இந்திய வர்த்தகத்துறையினர் அயல் நாடுகளிலும் முதலீடுகளைச் செய்வதில் நாட்டம் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கொள்கை முடக்கம் மற்றும் பலவீனமான ஒரு தலைமைத்துவம் காரணமாக மன்மோகன்சிங் அரசாங்கம் முக்கியமான பல தீர்மானங்களை எடுக்கத் தவறியது. ஆனால் மோடியைப் பொறுத்தவரை, விரைவான தீர்மானங்களை எடுப்பதில் சமர்த்தர். உறவுகளையும் வர்த்தகம் மற்றும் வாணிபத்தையும் மேம்படுத்துவதற்கான பயணத்தில் இணைந்து கொள்வதில் சார்க் தலைவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை டில்லி விஜயத்தின் போதான அவர்களின் மனநிலை வெளிக்காட்டுகிறது.

சார்க் தலைவர்கள் மோடியின் தலைமைத்துவத்தினால் கவரப்பட்டிருகிறார்கள் என்பதை அவர்களிடமிருந்து அவருக்கு கிடைக்கும் ஆதரவின் மூலம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. தலைவர்களின் செய்திகளின் மூலம் இது தெளிவாகிறது. பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்ட இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்னதாகவே, 'இன்று நாம் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்திலும் தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளிலும் ஐக்கியப்பட்டு நிற்கிறோம். சமகாலத்துக்குப் பொருத்தமான சகல துறைகளையும் தழுவிய பன்முக உறவு முறையை எமது இருநாடுகளும் அனுபவிக்கின்றன. இலங்கை யெங்கும் இடம்பெறுகின்ற அபிவிருத்தி மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளில் ஒப்புயர்வற்ற ஒரு பங்காளராக இந்தியா வெளிக்கிளம்பியிருக்கிறது' என்று குறிப்பிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

மே 26 பதவியேற்பு வைபவத்தை மோடி தனது சிந்தனைகளை வெளிக்காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக மாற்றிவிட்டார். பிரதமர் பதவியில் முதல் நாளே தனிப்பட்ட முறையில் அயல்நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையதொரு தொடர்பாடல் பற்றி வேறு எந்தப் பிரதமரோ அல்லது தலைவரோ முன்னர் சிந்தித்திருக்க வில்லை. சுமார் 4000 முக்கியஸ்தர் கள் முன்னிலையில் மோடியும் 45 உறுப்பினர்களைக் கொண்ட அவரது அமைச்சரவையும் பதவியேற்றுக் கொண்ட உடனடியாக சார்க் தலைவர் கள் அவரை வாழ்த்தினார்கள். இத் தலைவர்களுடன் சேர்ந்து மோடி எடுத்துக்கொண்ட புகைப்படம் வெற் றிகரமான சார்க் உச்சிமகாநாட்டுப் படத்தை ஒத்ததாக இருந்தது.

பதவியேற்ற தினத்தன்று ராஷ்டிரப திபவனில் அளிக்கப்பட்ட இரவு விருந்துபசாரம் சார்க் தலைவர்களை மோடியும் அவரது சிரேஷ்ட அமைச் சர்களும் சந்தித்துப் பேசுவதற்கான இன்னொரு சந்தர்ப்பமாக அமைந் தது. இங்கும் மோடியும் ராஜபக்ஷ வும் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டதுடன், ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான உறுதிப்பாட் டையும் வெளிக்காட்டிக் கொண்டனர். மோடியின் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜும் உள்துறை அமைச் சர் ராஜ்நாத் சிங்கும் அப்போது உட னிருந்தனர்.

மே 27 காலையே மோடி உத்தி யோகபூர்வமாக பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பிறகு அவர் ஆப்கானிஸ்தான் ஜனாதி பதி ஹமீட் கர்சாய், நேபாளப் பிரத மர் சுஷில் கொய்ராலா, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் தலைவர்களைச் சந் தித்தார். இவர்களுடனான சந்திப்புக ளுக்குப் பிறகு பதவி விலகிய பிரதமர் மன்மோகன் சிங்கை மோடி சந்தித் தார்.

ராஜபக்ஷவை அழைத்தமைக்காக மோடி கடுமையான கண்டனங்களு க்கு முகங்கொடுக்க வேண்டியிருந் தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, அந்த அழைப்பை தமிழ் நாட்டைச் சேர்ந்த அனேகமாக சகல கட்சிகளும் எதிர்த்தன. இதில் மோடி யின் நேச அணியான வைகோ போன் றவர்களும் முதலமைச்சர் ஜெயல லிதா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி போன்றவர்களும் அடங்குவர். அரசி யலை நாடக பாணியாக்குவதில் வல் லவரான வைகோ புதுடில்லியில் மறி யல் போராட்டமொன்றையும் கூட ஏற்பாடு செய்திருந்தார். அதற்காக அவரும் சுமார் நூறு ஆதரவாளர்க ளும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர். ஆனால், இந்தச் சம்பவங் கள் எல்லாம் அயல் நாடுகளின் தலை வர்களுடனான மோடியின் சந்திப்புக ளின் பரபரப்பிற்குள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன என்று தான் கூற வேண்டும்.

இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் தங் களது கடந்த கால செயற்பாடுகள் எல் லாம் மோடியிடம் எடுபடாது என் பதை தமிழ் நாட்டுத் தலைவர்கள் இப்போது புரிந்துகொண்டிருப்பார் கள். சரியானவை என்று தான் நினைக் கின்ற தீர்மானங்களைத் தயக்கமின்றி எடுக்கின்ற மோடியின் சுபாவம் ஒரு புறமிருக்க, அவரது கட்சிக்கு பாராளு மன்றத்தின் லோக்சபாவில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருப்பதால், எந்தவொரு பிராந்தியக் கட்சியையும் நம்பியிருக்க வேண்டிய தேவையில் லாமற் போய்விட்டது. எனவே, மத் திய அரசாங்கம் ஜெயலலிதா மற்றும் மேற்குவங்காளத்தின் மம்தா பானர்ஜி போன்றவர்களின் நெருக்குதல்களு க்கு அடிபணியாமல் தகுதியின் அடிப் படையில் அதன் தீர்மானங்களை இப் போது எடுக்கக் கூடியதாக இருக்கும்.

மே 27 மோடியும் ராஜபக்ஷவும் மிகவும் சுமுகமான முறையில் அரை மணி நேரச் சந்திப்பை நடத்தினார் கள். இரு தலைவர்களும் பல்வேறு விவகாரங்கள் குறித்து, முக்கியமாக தமிழர் பிரச்சினை குறித்து வெளிப்ப டையாக மனம்விட்டுப் பேசியதாக அச்சந்திப்புக்கு நெருக்கமான வட்டா ரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது. போர் முடிவுக்கு வந்துவிட் டபோதிலும் தமிழர்கள் தொடர்ந்து தொல்லைகளுக்குள்ளாக்கப்படுவது குறித்து இந்தியா விசனமடைவதாக மோடி கூறிய அதேவேளை, தமிழர்க ளின் நிலைமையை மேம்படுத்துவ தற்கு தனது அரசாங்கம் அதனாலி யன்றவரை முயற்சித்துக் கொண்டிரு க்கிறது என்று ராஜபக்ஷ கூறினார். ஆனால், தமிழர்களின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் மாத்திரம்தான் நிலைவரங்களில் மேம்பாட்டைக் கொண்டுவர முடியும் என்று சுட்டிக் காட்ட ராஜபக்ஷ தவறவில்லை. தனது அரசாங்கத்துடன் ஒத்துழைப்ப தற்கு தமிழ்க் கட்சிகளுக்கு உற்சாகம் அளிப்பதற்கு இந்தியாவின் புதிய பிரதமர் அவரது நல்லெண்ணத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். வடமாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரனையும் தன்னு டன் டில்லிக்கு அழைத்துவருவதில் அக்கறை கொண்டிருந்ததாகவும் ஆனால், அவர் தனது அழைப்பை நிராகரித்துவிட்டார் என்றும் ராஜ பக்ஷ மோடியிடம் கூறியதாகத் தெரி யவருகிறது. இலங்கையுடனான உறவுகளை இந்தியா பெரிதாக மதிப் பதாகக் குறிப்பிட்ட இந்திய வெளியுற வுச் செயலாளர் சுஜாதா சிங் இலங் கைத் தமிழர்கள் சமத்துவமான முறையில் நீதியாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்திய மீனவர்களின் பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டது.இரு தலை வர்களும் ஆராய்ந்த ஏனைய் விவகா ரங்களில் பொருளாதார மற்றும் வர்த் தக ஒத்துழைப்பு முக்கியமானது.

அயல் நாடுகளின் சுயாதிபத்தி யத்தை இந்தியா பூரணமாக மதிக்க வேண்டும் என்ற கருத்தையே மோடி கொண்டிருக்கிறார். பிரிவினை நோக் கம் கொண்ட கட்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கிறது என்ற எண்ணம் ஏற் படுவதற்கு இடமளிக்கக்கூடாது என் பதிலும் மோடி அக்கறையாக இருக்கி றார். விக்னேஸ்வரனை நேரடியாக டில்லிக்கு அழைக்க வேண்டுமென்று தமிழ்த் தலைவர்களினால் யோசனை தெரிவிக்கப்பட்ட போதிலும் மோடி அதை நிராகரித்துவிட்டார்.

மோடிக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் உள்ளடக்கத்தைவிட அவர்களுக்கி டையிலான சுமுக உறவு பிரத்தியேக மாக கவனத்தைத் தூண்டுவதாக அமைந்திருந்தது எனலாம். நல்ல நேச த்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தலைவர்களும் இப்போது எந்த நேரத்திலும் எந்த விவகாரத்தையும் தீர்ப்பதற்கு பேசிக்கொள்ள முடியும். இலங்கைக்கு விஜயம் செய்து அங்கு தனது அரசாங்கத்தினால் மேற்கொள் எப்படுகின்ற நடவடிக்கைகளை நேரிற் பார்வையிடுமாறு மோடிக்கு ராஜபக்ஷ அழைப்பு விடுத்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

பதவிப் பிரமாணம் செய்த தருணம் முதலிருந்து மோடி மிகுந்த நம்பிக்கை யுணர்வு கொண்டவராகக் காணப்படு கிறார். அவரது வாழ்வில் அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக இருந்தபோதிலும் கூட அவரது முகத் தில் எந்தவிதமான பதற்ற அறிகுறி யையும் காணவில்லை. சந்திப்புகளின் போது அவர் தனது தனித்துவப் பண் பைப் பேணிக்கொண்டார். ராஜபக்ஷ வும்கூட மிகவும் நம்பிக்கையுணர்வு டனும் சுமுகமாகவும் காணப்பட்டார்.

ஆனால் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுடனான சந்திப்பின் போது உணர்வு நிலை அத்தகையதாக இருக்கவில்லை. மோடியைச் சந்திப்ப தற்கு ஷெரீப் வந்திறங்கிய போது பல உலகத் தலைவர்களுடன் தொடர்பா டல்களை மேற்கொண்ட அனுபவம் வாய்ந்த ஒரு அரசியல் தலைவராக அவர் இருந்த போதிலும் கூட சற்றுப் பதற்றப்பட்டவர் போன்றே காணப் பட்டார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தத் தருணத்தை ஊடகங் கள் பதிவு செய்துகொண்ட போது மோடி மிகவும் இயல்பு அமைதியு டன் நம்பிக்கையுணர்வுடனே இருந் தார். ஷெரீப் ஏதோ அசௌகரியப் பட்ட உணர்வுடன் இருப்பதாகத் தோன்றிய அதேவேளை, மோடியோ சரளமாகச் சிரித்துப் பகிடிவிட்டுக் கொண்டிருந்தார். அது உலகம் பூரா கவும் துருவித்துருவி ஆய்வுக்குட் படுத்தப்படப் போகின்ற ஒரு பெரிய தருணம் என்பதை இரு தலைவர்க ளுமே அறிவார்கள். இராணுவ உயர் பீடத்திடமிருந்து கிளம்பிய எதிர்ப் பைச் சமாளித்துக் கொண்டுதான் நவாஸ் ஷெரீப் டில்லிக்கு வந்தார் என் பது உலகறிந்த விடயம். முஸ்லிமக ளுக்கு விரோதமானவர் என்ற படிமத் தைக்கொண்ட புதிய இந்தியப்

தேர்தல் பிரசார கூட்டங்களில் பாகிஸ் தானுக்கு எதிராக கடு மையான தொனியில் பேசிய மோடி தனது பதவியேற்பு வைபவத் திற்கு பிரதமர் நவாஸ் ஷெரீப்பை டில்லிக்கு அழைத்து எல்லோ ரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கிவிட்டார். முன்னென்றும் இல் லாத வகையில் இந்த நல்லெண்ண சமிக்ஞை பலனை தந்திருக்கிறது போல் தெரிகிறது



பிரதமரை பாகிஸ்தான் பிரதமர் அவச ரப்பட்டு சந்திப்பதை இராணுவ உயர் பீடம் பெரிதாக விரும்பவில்லை.

எவ்வாறெனினும் பச்சைக்கொடி காட்டப்பட்டதும் விமானத்தில் ஏறுவ தற்கு முன்னதாகவே ஷெரீப் பிராந்தி யத்தில் அமைதியையும் அபிவிரு த்தியையும் ஏற்படுத்துவதற்காக இந்தி யாவும் பாகிஸ்தானும் இணைந்து செயற்பட வேண்டும் என்று பிரக டனம் செய்தார். மோடி தலைமையி லான இந்தியாவின் புதிய அரசாங்கத் துடன் எளிதாகப் பணியாற்ற தன்னால் முடியும் என்று டில்லி வந்திறங்கி யதும் அவர் சொன்னார். வர்த்த கத்தை மேம்படுத்துவதில் தங்களுக்கு இருக்கின்ற தனிப்பட்ட அக்கறை இரு தரப்பு உறவுகளில் புதியதொரு பக்கத் தைப் புரட்டுவதற்கு உதவ முடியும் என்றும் ஷெரீப் கூறினார்.

'இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் புதியதொரு பக்கத்தைப் புரட்டவே நான் இங்கு வந்துள்ளேன். புதிய தொரு அத்தியாயத்தைத் திறப்பதற்கு எமக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தருணமொன்று கிடைத்திருக் கிறது. மோடியின் தலைமையிலான புதிய அரசாங்கம் ஒரு வலிமையான ஆணையைக் கொண்டிருக்கிறது. 1999ஆம் ஆண்டு நானும் அடல் பிஹாரி வாஜ்பாயும் எந்த இடத்தில் விட்டோமோ அந்த இடத்திலிருந்து உறவுகளைத் தொடருவதற்கு ஆவல் கொண்டிருக்கிறேன்' என்று ஷெரீப் கூறினார்.

1999ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்போதைய இந்தியப் பிரத மர் வாஜ்பாய் வாகா பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை யூடாக தரைமார்க்கமாகப் பயணம் செய்து ஷெரீபுடன் உச்சி மகாநாட்டை நடத்தினார். அந்தப் பேச்சுகளைய டுத்து இரு நாடுகளுக்கும் இடையே நிலையான அமைதி ஏற்படுமென்ற எதிர்பார்ப்புகள் தோன்றினாலும் கார் கில் பகுதியில் மூண்ட போர் காரண மாக உறவுகள் மீண்டும் படுமோச மாக சீர்குலைந்து அந்த எதிர்பார்ப்பு கள் சிதறடிக்கப்பட்டன.

இருதரப்பிலும் இருந்து தலைவர் கள் அவ்வப்போது பகைமையைத் தணிப்பதற்கான ஒரு வழியாக வர்த்த கத்தையும் வாணிபத்தையும் மேம் படுத்துவதற்கான செயற்பாடுகளை இனங்கண்டனர். குறிப்பாக பாகிஸ்தா னின் சக்தி பற்றாக்குறை இந்தியத் தொழில் துறையினருக்கான இலாப மிக்க வாய்ப்பாக நோக்கப்பட்டு வந் திருக்கிறது. பாகிஸ்தானுக்கு விற் பனை செய்வதற்காக மின்சக்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செய்வதற்கான யோசனையை அடானி குழுமம் போன்ற இந்தியக் கம்பனிகள் முன்வைத்தன. ஆனால் அத்தகைய யோசனைகள் நடைமுறையில் முன்னெடுக்கப்படவில்லை. மோடியுடனான சந்திப்பின் போது ஷெரீப் மீண்டும் இந்திய தொழில் துறையினருக்கான அத்தகைய வாய்ப்புகள் குறித்து நினைவு படுத்தினார்.

ஷெரீபுடன் தனியாக நடத்திய சந்திப்பின் போது மோடி சிக்கலான பல இரு தரப்புப் பிரச்சினைகளை குறிப்பாக பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை கிளப்பினார். 2008 நவம்பரில் மும்பையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தானில் நடைபெற்று வரும் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படுவதில் காணப்படும் தாமதம் குறித்தும் எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் செய்கின்ற போர்நிறுத்த மீறல்கள் குறித்தும் மோடி பேசினார். பகைமையைத் தணிப்பதற்கு வர்த்தகத்தையும் முதலீட்டையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம், சக்தி துறையில் ஒத்துழைப்பு ஆகியவை குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடினார்கள்.

சந்திப்பு மிகவும் சிநேகபூர்வமானதும் சுமுகமானதுமான சூழ்நிலையில் இடம்பெற்றதாக வெளியுறவுச் செயலாளர் சுஜாதா சிங் தெரிவித்தார். வெளிப்படையாகச் சொல்வதானால், ஷெரீப் கூட மிகவும் திறந்த மனதுடன் தான் பேசினார். இரு தலைவர்களும் நல்ல நேசத்தை வளர்த்துக் கொண்டார்கள். தானும் வாஜ்பாயும் கைச்சாத்திட்ட லாகூர் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு உறவுகளை வளர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டார். பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு ஷெரீப் விடுத்த அழைப்பை மோடி உடனடியாகவே ஏற்றுக்கொண்டார்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக கடுமையான தொனியில் பேசிய மோடி தனது பதவியேற்பு வைபவத்திற்கு ஷெரீபை டில்லிக்கு அழைத்து எல்லோரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கி விட்டார். முன்னென்றுமில்லாத வகையிலான இந்த நல்லெண்ணச் சமிக்ஞை பயனைத் தந்திருக்கிறது போலத் தெரிகிறது. பிரதமர் பதவியில் அமர்ந்த முதல் நாளே மோடி பேச்சுகளை நடத்திய போது காணப்பட்ட மனநிலையையும் அந்தப் பேச்சுகளின் விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, அவர் சரித்திரத்தின் பக்கங்களை திருப்பி எழுதப்போவது நிச்சயம் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. தானும் மோடியும் பக்கங்களைத் திருப்பி எழுதுவதில் நம்பிக்கை கொண்டு செயற்படுவதாக ஷெரீப் பகிரங்கமாகக் கூறவும் தவறவில்லை. மோடியின் முதல் நடவடிக்கை தலைவர்கள் மத்தியில் அரிதான ஒரு தோழமை உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

பதவியேற்பின் போது ஷெரீபைச் சந்தித்த சில மணித்தியாலங்களில் மோடி பின்வருமாறு டுவிட்டரில் பதிவு செய்தார். மாலையில் பிரதமர் நவாஸ் ஷெரீபுடனான எனது சந்திப்பின் போது அவர் என்னுடன் மிகவும் உணர்ச்சிபூர்வமான விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். 'தான் இஸ்லாமாபாத்தில் தங்கியிருப்பதாகவும் தாயாரைப் பார்ப்பதற்கு வாரத்தில் ஒரு தடவையே சென்று வருவதாகவும் நவாஸ் ஷெரீப்ஜி கூறினார். காணொளிகள் நவாஸ் ஷெரீபினதும் அவரது தாயாரினதும் மனங்களைக் கவர்ந்து விட்டன. காணொளிகளைப் பார்த்ததும் அவரது தாயார் உணர்ச்சி வசப்பட்டுப் போனார்.'

சார்க் தலைவர்களில் பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா மாத்திரம் தான் மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு வரவில்லை. அவர் ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். மோடிக்கு அனுப்பிய செய்தியில் ஹசீனா, அவரது ஆற்றலும் சாதுரியமும் மிகுந்த தலைமைத்துவத்தைப் பாராட்டியதுடன் பங்களாதேஷுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பும் விடுத்தார். தனது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் இந்தியா வகித்த பாத்திரத்தை ஹசீனா நினைவு கூரவும் தவறவில்லை.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய், பூட்டான் தலைவர் ஷெறிங் ரொப்கே, நேபாளப் பிரதமர் சுஷில் கொய்ராலா, மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் அப்துல் கையூம் மற்றும் மொரீசியஸ் பிரதமர் நவின் ராம் கூலம் ஆகியோருடனும் மோடி தனித்தனியான சந்திப்புகளை நடத்தினார்.

மோடி ஒரு நீண்ட பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். உண்மையில் ஒரு உற்சாகமான ஆரம்பம் என்று தான் சொல்லவேண்டும். அவர் புதிய சாதனைகளைப் படைப்பார் என்பதில் சந்தேகமில்லை. அதில் முக்கியமானது உலகில் அதிக சனத்தொகை கொண்ட பிராந்தியங்களில் ஒன்றான தெற்காசியாவின் வரலாற்றை மாற்றியமைக்கும் சாதனையாகும். பிராந்தியத்தை மேம்படுத்துவதற்கான பயணத்தில் மோடியுடன் இணைந்து கொள்வதில் சகல சார்க் தலைவர்களும் அக்கறை காட்டுகிறார்கள். இது நல்லதொரு அறிகுறியாகும். உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. சீனா பார்த்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா பார்த்துக்கொண்டிருக்கிறது. ரஷ்யாவும் ஐரோப்பிய ஒன்றியமும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கு இப்போது வலிமையான ஒரு பிரதமர் கிடைத்திருக்கிறார் என்பது இந்த நாடுகள் சகலதிற்குமே தெரியும். எந்தத் தலைவருமே இந்தியப் பிரதமரை அலட்சியம் செய்ய விரும்பவில்லை. அதன் காரணத்தினால் தான், அடுத்த பிரதமராக மோடி வரப்போகிறார் என்பதை புரிந்துகொண்ட ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் அவருக்கு எதிரான அவற்றின் நிலைப்பாட்டை தேர்தலுக்கு முன்னதாகவே மாற்றிக்கொண்டன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தமிழக அரசியலில் தொடங்கும் புதிய அத்தியாயங்கள்

திராவிட முன்னேற்றக்கழகம் படுதோல்வியைச் சந்தித்ததற்குப் பல காரணங்கள். ஆனால் நம்பியிருந்த சிறுபான்மையின வாக்காளர்கள் கூட கைவிட்டுவிட்டார்கள் என்பது அக்கட்சியை மிரள வைக்கும் மிகப்பெரும் ஆபத்து

தமிழகத்தின் தயவு இல்லாமல் 25 வருடங்களுக்குப் பிறகு இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அனைத்து திராவிடக் கட்சிகளுக்குமே டில்லி அதிகாரம் தடுக்கி விழுந்துவிட்டது. 24 வருடங்களுக்குப் பிறகு தி.மு.க.விற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே இல்லை என்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கட்சி துவங்கிய 21 ஆவது வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ள ம.தி.மு.க.விற்கும் நாடாளுமன்றத்தில் எம்.பி. இல்லை என்ற நிலைமை. வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றும், அ.தி.மு.க.வின் 37 எம்.பி.க்களை வைத்து மத்தியில் அதிகாரம் செலுத்த முடியாத நிலைமை அ.தி.மு.க.விற்கு ஏற்பட்டிருக்கிறது.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் நரேந்திரமோடிக்கு வித்தியாசமான அதிர்ஷ்டம் இந்த முறை கிடைத்துவிட்டது. தனிப்பெரும்பான்மைக்குத் தேவையான 272 எம்.பிக்களை பா.ஜ.க.வே பெற்றுவிட்டது. குறிப்பாக தமிழக எம்.பி.க்களின் ஆதரவு தேவையில்லை என்ற நிலை


## சென்னை மெயில்





முத்தையா
காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதன் முறையாக மத்தியில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வந்துவிட்டது. இந்தத் தேர்தலில் முதல்முறையாக தமிழகம் ஐந்து முனைப் போட்டியைச் சந்தித்தது. அதில் இடது சாரிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டார்கள். காங்கிரஸ் கட்சியோ வங்கக் கடலில் கரைந்துவிட்டது. ஆம் ஆத்மியின் அடையாளமே தமிழகத் தொகுதிகளில் இல்லாமல் போய்விட்டது. 'ஆடிக்காற்றில் அம்மிக்கல்லே பறக்கும்' என்பது போல் அ.தி.மு.க.விற்கு ஆதரவாக வீசிய சூறாவளிக் காற்றில் தி.மு.க.வே சிக்கி மூச்சு முட்டி நிற்கிறது. அ.தி.மு.க.வின் வெற்றியைப் பார்த்து விழியை அகல விரித்தவர்கள் இன்னும் மூட முடியாமல் திகைத்து நிற்கிறார்கள்.



அதிசயத் தேர்தல் நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழகத்தில் அரங்கேறியது எப்படி? தி.மு.க. 35 தொகுதிகளில் போட்டியிட்டது. அ.தி.மு.க. தனியாக 39 தொகுதிகளில் களம் கண்டது. மெகா கூட்டணி அமைத்து பா.ஜ.க. தலைமையில் பா.ம.க., தே.மு.தி.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் 39 தொகுதிகளிலும் போட்டியில் குதித்தன. இந்தப் பந்தயத்தில் அ.தி.மு.க. தவிர, புதுக்கணக்கைத் துவங்கியது இரு கட்சிகள்தான். அது முதலில் பா.ஜ.க. இந்தியாவின் தென்கோடித் தொகுதியான கன்னியாகுமரியில் வெற்றி பெற்றால் அக்கட்சியின் மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன். மத ரீதியான மார்க்கத்திற்கு வழிகாட்டும் தொகுதி இந்த வெற்றியைக் கொடுத்தது. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி இன்றி தனியாக நின்று பா.ஜ.க. இப்போதுதான் முதன் முதலாக இங்கு வெற்றி பெற்றுள்ளது. இன்னொருவர் அன்புமணி ராமதாஸ். காதல் கலவரம் மூண்ட தர்மபுரித் தொகுதியில் மோடி இமேஜ் ஆசியுடன் வெற்றி பெற்றிருக்கிறார். ஜாதி அடிப்படையிலான வாக்கு இங்கே விழுந்ததால், தமிழகம் முழுவதும் வெற்றி பெற்ற அ.தி.மு.க.வால் கூட தர்மபுரியில் பா.ம.க.வை தோற்கடிக்க முடியவில்லை. தமிழகத்தில் தி.மு.க. மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்ட தொகுதிகளில் தர்மபுரி மிக முக்கியமான தொகுதி என்றால் மிகவும் பொருந்தும்.



இதில் பாவப்பட்ட கட்சிகள் தி.மு.க.வும், தே.மு.தி.க.வும் தான். அதிலும் மோசமாக பாதிக்கப்பட்டது தி.மு.க.தான். இக்கட்சியைப் பொறுத்தவரை 35 தொகுதிகளில் சிறுபான்மையினர் மற்றும் தலித் வாக்குகளை நம்பி களத்தில் நின்றது. ஆனால் தேர்தல் முடிவுகள் அந்தக் கட்சியின் தலைமைக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது. தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட 46 சட்டமன்றத் தொகுதிகளில் ஒரேயொரு தொகுதியில்தான் தி.மு.க. வேட்பாளர்கள் அ.தி.மு.க. வேட்பாளரை மிஞ்சியிருக்கிறார். அது, 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கினை சந்தித்து வரும் ராஜா போட்டியிட்ட நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள கூடலூர் சட்டமன்றத் தொகுதி. தமிழகத்தில் 39 நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட சட்ட மன்றத் தொகுதிகள் மொத்தம் 234. அதில் நான்கு தொகுதிகளில் மட்டுமே தி.மு.க. வேட்பாளர்கள் அ.தி. மு.க. வேட்பாளர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட அதிக வாக்குகள் பெற முடிந்திருக்கிறது. அந்த நான்கில் தி.மு.க. தலைவர் போட்டியிட்டு கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற திருவாரூர் சட்டமன்றத் தொகுதியும் அடக்கம் என்பது சற்று ஆறுதல் தரும் இனிப்புச் செய்தி. தி.மு.க. கூட்டணிக் கட்சிகளில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் போட்டியிட்ட திருமாவளவன் மட்டும் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட காட்டுமன்னார்கோயில் சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார். ஆனால், திருமாவளவன் முன்பு போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆன திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் (பழைய மங்களூர் தொகுதி) கூட அவரது ஆதரவாளர்களின் வாக்குகளை தி.மு.க.விற்கு கொடுக்க முடியவில்லை. அங்கு அ.தி.மு.க.தான் அமோக வாக்குகளைப் பெற்றுள்ளது. அருந்ததியினருக்கு இட ஒதுக்கீடு கொடுத்தது தி.மு.க. ஆனால் அவர்கள் நிரம்பியிருக்கும் சேந்தமங்கலம் தொகுதியில் கூட தி.மு.க. அதிக வாக்குகளைப் பெறவில்லை. இப்படி தமிழகம் முழுவதும் பதிவான வாக்குகளில் தி.மு.க. 23.6 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருக்கிறது. இது ஏறக்குறைய ராஜீவ் தமிழக மண்ணில் கொலை செய்யப்பட்ட போது அடைந்த தோல்வியின் போது தி.மு.க. பெற்ற வாக்குக்கு இணையானது. தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகள் என்று பார்த்தால், 26.8 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இது அந்த அணி எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட 36 சதவீத வாக்குகளுக்குக் குறைவானது!

படுதோல்வியை தி.மு.க. சந்திக்க வேண்டிய காரணங்கள் பல உள்ளன. அதை இக்கட்டுரைக்குள் பட்டியலிட்டு அடைத்து விட முடியாது. ஆனால் தி.மு.க. நம்பிய சிறுபான்மையின வாக்காளர்கள் கூட கைவிட்டு விட்டார்கள் என்பது அக்கட்சியை மிரள வைக்கும் மிகப்பெரும் ஆபத்து. சிறுபான்மையினர் வாக்குகள் பலமாக உள்ள வேலூர், கோவை, ராமநாதபுரம் ஆகிய மூன்று முக்கிய

# கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் தொடங்கிய மோடியின் பதவியேற்பு




இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்த எடுப்பிலேயே தலைவலியாக மாறியிருக்கிறது. இலங்கை அதிபர் ராஜபக்ஷவை பதவியேற்பு விழாவிற்கு அழைத்ததற்கு தமிழகமெங்கும் எதிர்ப்புகள் கிளம்பின. ஆங்காங்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சித் தலைவரான வைகோ கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார். மோடி பதவியேற்பு விழா நடைபெற்ற அதே டில்லியில் வைகோ நடத்திய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் பா.ஜ.க.வின் மத்தியில் வெறுப்பை ஆட்சியின் துவக்கத்திலேயே விதைத்துள்ளது. 'இலங்கைத் தமிழர் நலனில் மோடி அக்கறை காட்டுவார்' என்ற உத்தரவாதத்தை தமிழக மக்களுக்கு அளித்துத்தான் வைகோ மோடியுடன் கூட்டணி வைத்தார். அந்த உத்தரவாதத்திற்கு இப்படித் தேர்தல் முடிவுகளின் ஈரம் காய்வதற்கு முன்பு உபத்திரவம் வரும் என்று அவர் நினைக்கவில்லை.

ம.தி.மு.க.வின் நிலை இப்படியிருக்க, இந்த விடயத்தை அ.தி.மு.க.வும் சீரியஸாகவே எடுத்துக் கொண்டிருக்கிறது. பிரதமர் பதவிக்கு முதல்வர் ஜெயலலிதாவின் பெயரை அ.தி. மு.க.வினர் முன்னிறுத்தியதிலிருந்தே மோடிக்கும், அவருக்கும் உள்ள அரசியல் ரீதியான நட்பில் விரிசல் உருவாகத் தொடங்கியது. இருவரும் நேருக்கு நேர் வார்த்தைப் போர் நடத்திக் கொள்ளவில்லையே தவிர, விலகிச் செல்லுகிறார்கள் என்பதற்கான வியூகங்களை இருவருமே விளக்கிவிட்டார்கள். அ.தி.மு.க. வெற்றி பெற்றவுடன் பத்திரிகையாளரைச் சந்தித்த முதல்வர் ஜெயலலிதா, 'புதிய அரசுக்கு, புதிய பிரதமருக்கு வாழ்த்துக்கள்' என்று மட்டும் சொன்னார். மோடியின் பெயரைச் சொல்லி வாழ்த்தவில்லை. அடுத்து சில தினங்கள் கழித்துத்தான் முதல்வர் மோடிக்கு வாழ்த்துக் கடிதம் எழுதினார். ஆனால் மோடியோ நேரில் அவருக்கு தொலைபேசி வாயிலாக நன்றி தெரிவித்தார். பதவியேற்பு விழாவிற்கும் நேரில் வர அழைத்தார். பதவியேற்பு விழாவில் பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்கும் நிலையில், ராஜபக்ஷவிற்கு விடுக்கப்பட்ட அழைப்பு சர்ச்சையை புதுப்பித்துவிட்டது. மோடிக்கு எதிராக முதலிலேயே கண்டன அறிக்கை விட வேண்டிய நெருக்கடி முதல்வருக்கு எழுந்தது. அதுதான் வைகோவிற்கும் எழுந்திருக்கிறது.

இது தவிர முன்னாள் முதல்வர் கருணாநிதியும் இதைக் கண்டித்து அறிக்கை விட்டார். முதலில் அக்கட்சியின் அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், 'ராஜபக்ஷவை அழைத்ததை தவிர்த்திருக்கலாம்' என்று மட்டும் சொன்னார். ஆனால் முதல்வர் ஜெயலலிதாவின் கண்டனத்திற்குப் பிறகு கலைஞர் கருணாநிதி கண்டித்து அறிக்கை விட வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்புமணி ராமதாஸின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு டாக்டர் ராமதாஸ் தாமதமாக இதைக் கண்டித்தார். தேசிய முற்போக்குத் திராவிடக் கழக விஜயகாந்தோ இன்னும் தாமதமாகக் கண்டித்தார். அதுவும் 'நாம் மோடிக்கு ஆறுமாத காலம் டைம் கொடுப்போம். பிறகு இது பற்றிப் பேசுவோம்' என்ற ரீதியில் அறிக்கை விடுத்தார். ஆகவே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள ம.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க. என்று அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து விட்டன. அதேபோல் ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும், எதிர் வரிசையில் இருக்கும் தி.மு.க.வும் எதிர்ப்புகளை தெரிவித்து விட்டன. ஆனால் காங்கிரஸ் கட்சி மட்டும் வழக்கம் போல் இரட்டை வேடம். ஜி.கே. வாசன் எதிர்க்கிறார். மாநில காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஞானதேசிகன் ஆதரிக்கிறார்.

மாணவர் அமைப்புகளின் போராட்டமும் தலை தூக்கியிருந்தது. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு விரோதமான கட்சி காங்கிரஸ் என்ற பிரசாரத்திற்கு பா.ஜ.க.வின் நடவடிக்கை பதில் சொல்லி நின்றது. இரு கட்சிகளுக்குமே ஈழத்தமிழர் பிரச்சினையில் ஒரே மாதிரியான வெளியுறவுக் கொள்கைதான் என்பது பறைசாற்றப்பட்டுள்ளது. அதை பல்வேறு கட்டங்களில் பா.ஜ.க. அறிவித்திருந்தாலும், தமிழகக் கட்சிகள் காங்கிரஸுடன் கூட்டணி வைக்க முடியாது என்பதால், பா.ஜ.க. மீது நம்பிக்கை வைப்பது போல் கருத்து உருவாக்கம் செய்தார்கள். ஆனால் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மோடி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தன் நிலைப்பாட்டை விளக்கவில்லை. அதே போல் ம.தி.மு.க. தனி ஈழம் என்று தேர்தல் அறிக்கை வெளியிட்டவுடன் 'எங்கள் கொள்கை அது கிடையாது' என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான வெங்கய்யா நாயுடுவே அறிவித்தார். அதையும் வைகோ மறுக்கவில்லை. தேர்தல் கூட்டணிக்காக தங்கள் கொள்கைகளை ஈழத்தமிழர் பிரச்சினையில் இங்குள்ள கட்சிகள் பா.ஜ.க.வுடன் சமரசம் செய்து கொண்டன. அந்த சிக்கல் இப்போது அவர்களுக்குத் தலைவலியாக மாறியிருக்கிறது.

காங்கிரஸ் எதிர்ப்பின் உச்சத்தில் இருந்த தமிழக மக்கள் மோடி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள். சீட்டுக்கள் கிடைக்கவில்லை என்றாலும், மோடிக்கு கிடைத்த ஆதரவு தமிழகத்தில் காங்கிரஸுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதிபர் ராஜபக்ஷவை வரவேற்றது மோடிக்கு தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முதல் இமேஜ் சறுக்கல். தமிழக மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளது மீனவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் செய்தி என்றாலும், ஈழத்தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் போல் நடந்து கொள்ளாமல், அவர்களுக்கு நியாயம் கிடைக்க பாடுபடுவாரா என்பதை தமிழக மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், ஈழத்தமிழர் விடயத்தை வெறும் வாக்கு வங்கிக் கோணத்தில் பார்ப்பதை விட சமீப காலமாக அது தமிழக மக்களின் உணர்ச்சி பிரச்சினையாக மாறியிருக்கிறது என்பதுதான் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சம். ■

நாடாளுமன்றத் தொகுதிகளில் இரண்டு இடங்களில் தி.மு.க. மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது. ராமநாதபுரத்திலும் கூட டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் வாக்காளர்கள் தி.மு.க.விற்கு கை கொடுத்ததால் தப்பிப் பிழைத்து இரண்டாவது இடத்தில் அக்கட்சி இருக்க முடிந்திருக்கிறது. இல்லையென்றால் இங்கும் மூன்றாவது இடத்திற்குத் தி.மு.க. போயிருக்கும் அவமானம் அரங்கேறியிருக்கும். சிறுபான்மையினரின் வாக்குகளால் ஒரேயொரு சட்டமன்றத் தொகுதியில்தான் தி.மு.க. அ.தி.மு.க.வை அசைத்துப் பார்க்க முடிந்திருக்கிறது. அதுவும் கூட வெறும் 912 வாக்குகள்தான் அதிகம். திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பாளையம்கோட்டை சட்டமன்றத் தொகுதியில்தான் இது நடந்திருக்கிறது. இதைத் தவிர முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் போட்டியிட்ட மத்திய சென்னை தொகுதியில் கூட தி.மு.க.வை சிறுபான்மையின சமுதாயம் 'அம்போ' என்று கைவிட்டுவிட்டது.

தமிழகத்தில் மூன்று வாக்குவங்கிகள் பெரும்பான்மை ஜாதிகளின் கோட்டைக்குள் இருக்கிறது. வன்னியர், கவுண்டர், தேவர் என்று அதை வைத்துக் கொள்ளலாம். இவர்களில் கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் அ.தி.மு.க.வுடனும், சிறிய அளவில் பா.ஜ.க.வுடனும் நின்று விட்டார்கள். தேவரினத்தைச் சேர்ந்தவர்களும் பெரும்பான்மையாக அ.தி.மு.க.வுடனும், சிறுபான்மையாக தி.மு.க.வுடனும் நின்றார்கள். ஆனால் வட மாவட்டங்களில் உள்ள வன்னியர்களோ முழுக்க முழுக்க பா.ம.க. போட்டியிட்ட தொகுதிகளில் அக்கட்சியுடனும், மீதித் தொகுதிகளில் அ.தி.மு.க.வுடனும் நின்று விட்டார்கள். தி.மு.க.விடமிருந்து வன்னியர் சமுதாயத்தினர் திசைமாறிச் சென்றது திருமாவளவனுடன் இருந்த கூட்டணியால் வந்த ஆபத்து என்றே தி.மு.க.வினர் கருதுகிறார்கள். வன்னியர்கள் அதிகம் உள்ள பகுதியில் தாழ்த்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத் தலைவர் திருமாவளவனைப் போட்டியிட வைத்த தி.மு.க., அதே பகுதியில் செல்வாக்குமிக்கவராக வன்னியர் தலைவர் ஒருவருக்கு சீட் கொடுக்க முன்வரவில்லை. அந்தக் கோபம் வன்னியர்களின் வாக்களிப்பில் பிரதிபலித்தது. முதலில் டாக்டர் ராமதாஸின் பா.ம.க.விற்கு வாக்களித்தார்கள். அவர் போட்டியிடாத இடங்களில் அ.தி.மு.க.விற்கு வாக்களித்து விட்டு தி.மு.க.வை ஓரங்கட்டினார்கள். இதனால் மூன்று முக்கிய ஜாதிகள் மத்தியிலும் தி.மு.க.வின் வாக்குகள் 'நிலச்சரிவு' போல் அரங்கேறிவிட்டது. தி.மு.க. எப்போதுமே அசைக்கமுடியாத வாக்கு வங்கிக்குச் சொந்தமான கட்சி என்ற பெயருண்டு. அடாது மழை பெய்தாலும், அனல் பறக்கும் வெயில் அடித்தாலும் அந்த வாக்காளர்கள் தி.மு.க.விற்குத்தான் தேடி வாக்களிப்பார்கள் என்ற தத்துவம் பேசப்படும். அது இந்த முறை தவிடு பொடியானது.

இது தவிர, தி.மு.க.விற்குள் நடக்கும் 'கூத்துக்கள்' அக்கட்சியின் பப்ளிக் இமேஜை சுக்கு நூறாக்கியது. வேட்பாளர்கள் தேர்வில் ஆரம்பித்த இந்த கூத்துக்கள், இன்று வரை தொடருகிறது. தமிழகம் ஜாதி அடிப்படையில் வாக்களிக்கத் தொடங்கி தேர்தல்கள் பல உருண்டோடி விட்டன. கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளர்தான் தஞ்சைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக இருப்பார். அப்படித்தான் அங்கே போட்டியிட்ட பழனிமாணிக்கம் தொடர்ந்து ஜெயித்து வந்தார். இந்தமுறை அவருக்குப் பிடிவாதமாக சீட் கொடுக்க மறுத்தார்கள். அதன் விளைவு! பழனிமாணிக்கத்திற்கு சீட் கொடுக்காதது தங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று கள்ளர் சமுதாயத்தினர் ஆவேசம் அடைந்தார்கள். அதனால் தமிழகத்தின் மத்திய மாவட்டங்களில் எப்போதும் ஜெயிக்கும் தஞ்சாவூர், நாகபட்டினம் தொகுதிகளை கோட்டை விட்டது தி.மு.க. அது தவிர, மயிலாடுதுறை, திருச்சி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க.வும் கூட்டணிக் கட்சிகளும் சம்மட்டி அடி வாங்கியது. இதே நிலைதான் கன்னியாகுமரி தொகுதி. அங்கே தி.மு.க.வின் சிட்டிங் எம்.பி.யாக இருந்த ஹெலன் டேவிட்டை நிறுத்தியிருக்க வேண்டும். அவரை புறக்கணித்தார்கள். அதனால் கன்னியாகுமரியில் உள்ள கிறிஸ்தவர்கள் தி.மு.க.வை புறந்தள்ளினர். அதனால் கட்சி நான்காவது இடத்திற்குப் போய் டெபாஸிட்டையும் பறிகொடுத்தது.





இதே கதைதான் தென் சென்னைத் தொகுதி. இங்கு போட்டியிட்ட டி.கே.எஸ். இளங்கோவனின் சொந்த தொகுதி வடசென்னை. அங்கு இருந்தவரை இங்கு மாற்றி தென்சென்னையிலும் அவர் தோற்கடிக்க தேர்வு செய்தவர்களே காரணமாக இருந்தார்கள். இப்படி டெபாஸிட்டை இழந்த இன்னொரு தொகுதி தர்மபுரி. அங்கும் 'தலித் வாக்காளர்களை' தன் பக்கம் ஒருங்கிணைக்க முடியாமல் தவித்தது தி.மு.க. இது தவிர, 'அழகிரி கிளர்ச்சி' மாநிலம் முழுவதும் வேறு பாதிப்பை உருவாக்கியது. தி.மு.க.வின் கட்சி வாக்குகளைப் பாதிக்கவில்லை என்றாலும் பொது வாக்காளர்கள் மத்தியில் சீர்குலைத்துவிட்டது. அதை விட ஊழல் புகாரில் சிக்கிய ராஜா, தயாநிதி மாறன் உள்ளிட்டோருக்கு மீண்டும் சீட் கொடுத்தது, 'தி.மு.க. திருந்தாத கட்சி' என்ற இமேஜை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியது. யார் தலைவர் என்ற போட்டியை நீண்ட காலத்திற்கு நடத்திக் கொண்டிருக்கும் கட்சிக்கு கிடைக்க வேண்டிய தோல்வி இந்த முறை தமிழகத்தில் தி.மு.க.விற்கு கிடைத்து விட்டது.

அ.தி.மு.க.வின் அட்டகாசமான தேர்தல் பணிகள், அபூர்வமான தேர்தல் நிர்வாகம், விரிவான தேர்தல் யுக்தி எல்லாம் கை மேல் பலனைக் கொடுத்தது என்பதுதான் அக்கட்சி பெற்ற வெற்றியின் சிறப்புச் செய்தி. 'பண விநியோகத்தை என்னால் முழுவதும் கட்டுப்படுத்த முடியவில்லை' என்று தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன் குமார் சொன்னாலும், அது மட்டுமே அ.தி.மு.க. வெற்றிக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. ஏனென்றால் 37 தொகுதிகளில் வெற்றி என்ற ஆலமர நிழலில் இளைப்பாறும் அ.தி.மு.க.விற்கு அனைத்து சமுதாய வாக்காளர்களும் துணை நின்றார்கள். மூன்று இலட்சம், இரண்டு இலட்சம் என்று வாக்கு வித்தியாசத்தில் பெற்ற வெற்றிகள்தான் பெரும்பாலான வெற்றிகள். இந்த வெற்றிக்கு அச்சாரம் போட்டுக் கொடுத்தது முதல்வர் ஜெயலலிதாவின் உறுதிமிக்க தலைமை. அவருடைய அதிரடி நடவடிக்கைகள், மிலிட்டரி போன்ற கட்சிக் கட்டுப்பாடுகள் பொதுமக்களைக் கவர்ந்திருக்கிறது. ஏன் இந்திய அளவிலேயே கூட அ.தி.மு.க. போன்று அசாத்தியமான கட்சிக் கட்டுப்பாட்டுடன் இருக்கும் கட்சி இல்லை என்றே சொல்லலாம். 'நரேந்திரமோடியும், எங்கள் அம்மாவும் நண்பர்கள்' என்று தேர்தல் முடிவுகளுக்கு முன்பு சொன்ன முன்னாள் ராஜ்ய சபை எம்.பி. மலைச்சாமி உடனே கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். வன்னியர்கள் நிறைந்த தர்மபுரியில் இந்த முறை அ.தி.மு.க. தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. வன்னியர்களின் சார்பில் அமைச்சராக இருந்த கே.பி. முனுசாமி அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். வாக்குகள் குறைந்தாலோ, தோற்றாலோ பதவி பறிபோய் விடும் என்ற பயம் இன்று இந்தியாவிலேயே அ.தி.மு.க.வில் மட்டும்தான் இருக்கிறது.

எதிரே கட்சிக் கட்டுப்பாடு கிலோ என்ன விலை என்று கேட்கும் நிலையில் திக்கு முக்காடிக் கொண்டிருக்கும் தி.மு.க.விற்குப் போட்டியாக மிலிட்டரி கட்டுப்பாட்டுடன் அ.தி.மு.க.வை வைத்திருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு வாக்காளர்கள் துணை நின்றார்கள். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் 217 சட்டமன்றத் தொகுதிகளில் அ.தி.மு.க. முந்திச் சென்றுள்ளது இதனால்தான். 44.3 சதவீத வாக்குகளைப் பெற்று தமிழகத்தில் நம்பர் வன் கட்சியாக இன்று அ.தி.மு.க. திகழ்கிறது. அரசின் மக்கள் நலத்திட்டங்கள் உதவினாலும், பா.ம.க. போட்டியிட்ட தொகுதிகளில் விஜயகாந்தின் தே.மு.தி.க. வாக்காளர்கள் அ.தி.மு.க.விற்கு வாக்களித்துள்ளார்கள். ஜெயலலிதா கையிலெடுத்த

இளைஞர்களும் அ.தி.மு.க.விற்கே வாக்களித்தார்கள். ஏனென்றால் இந்த வாக்காளர்களின் மனதில் எப்படியும் அ.தி.மு.க. தேர்தலுக்குப் பிறகு மோடியை ஆதரிக்கும் என்று நிலவிய சிந்தனையோட்டம்தான்.

குறிவைத்துத் தாக்குவது என்பார்கள். அது போல் தஞ்சாவூரில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் டி.ஆர்.பாலு, நீலகிரி தொகுதியில் போட்டியிட்ட அ.ராஜா, மத்திய சென்னையில் போட்டியிட்ட தயாநிதி மாறன், விருதுநகரில் போட்டியிட்ட வைகோ ஆகியோரை குறிவைத்து தோல்வியடையச் செய்தது அ.தி.மு.க. என்றே சொல்ல வேண்டும். இதெல்லாம் ஒரு புறமிருக்க, எப்போதெல்லாம் தமிழகத்தில் பொருந்தாக் கூட்டணிகள் அமைகிறதோ அது எல்லாம் அ.தி.மு.க. விற்கே சாதகமாகிப் போயிருக்கிறது. சென்ற சட்டமன்றத் தேர்தலில் 'பொருந்தாக் கூட்டணியாக' டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் தி.மு.க. கூட்டணியில் இருந்தார்கள். ஆனால் இரு தலைவர்களின் கட்சி வாக்காளர்களும் போட்டி போட்டுக் கொண்டு அ.தி.மு.க.விற்கு வாக்க

**அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் அட்டகாசமான தேர்தல் பணிகள், அபூர்வமான தேர்தல் நிர்வாகம், விரிவான தேர்தல் யுத்தி எல்லாம் கைமேல் பலனைக் கொடுத்தன என்பது தான் அக்கட்சிபெற்ற வெற்றியின் சிறப்புச் செய்தி**

'காங்கிரஸ் எதிர்ப்பு' வியூகம் கச்சிதமாக கை கொடுத்திருக்கிறது. இது தவிர, தே.மு.தி.க. போட்டியிட்ட தொகுதிகளில் பா.ம.க.வினர் அ.தி.மு.க.விற்கு வாக்களித்துள்ளார்கள். பா.ஜ.க. போட்டியிட்ட தொகுதிகள் தவிர மற்றத் தொகுதிகளில் உள்ள இந்துத்துவா வாக்காளர்களும் அ.தி.மு.க.விற்கே வாக்களித்துள்ளார்கள். இவர்கள் தவிர மோடி தலைமையிலான அணி வெற்றி பெறக்கூடாது என்று நினைத்த சிறுபான்மையினரும் அ.தி.மு.க.விற்கே வாக்களித்தார்கள். பா.ஜ.க.விற்கு வாக்களித்து வீணாக்க வேண்டாம் என்று கருதிய

ளித்துவிட்டார்கள். அதேபோல் இந்த முறை எலியும், பூனையுமான ராமதாஸும், விஜயகாந்தும் பா.ஜ.க. கூட்டணியில் இருந்தார்கள். இரு கட்சிகளின் வாக்குகளும் போட்டி போட்டுக் கொண்டு அ.தி.மு.க.விற்குப் போய் விட்டன. இப்படி உருவான பல சாதகமான அம்சங்கள், அ.தி.மு.க.வை வெற்றிக்கட்டிலில் உட்கார வைத்து அழகு பார்க்கின்றன. 'உறுதி மிக்க தலைமை'க்கும், 'உழன்று நிற்கும் தலைமைக்கும்' இடையேயான போட்டியாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. போட்டி இந்த முறை தமிழகத் தேர்தல் மைதானத்தில் நின்றது.

அதில் மோடி போன்ற உறுதிமிக்க தலைமையை அகில இந்தியாவிற்குக் கொடுத்த மற்ற மாநில வாக்காளர்களைப் போல் முல்லைப்பெரியார், காவிரி, ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்றோரை விடுதலை செய்யும் விடயம், இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் மத்திய அரசுடன் துணிச்சலுடன் மோதிக் கொண்டிருந்த முதல்வர் ஜெயலலிதாவின் கட்சிக்கு தமிழக வாக்காளர்கள் பட்டாபிஷேகம் சூடியிருக்கிறார்கள்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்த பா.ம.க.வும், பா.ஜ.க.வும் ஆளுக்கொரு சீட்டில் வெற்றி பெற்றாலும், தே.மு.தி.க. 14 தொகுதிகளில் போட்டியிட்டு எதிலும் வெற்றி பெற முடியவில்லை. பலமான அ.தி.மு.க.வை விஜயகாந்தால் எதிர்கொள்ள முடியாது என்பதற்கு இத்தேர்தல் முடிவுகள் அவருக்குச் சொன்ன பாடம். பணத்தை தண்ணீராகச் செலவழித்த தனியார் கல்லூரி நிறுவனர் பச்சைமுத்து, ஏ.சி. சண்முகம் போன்றோரின் கப்பலே தரை தட்டிநின்று விட்டது. ஆனால் வெறும் பத்து இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. அக்கூட்டணிக்குள்ளேயே அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. ம.தி.மு.க.வும், பா.ம.க.வும் வாக்குகளைப் பெற்றாலும், வைகோவின் தோல்வி ம.தி.மு.க.வின் எதிர்காலத்தை கும்மிருட்டில் தள்ளியிருக்கிறது. மோடியின் இமேஜைப் பயன்படுத்தியே வைகோவால் வெற்றிபெற முடியவில்லை என்று உருவாகியுள்ள செய்தி இரக்கமற்றது. ஏனென்றால் அந்தக் கூட்டணியில் உள்ள பாப்புலர் லீடர் வைகோ மட்டுமே. அவராலேயே அதைப் பயன்படுத்த முடியவில்லை என்பது வைகோவின் எதிர்கால அரசியலுக்கு விடப்பட்டுள்ள சவால். ஆனால் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. விற்கு மாற்றாக உருவாகிய அணியின் சார்பில் 18.5 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்கள் என்பது மலைக்கத்தக்க அம்சம். ஆனால் மார்தட்டிக் கொள்ள வெற்றி இல்லை. இக்கூட்டணிக்குள் டாக்டர் ராமதாஸ் செய்த குழப்பம் ரொம்பவும் சீரியஸா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது. நரேந்திரமோடி பா.ஜ.க.வின் பாராளுமன்றக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட பிறகு நடை பெற்ற பாராளுமன்ற மைய மண்டப விழாவில் பா.ம.க. வின் மீதான கோபத்தைப் பார்க்க முடிந்தது. பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸை பெரிதாக கண்டு கொள் ளாத மோடி, விஜயகாந்தை கன்னத்தில் வருடி பாராட்டினார். பிரேமலதா விஜய காந்தை சுட்டிக்காட்டி தீவிரப் பிரசாரம் செய்தவர் என்று புகழ்ந்தார். அவர்களுக்கு அமைச்சர் பதவியே கிடைத்தது போன்ற சந்தோஷத்தை மோடி கொடுத்தது டாக்டர் ராமதா ஸுக்கும், தமிழக எதிர்கால அரசியல் வியூகத்திற்கும் மோடி விடுத்த செய்தி.

ஆனால், கடல் போல் இருந்த காங் கிரஸ் கட்சி இன்று குட்டையை விட மோசமாக தமிழகத்தில் சுருங்கி விட் டது. மூப்பனார் இல்லாமல் 1998 நாடாளுமன்றத் தேர்தலில் வாங்கிய வாக்குகளைக் கூட இப்போது காங்கி ரஸ் வாங்க முடியாமல் முச்சந்தியில் தமிழகத்தைப் பொறுத்தவரை நிற்கி றது. போட்டியிட்ட தொகுதிகளில் ஒரேயொரு தொகுதி (கன்னியா குமரி) தவிர மற்ற அனைத்துத்தொகு திகளிலும் டெபாஸிட் தொகையைப் பறிகொடுத்து பரிதாபமாக நிற்கிறது. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக தமிழகத்தின் மீனவர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு, காவிரிப் பிரச் சினை, தமிழர்களின் உணர்வுக ளோடு ஒன்றிப்போன இலங்கைத் தமிழர் பிரச்சினை போன்றவற்றிலும், ராஜீவ் வழக்கில் தண்டிக்கப்பட்டவர் களை விடுதலை செய்யக்கூடாது என்று தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் அரசு நடந்துகொண்ட விதத்திலும் காங்கிரஸின் மீதான கோப அலை சுனாமியாக மாறியது. இந்தியா முழு வதும் மோடிக்கு ஆதரவாக சுனாமி அலை. ஆனால் தமிழகத்தில் காங்கிர ஸுக்கு எதிரான சுனாமி. அதில் சிக்கி காங்கிரஸ் கட்சி அடித்துச் செல்லப் பட்டது. தி.மு.க.மட்டும் கரையோரத் தில் விட்டுச் செல்லப்பட்டிருக்கிறது. முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரத் தின் மகன் கார்த்தி சிதம்பரம் டெபா ஸிட் இழந்தார். ஈ.வி.கே.எஸ். இளங் கோவன் டெபாஸிட் இழந்தார். மணிசங்கர் அய்யர் டெபாஸிட் இழந் தார். படுதோல்விக்குப் பிறகும் தமிழ கக் காங்கிரஸ் கட்சியினர் தங்கள் பாதையில் நெருஞ்சி முள் கிடப்பதை உணரத் தயாராக இல்லை. இலங்கை அதிபர் ராஜபக்ஷ மோடியின் பதவி யேற்பு விழாவிற்கு வரவேற்கப்பட் டதை அனைவரும் கண்டித்தனர். ஆனால் தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன் மட்டும் வர வேற்றுப் பேட்டி கொடுத்தார்.

இனி தோல்வியால் சுருட்டப்பட்டி ருக்கும் தி.மு.க. உடனடியாக ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டிய நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. இரட்டைத் தலைமைக்கு முடிவு கட்டி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.வை வழிநடத்த அனுமதிக்க வேண்டும். ஜாதிக் கட்சிகளுடன் கூட்டணி என்ற போக்கை கைவிட வேண்டும். 'உறுதி மிக்க தலைமை' இருக்கிறது, 'ஊழல் வாதிகளை அங்கீகரிக்க மாட்டோம்' என்ற இமேஜை பொது வாக்காளர்க ளிடம் ஏற்படுத்த வேண்டும். மருந்துக்குக் கூட இல்லாத கட்சிச் கட் டுப்பாட்டை அதுதான் கட்சிக்கு ஆக் ஸிஜன் என்ற அளவில் முக்கியத்து வம் கொடுத்து செயல்பட வேண்டும். குறுநில மன்னர்கள் போல் இருக்கும் தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர் களை தூக்கியெறிந்து பாமரனும் மாவட்டச் செயலாளராக வரலாம் என்ற நிலையை உருவாக்க வேண் டும். இந்தமுறை தி.மு.க.வின் அடிப் படை வாக்கு வங்கியே சுமார் 7 சத வீதம் வரை காணாமல் போயிருக்கி றது. இது பெரும் ஆபத்து. கட்சித் தொண்டர்களே குடும்ப அரசியலில் வெறுத்து ஒதுங்கினது மட்டுமன்றி, பா.ஜ.க.விற்கோ, அ.தி.மு.க.விற்கோ கூட வாக்களித்துள்ளார்களோ என்ற சந்தேகம் இறக்கை கட்டிப் பறக்கிறது. இதைச் சமாளிக்க மறந்துபோன 'அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை' தேடிப் பிடித்து மீண் டும் கொண்டு வர வேண்டும். அது தான் 2016 சட்டமன்றத் தேர்தலின் போது தி.மு.க.வின் தலைவிதியை நிர்ணயிக்கும். கூட்டணிக் கட்சிகள் தி.மு.க.வை இனித் தேடி வரவேண்டும் என்றால் முதலில் தி.மு.க. மக்களின் நம்பிக்கையைப் பெற்ற கட்சி, வாக்காளர்களிடம் செல் வாக்குள்ள கட்சி என்பது நிரூபிக்கப் பட வேண்டும். அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் சென்றுள்ள தி.மு.க.விற்கு இந்த முதலுதவி உடனடித் தேவை.

அ.தி.மு.க. 'அட்வான்டேஜ்' நிலை யில் இருக்கிறது. கூட்டணிக் கட்சி களே தேவையில்லாமல் தேர்தலில் வெற்றி பெற்று விட முடியும் என்ற நம்பிக்கை இப்போது அக்கட்சிக்கு பிறந்திருக்கிறது. தேசிய அளவில் 37 எம்.பி.க்கள் உள்ள கட்சி என்பதால் நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க.வுடன் இணைந்து காங்கிரஸ் செயல்படுவ தற்கான சாத்தியக்கூறுகள் கூட இருக் கிறது. சோனியா பாராளுமன்றக்கு முத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தில், 'மதச்சார்பற்ற கட்சிகளுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் பணியாற்றுவோம்' என்று சூசகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது அ.தி.மு.க.விற்கு விடுக்கப்பட்ட அழைப்புதான். அடுத்த சட்டமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் நெருங்கிப் போவதற்கு இனி வரப்போகின்ற பாராளுமன்ற கூட்டுறவு கை கொடுக்கலாம். முதல் வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வும், நரேந்திரமோடி தலை மையிலான பா.ஜ.க.வும் 'ஒரே உறை யில் உள்ள இரு கத்திகள்' போன் றவை! அந்த இரு கட்சிகளுக்குள் எவ்வளவுதூரம் ஒற்றுமை இருக்கும் என்பது புரியாத புதிர். இப்போதே ராஜபக்ஷ வரவேற்பு விடயத்தில் மோடிக்கு கண்டனம் தெரிவித்துவிட் டார் முதல்வர் ஜெயலலிதா. ஆகவே சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை விட காங்கிரஸ் அ.தி.மு.க. நேசிப்ப தற்கான சாத்தியக்கூறுகள் நிரம்ப உள்ளன. அதை முடிவு செய்வது முதல்வர் ஜெயலலிதா கையில்தான் இருக்கிறது என்றாலும் 2016 காட்சி கள் அப்படி அமைவதற்கும் சாத்தி யக்கூறுகள் உருவாகும்.


*(33ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# வல்லரசுகளின் மோதலுக்கான களமாக உக்ரேயின்

நேட்டோவிற்கு ரஷ்யாதான் எதிரி. அதன் இருப்புக்கான நியாயப்பாடும் அதுவே. அடிப்படையான விடயங்களைப்பார்த்தால் உலகம் இரண்டாம் உலகப்போருக்கு முந்திய காலநிலைக்கு திரும்பிவிட்டது எனலாம். கதாநாயகர்கள்தான் முந்தியவர்களை விட வேறு நபர்களாக இருக்கிறார்கள். சீனா முக்கிய கதாபாத்திரத்தை ஏற்றிருக்கிறது





குமார் டேவிட்

கெடுபிடியுத்தம் சடுதியாக முடிவுக்கு வந்தபோது அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்ட ஒரு வல்லரசின் கீழான உலகம் இயங்கும் நிலை உருவானது. ஆனால் 2008ஆம் ஆண்டில் உலக முதலாளித்துவம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது அமெரிக்காவின் பலவீனம் வெளிப்பட்டது. அமெரிக்க முதலாளித்துவம் உலகில் மேலாதிக்கம் செய்வதென்பது நிருபணமாயிற்று. உலகமயமாக்கல் போக்கு புதிய தொழில்நுட்பத்தை புகுத்தியது. பொருட்கள், சேவைகளின் நிரம்பலில் பல சங்கிலி அமைப்புகளை உருவாக்கியது. உலகம் எல்லாத்தரப்பினருக்கும் உரிய செயற்பாட்டுக் களமாக -சமதரையாக மாற்றம் பெற்றது. உலகம் பல்துருவத் (Multi-polar) தன்மை உடையது. அமெரிக்கா என்ற ஒரு துருவத்தை நோக்கி எல்லாம் குவியவில்லை என்று ஆய்வாளர்கள் கூறலாயினர். அவர்கள் உபயோகிக்கும் சொற்பதங்கள் மாறின. ஒரு துருவ உலகம் (Unipolar world) என்ற சொற்பதத்தை உபயோகிப்பதை பலர் கைவிட்டனர். லீகுவான் யூ ஒரு தொலைக்காட்சி நேர்முகத்தில் உலகின் மிக முக்கிய பிரச்சினைகளாக இரண்டைக் குறிப்பிட்டார். கால நிலை மாற்றம், சீனா- அமெரிக்கா என்ற இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை நிர்வகித்தல் என்ற இரண்டும் இருபத்தியோராம் நூற்றாண்டின் முக்கிய பிரச்சினைகள் என்று அவர் கூறினார். அவர் கூற்றின்படி பார்த்தாலும் உலகம் இரு துருவங்களாக முரண்பட்டுள்ளதா அல்லது பல்துருவங்களாக உள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது. ஐரோப்பிய யூனியனைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் (அமெரிக்கா, சீனா என்பனவற்றையும் சேர்த்து) உலகம் மூன்று துருவ அமைப்புடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது என்பதா? ஏனெனில் ஐரோப்பிய யூனியன் இன்று உலகின் மிகப்பெரிய பொருளாதார அலகாக உள்ளதன்றோ? இவ்வாறிருக்கையில் யாரும் எதிர்பாராத வகையில் கடந்த இரு மாதங்களுக்குள் நான்காவது துருவம் ஒன்று ரஷ்யா என்ற தேசத்தின் வடிவில் வெளியே கிளம்பியுள்ளது. அமெரிக்காவின் அணு ஆயுத இருப்புக்குச் சவால் விடக்கூடிய பலத்தோடு அந்நாடு முன்னணிக்கு வந்துள்ளது.

இராணுவப் பலத்தை ஒரு அளவுகோலாகக் கொண்டு நோக்கும் போது இன்று உலகில் நான்கு பெரும் வல்லரசுகள் உள்ளன. அவை அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய யூனியன், ரஷ்யா என்பனவாகும். இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் ஐந்து வல்லரசுகள் பந்தயத்தில் நின்றதை ஒப்பீடு செய்து பார்க்கலாம். பிரித்தானியப் பேரரசு, ஜேர்மனி, அவுஸ்திரேலியா-ஹங்கேரிப் பேரரசு, பிரான்ஸின் மூன்றாம் குடியரசு, ரஷ்யாவின் பேரரசு என்பனவே இவை. அத்திலாந்திக்குக்கு அப்பால் அமெரிக்காவும் கிளம்பிக்கொண்டு வந்தது. எண்ணிக்கையில் உள்ள வேறுபாட்டைவிட பொது இயல்புகள் தான் முக்கியமானவை. அன்றும் இன்றும் ஒரே விதமான இயல்புகள் வெளிப்படுகின்றன.

கெடுபிடி யுத்தம் (அல்லது பனிப்போர்) உலகை இருமுகாம்களாகப் பிரித்தது. அவை இரண்டும் இருவேறுபட்ட கருத்தியல்களின் அடிப்படையிலான முகாம்களாகவும் இருந்தன. முதலாம் உலக யுத்தத்தின் முன்னர் ஏகாதிபத்தியம் உலகை கூறுபோட்டு பிரித்துக்கொண்டது. காலனிகளைக் கைப்பற்றி அவற்றின் செல்வ வளங்களை ஏகாதிபத்திய அரசுகள் உடைமை கொண்டன. முதல் உலகத்திற்கு முந்திய நிலையில் பேரரசுகளும், தேசிய அரசுகளும் முன்னிலையில் நின்றன. கெடுபிடியுத்தத்திற்கு முந்திய கால உலகில் கருத்தியல் போராட்டத்தின் அடிப்படையில் உலகம் கூறுபட்டு இருக்கவில்லை. எந்த 'இசம்' முக்கியமானது என்ற கருத்தியல் போராட்டம் முதன்மை பெறவில்லை. அன்றைய உலகில் அதிகாரம், பொருளாதாரக் கொள்கை, கீர்த்தியும் புகழும் என்பனவே முக்கியம் பெற்றிருந்தன. இன்று உலகில் துரிதமான ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இம்மாற்றம் ஒருசில நாட்களில் அல்லது ஓரிரு வாரங்களுக்குள் ஏற்பட்டதென்று சொல்ல முடியாவிட்டாலும் சில மாத கால எல்லைக்குள் ஏற்பட்டுவிட்டது. அந்த மாற்றம் என்ன? இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் இருந்தது போல் 'இசம்' களின் கருத்தியல் போர் இடம்பெறாத உலகுக்கு நாம் திடீரெனப் புகுந்துவிட்டோம். உலக அரங்கில் இன்று பேரரசுகளும் (Empires) தேசியங்களும் (NATIONS) முன்னணியில் நிற்கின்றன. தேசியவாதமும், வல்லரசுகளின் அதிகார அரசியலும் (Great Power Politics) கருத்தியலை விட ('இசம்'களைவிட) முக்கியம் பெற்றுள்ளன.

ஒரேமாதிரியான போக்குகளை மிகைப்படுத்துதல் தவறு. வித்தியாசமான அம்சங்களையும் கவனிக்க வேண்டும். முன்னர் இல்லாதவாறு இன்று சீனாவும் ஆசியாவும் முதன்மை பெற்றுவிட்டன. இருபத்தியோராம் நூற்றாண்டு சீனாவிற்கும் ஆசியாவிற்கும் உரியது என்றாகிவிட்டது. இதனைவிட வேறு பல வளர்ச்சி மையங்களும் உள்ளன. இதனால் உலகம் பல்துருவ மையங்களை உடையதென்ற கருத்து ஏற்புடையதாகிவிட்டது. ஆம்! இன்றைய உலகம் 1914 ஆம் ஆண்டின் உலகத்தைவிட வித்தியாசமானது. இருப்பினும் ஐரோப்பாவிலும் அத்திலாந்திக் பிராந்தியத்திலும் உள்ள நிலைமைகள் அன்று இருந்த நிலைக்கு ஒப்பானதாகவே இருப்பது சுவாரஸ்யமானது. சோவியத் யூனியனதும், வார்சா ஒப்பந்தக் கூட்டினதும் இராணுவ எதிராளிகளாக நேட்டோ அமைப்பு உருவானது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கும், வார்சோ ஒப்பந்தக் கூட்டின் முறிவுக்கும் பிந்திய நிலையில் நேட்டோவுக்கு எந்த வேலையும் கிடையாது என்ற நிலை ஏற்பட்டது. ஐரோப்பிய -அமெரிக்க முதலாளித்துவத்திற்கு இன்று கருத்தியல் எதிராளியென்று ஒரு நாடு ஐரோப்பாவில் இல்லை. நேட்டோ தேவையில்லாத ஒன்றாக மறைந்து போக வேண்டிய அமைப்பாக ஆகியது. கருத்தியல் எதிராளியாக இருந்த ரஷ்யா இப்போது பிரதேச அடிப்படையிலான தேசியவாத எதிர்ப்பு நாடாக மாறிவிட்டது. ஆகவே எதிரியின் தன்மை மாறிவிட்டது. இதனால் 'நேட்டோ'வும் புதிய வடிவம் பெற்று, ஐரோப்பிய யூனியன் என்ற பிராந்தியக் கூட்டின் வடிவைப் பெற்றுவிட்டது. 'நேட்டோ'விற்கு ரஷ்யா தான் எதிரி. அதன் இருப்புக்கான நியாயப்பாடும் அதுவே. அடிப்படை



உக்ரெயினின் கிழக்கு பகுதியில் அரசாங்க கட்டிடம் ஒன்றை முற்றுகையிட்டிருக்கும் ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான விடயங்ளைப் பார்த்தால் உலகம் இரண்டாம் உலகப் போருக்கு முந்திய கால நிலைக்குத் திரும்பி விட்டது எனலாம். கதாநாயகர்கள் தான் முந்தியவர்களை விட வேறு நபர்களாக இருக்கிறார்கள். சீனா முக்கிய கதாபாத்திரத்தை ஏற்றிருக்கிறது.

**ரஷ்யப் பேரரசு மீண்டெழுதல்**

கோர்பசேவ் காலத்தின் தவறான ஆளுகை சோவியத் யூனியனை திட்டமிட்ட அழிவை நோக்கிச் செலுத்தியது. அவரை அடுத்து வந்த பலவீனமானவர். திறமையில்லாதவர். அவரின் கோமாளித்தனம் ரஷ்யாவைத் துண்டாடி அந்நாட்டின் செல்வளங்கள் மோசடிக் கும்பல்களால் கொள்ளையடிக்கப்படும் நிலை ஏற்பட்டது. மனிதகுல வரலாற்றில் பொதுச்சொத்தின் மிகப்பெரிய கொள்கையடிப்பு நிகழ்ந்தது. இதனை அமெரிக்காவின் திறைசேரியும் (MIT) எம்.ஐ.ரி என்ற கல்வி நிலையத்தின் பொருளாதாரப்பிரிவினரும் மேற்பார்வை செய்து வழிநடத்தின. 1990களில் இருந்து மேற்குலகு ரஷ்யாவை மட்டந்தட்டி மூலைக்குள் பதுங்கச் செய்தது. ரஷ்யாவின் கொல்லைப் புறத்தில் இருந்த மூன்று பால்டிக் நாடுகள் கூட நேட்டோவில் இணைந்தன. கெடுபிடி யுத்த காலத்தில் அமெரிக்காவின் வாசற்படியில் இருந்த புவர்ட்டோ றிக்கோ நாடு வார்சோ ஒப்பந்தக் கூட்டில் இணைந்தால் எப்படி இருக்குமோ அப்படியான ஒன்று தான் இந்த பால்டிக் கடல் நாடுகள் நேட்டோவில் இணைந்தமை எனலாம். சோவியத் யூனியன் சிதைவுற்று அழிந்து 25 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இப்போது விளாடிமிர் புட்டின் என்ற பலம்மிக்க சர்வாதிகாரி ரஷ்யாவின் தலைவராக இருக்கிறார். ஐரோப்பாவின் வலுச்சமநிலையை அவர் புதுப்பித்திருக்கிறார்.

கிரிமியா ரஷ்யத் தாயகத்துடன் விரைவாக இணைந்தது. கிழக்கு உக்ரெயினில் ரஷ்ய ஆதரவாளர்கள் அணிவகுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். டொனஸ்க் நகர அலுவலகத்தையும், டொனாஸ்க் ஒப்லாஸ்ற்

**ரஷ்யா உக்ரெயின் விடயத்தில் கொண்டுள்ள அக்கறைக்கு காரணம் அங்கு ரஷ்ய இனக்குழுமத்தினர்கள் இருக்கிறார்கள் என்பதனால் மட்டுமன்று. நேட்டோவின் அச்சுறுத்தலுக்கு காப்பரணாக உக்ரெயினை வைத்திருக்க வேண்டும் என்ற தந்திரோபாய எண்ணமும் இதில் கலந்துள்ளது**

மாகாணத்தின் அரச அலுவலகங்களையும் ரஷ்யச் சார்பு ஆதரவாளர்களான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமிப்புச் செய்தனர். சுதந்திரக் குடியரசு ஒன்றை டொனஸ்க் ஒப்லாஸ்ட் மாகாணத்தில் அமைக்க வேண்டும் என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் அபிலாசையாகும். அவர்கள் அப்பகுதிக்கு ரஷ்யப் படைகளை அமைதிகாக்கும் படையாக அனுப்பும்படி புட்டினைக் கேட்டனர். டொனஸ்க் நகரிலும் பன்னிரெண்டு வேறு கிழக்கு, உக்ரெயின் நகரங்களிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உக்ரெயினில் இருந்து தம்பகுதிகள் பிரிந்து செல்ல வேண்டும் எனவும், ரஷ்யாவுடன் அவை இணைக்கப்பட வேண்டும் என்றும் கூச்சலிட்டனர். (லுதான்ஸ்க், கார்கிவ் ஆகிய நகரங்கள் குறிப்பிட்டுச் செல்லப்படவேண்டியவை) இதற்காக ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர். இந்நிகழ்வுகள கிரிமியாவில் நடந்தவற்றை மீண்டும் நிகழ்த்திக் காட்டுவன போல் அமைந்தன. இக்கட்டுரையை நான் எழுதும் போதுள்ள காலத்திற்குள் கிரெம்ளின் அரசாங்கம் பிரிவினை பற்றி வெளிப்படையாக எதனையும் கூறவில்லை. இருப்பினும் உக்ரெயின் பிளவுபட்டுச் சிதைந்துபோகப் . போகின்றது. ரஷ்யா கலகம் விளைவிப்போரான சதிகாரர்களை உக்ரெயினிற்குள் ஊடுருவச் செய்து இவற்றையெல்லாம் செய்விக்கிறது என்று மேற்கத்தைய ஊடகங்கள் எழுதுகின்றன. இது உண்மைதான். ஆனால் உக்ரெயினின் கிழக்குப்பகுதியில் கலகக் கொடி தூக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே.

உக்ரெயினில் சமஷ்டி அரசியல் முறை உருவாக்கப்படவேண்டும் என்பது ரஷ்யாவின் கோரிக்கை யாகும். இவ்வாறு செய்தால் அம்மக்களுக்கு சுயாட்சியுரிமையும் தம் அலுவல்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டும் என்பது அவர்களின் கருத்து. டொனஸ்க் ஒப்லாஸ்ற் மாகாணத்தில் உக்ரெயினியர்கள் 2.75 மில்லியன் களாகவும் (57%) ரஷ்யர்கள் 1.85 மில்லியன்களாகவும் (38%) ஏனைய சிறுபான்மையினர் 5% ஆகவும் உள்ளனர். டொனஸ்க் ஒப்லாஸ்க் பகுதியில் கூட ரஷ்யர்கள் பெரும்பான்மையினர் அன்று, ஏனைய மூன்று பகுதிகளில் அவர்கள் முறையே 39%, 26%, 25% என்ற வீதாசாரத்தில் உள்ளனர். பகுதியின் மூன்று மாகாணங்களிலும் ரஷ்யர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். கிரிமியாவில் ரஷ்ய இனத்தவர்கள் 60% வீதத்தினராய் பெரும்பான்மையினராய் உள்ளனர். சமஷ்டிக் கோரிக்கை வெற்றி பெறவேண்டுமாயின் உக்ரெயின் இனக்குழுமத்தினர்களில் மூன்றில் ஒரு பங்கினராவது அக்கோரிக்கைக்குச் சம்மதிக்க வேண்டும். இச்சம்மதம் இருப்பதாகவே கருதப்படுகிறது.

ரஷ்யா உக்ரெயின் விடயத்தில் கொண்டுள்ள அக்கறைக்குக் காரணம் அங்கு ரஷ்ய இனக்குழுமத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகளில் கவனம் கொள்ள வேண்டும் என்பதனால் மட்டுமன்று. 'நேட்டோவின்' அச்சுறுத்தலுக்கு காப்பரணாக உக்ரெயினை வைத்திருக்க வேண்டும் என்ற தந்திரோபாய எண்ணமும் இதில் கலந்துள்ளது. இப்பிராந்தியத்தின் வலுச்சமநிலையை எடுத்து நோக்கினால் நேட்டோ உக்ரெயினின் விவகாரங்களிலும் பெலோ ரஷ்யா ஏனைய மூன்று பால்டிக் நாடுகளின் (லிதுவேனியா, லாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியா, எஸ்டோனியா) விவகாரங்களிலும் தலையிடக்கூடாது என்று ரஷ்யா கோரினால் அது நியாயமானதே. மறுபுறத்தில் ரஷ்ய இனக்குழுமத்தைச் சேராத பிற இனக்குழுமங்களிடையே இன்று ரஷ்யா என்ற கரடி பற்றிய அச்சம் எழுந்துள்ளது. இதனால் கிழக்கு ஐரோப்பாவின் இப்பகுதிகளில் பதற்ற நிலை உள்ளது. முதியவர்கள் இன்றும் நினைவில் இருந்து மறக்காத சம்பவம் ஒன்று 1914ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் திகதி சரஜிவோ நகரில் நடந்தது. அன்று ஒரு துப்பாக்கி வேட்டு மட்டும் வெடித்ததும் ஒரு பெரிய எரிமலையே வெடித்துச்சிதறியது போன்ற நிலை ஏற்பட்டது. அன்று கிளர்ந்த தீ நான்கு வருடங்கள் சுவாலை விட்டு எரிந்தது. 10 மில்லியன் மக்கள் மடிந்தனர். இந்தப் பேரழிவை நினைவுபடுத்திப் பார்க்கக் கூடியவர்கள் இன்று உக்ரெயினின் நிகழ்வுகள் எத்தகைய பேராபத்தின் அறிகுறிகள் என்பதை உணர்வர். பல்லாண்டுகாலமாக மக்கள் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருந்த கோபமும், விரக்தியும் தீப்பிழம்பாக மீண்டும் கிளம்பும் ஆபத்து உள்ளது.

### உக்ரெயினின் இரங்கத்தக்க நிலை

உக்ரெயின் நாட்டில் கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை செயற்படுத்தும்படி சர்வதேச நாணய நிதியம் கேட்டுள்ளது. ஆனால் அந்நாடு அவற்றைச் செயற்படுத்த முடி

**டொனஸ்க் ஒப்லாஸ்க் மாகாணம் கிழக்கு உக்ரெயினில் உள்ளது. இதனைவிட வேறு இரு மாகாணங்கள் டொனஸ்க் மாகாணத்திற்கு வடக்கே அருகருகாக உள்ளன. தென்மேற்கிலே ஒனிட்டோ என்ற மாகாணம் உள்ளது. இம்மாகாணங்களில் எல்லாம் ரஷ்ய இனக்குழுமத்தினர் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். ரஷ்யர்கள் பெரும்பான்மையாக உள்ள கிரிமியா தெற்கே உள்ளது. உக்ரெயின் என்ற பல்லினக் குழுமங்களின் சமூகம் என்ற பின்னணியில் தான் அது வல்லரசுகளின் மோதல்களமாக உள்ளதைப் பரிசீலிக்க வேண்டும்**

யாமல் திணறிக்கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் ராட்சத வாயு எரிபொருள் கம்பனியான கஸ்புரொம் (Gasprom) வாயு எரிபொருள் விலையை 80% த்தினால் உயர்த்தியுள்ளது. தனக்கு வரவேண்டிய 2.2 பில்லியன் டொலர் கடனையும் உடன் செலுத்தும்படியும் இக்கம்பனி உக்ரெயின் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. நிலைமைகள் மோசமடைந்து சென்றால் உக்ரெயின் என்ற நாட்டின் இருப்பே கேள்விக் குறியாகிவிடும். உக்ரெயின் அரசு வீழ்ந்தால் அந்நாட்டுக்குள் இராணுவ டாங்கிகள் உருண்டோடத் தொடங்குமா? அவ்வாறாக டாங்கிகள் நுழைந்தாலும் அவற்றின் வேலை அமைதி காக்கும் பணியாக இருக்குமேயன்றி இராணுவ ஆக்கிரமிப்பாக இருக்காது. ரஷ்யா தனது அங்கீகாரம் இல்லாமல் யாரையும் உள்ளேநுழைய விடமாட்டாது. உதாரணமாக ஐ.நா. அமைதிகாக்கும் படைவருவதென்றாலும் ரஷ்யாவின் சம்பந்தத்தோடு தான் வரமுடியும்.

உக்ரெயின் விவகாரத்தில் இருந்து மூன்று படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள முடியும். சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வேண்டும்; அதிகாரப் பகிர்வு சுயாட்சி என்று பல கருத்துகள் உள்ளனவே அவற்றுள் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து தாம் வாழும் பகுதிகளில் தங்கள் அலுவல்களைத் தாமே கவனித்துக்கொள்ளும் வகையிலான அரசியல் தீர்வை வழங்க வேண்டும். இது கற்றுக்கொள்ள வேண்டிய முதலாவது பாடம். இரண்டாவது, பெரிய வல்லரசுகளின் நியாயமான பாதுகாப்புப் பிரச்சினைகள், அவற்றின் உள்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் என்பனவற்றில் அவற்றுக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் செயற்பட்டுக் காரியத்தைக் கெடுக்கக்கூடாது. 1962 இல் கியூபா இதனைக் கற்றுக்கொண்டது. ஜே.ஆர். 1987இலும், அல்குவைதா 9/11க்குப் பிந்திய ஆண்டுகளிலும், உக்ரெயின் சென்ற மாதமும் இப்பாடத்தைக் கற்றுக்கொண்டன. உக்ரெயினில் சட்ட பூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் இருந்தார். அவரை ஆட்சியில் இருந்து துரத்தினார்கள். ரஷ்ய சார்பாளராக இருந்த அவரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு பாசிச வன்முறையாளர்களும், வலதுசாரித் தீவிரவாதிகளும் சதி செய்து குழப்பத்தை உண்டாக்கினர். இவையெல்லாம் நல்ல பாடங்கள். 1980 களிலும் இந்திராகாந்தியின் கோபத்தை இலங்கை கிளறியது.

(33ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வரலாறு



கே.ஆர்.டேவிட்

2

# தமிழ்த்தேசியத்தின் தளமாற்றங்களும் இலக்கியக் கள மாற்றங்களும்

வர்க்க முரண்பாட்டு மேலாதிக்கத்திற்கெதிரான ஆயுதமேந்திய வெகுஜன போராட்டத்தை மையப்படுத்தியோரும் தமிழினம் பிரிந்து போகுதல் என்று இறுதி இலக்கைக்கொண்டு போராடிய தமிழீழ போராளிகளும் விடுவிக்க முடியாத கொள்கை முரண்பாட்டினால் இரு துருவங்களாக நிற்க நேர்ந்தது. இதனால் முற்போக்கு அணியைச்சார்ந்த எழுத்தாளர்களை தமிழீழப் போராட்ட அணியினர் இழக்க நேர்ந்தது

1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை தமிழ்த்தேசிய எழுச்சிக்காலமெனக் குறிப்பிடப்படுகின்றது.

1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான காலப்பகுதியாகப் பார்க்கப்படுகின்றது. இதற்கான சில காரணங்கள் உண்டு. தமிழ்த்தேசிய உணர்வாளர்களால் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட 'தமிழீழக் கோட்பாடு' நிழல் வடிவம் பெற்ற காலம் என்பதோடு, ஏறத்தாழ முப்பது வருடகாலம் நீடித்த தமிழரின் ஆயுதப் போராட்டக்காலம் என்ற வகையிலும், தமிழர்களின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகவிருந்து அதன் பின் பிராந்திய வல்லரசான இந்தியாவின் பிடிக்குள்ளாகி அதன்பின் சர்வதேச வல்லரசான அமெரிக்காவின் பிடிக்குள்ளாகி சர்வதேச பொதுச்சபையான ஐக்கிய நாடுகள் சபை வரை நீட்சி பெற்ற காலப்பகுதி என்ற வகையிலும் இக்காலப்பகுதி ஏனைய காலப்பகுதிகளை விட முக்கியத்துவமான காலப்பகுதியாகக் கணிக்கப்படுகின்றது. ஒரு காலப்பகுதியின் இலக்கியப்பரப்பை அக்காலத்தில் மட்டும் நின்று நோக்காமல் அக் காலப்பகுதிக்கு முன்னிருந்த காலப் பகுதிகளோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமானதாக இருக்குமென்ற இலக்கிய நியமத்திற்குட்பட்டு இக்காலப்பகுதிக்குரிய இலக்கியப்பரப்பை நோக்கி நகரலாமென எண்ணுகிறேன்.

1. முற்போக்கு இலக்கிய அணியினரின் இலக்கியப்பங்களிப்பு.
2. தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் அணியைச் சேர்ந்த இலக்கியப்படைப்பாளிகளின் பங்களிப்பு.
3. தமிழ்த்தேசியப் போராளிகளின் நடவடிக்கைகள் இலக்கியப்பரப்பில் வகித்த பங்கு.
4. ஆயுதப் பாவனையும், இயல்புநிலை வளர்ச்சியை மீறிய பாய்ச்சல்களும்.
5. அரச படைகளின் நடவடிக்கைகள்.

### 1. முற்போக்கு இலக்கிய அணியினரின் இலக்கியப்பங்களிப்பு

முற்போக்கு அணியினரையும், அந்த அணியைச் சார்ந்த வாண்மைமிக்க படைப்பாளிகளையும் தமிழீழப்போராளிகளின் அணி ஆரம்பத்திலேயே இழக்க நேர்ந்தது. முற்போக்கணியினரின் காலத்திலேயே இலக்கியங்கள் போராட்டக்கருவிகள் என்றதொரு பரிமாணத்தைப் பெற்றதென்பது பற்றி கடந்த சமகாலம் இதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முற்போக்கு அணியினர் வர்க்க முரண்பாட்டு மேலாதிக்கத்துக்கெதிரான ஆயுதமேந்திய வெகுஜனப் போராட்டத்தையே மையப்படுத்தினர். அதற்கு வழிகோலும் இலக்கியங்களையே படைத்தனர். இது ஒன்றும் இரகசியமானதல்ல. தமிழீழப் போராளிகள் தமிழினம் பிரிந்து போதல் என்ற இறுதி இலக்கைக் கொண்டு போராடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். இரண்டு அணியினருக்கும் கொள்கை அடிப்படையில் விடுவிக்க முடியாத முரண்பாட்டினால் பலமான இரு அணிகளும் இருதுருவங்களாக நிற்க நேர்ந்தது. இதனால் முற்போக்கு அணியைச்சார்ந்த எழுத்தாளர்களை தமிழீழப் போராட்ட அணியினர் இழக்க நேர்ந்தது.

### 2. தமிழ்த்தேசிய உணவாளர்களின் அணியைச் சேர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்பு

முற்போக்கு அணியினரின் காலத்தில் இயங்கிய தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் அணியைச் சேர்ந்தவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கமைவாக தமிழீழத்தை எல்லையாக வைத்தே போராடினர். ஆனால் அவர்களின் போராட்டம் சாத்வீக அடிப்படையிலேயே நடந்தது. தமிழீழப் போராளிகளுக்கும், தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்குமிடையில் இறுதி இலக்கில் உடன்பாடிருந்தாலும் போராட்டப் பாதையில் நேரடி முரண்பாடுகள் இருந்தது. தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் அணியில் மேட்டுக்குடியினரும், மத்திய தரத்தைச் சேர்ந்தவர்களுமே பெரும்பாலான அங்கத்தவர்களாக

> போராட்டக்காலத்தில் வன்னிப்பெருநிலப்பரப்பில் வாழ்ந்த படைப்பாளிகளால் மட்டுமே போர் இலக்கியம் படைக்க முடிந்தது. அந்த இலக்கியங்களை வன்னியை விட வெளியே விநியோகிக்கும் வாய்ப்புக்கள் இல்லாமல் போனதால் அவை தமிழ் மக்களிடம் பொதுமைபெறும் வாய்ப்புகள் இல்லாமல் போயின.

இருந்தனர். இவர்களின் வாழ்விடம், தொழில் தொடர்புகள், பெரும்பாலான தொடர்புகள் யாவுமே கொழும்பை மையப்படுத்தியதாக இருந்ததால் இவர்கள் கொழும்பைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் தமிழீழப் போராளிகளோ தங்கள் உயிரையும் தியாகம் பண்ணத்தயாராக இருந்தனர். தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் சேரவும் முடியாத விலத்தவும்முடியாத சூழலில் மௌனித்தனர். இதனால் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் சார்ந்த எழுத்தாளர்களையும் தமிழீழப் போராளிகள் இழக்க நேர்ந்தது.

### 3. தமிழ்த்தேசியப் போராளிகளின் நடவடிக்கைகள் இலக்கியப்பரப்பில் வகித்த பங்கு

இலக்கியப்படைப்பென்பது, அனுபவ முதிர்வும், கற்பனை வளமும், தீர்க்கதரிசனக்கூர்மையும், சமூகப் பொருளாதார அரசியல் தெளிவும், மொழிவளமும் அளவோடு கலக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பின் மொத்த வடிவமாகும். சமூகத்தில் கற்றுக்கொள்கின்ற பாடங்களை இலக்கிய வடிவமாக்கி அதேசமூக மக்களைச் சிந்திக்கத் தூண்டுகின்ற ஒரு 'இலக்கியச்சக்தி'யாகவே இந்த இலக்கியங்கள் அமைகின்றன. இந்தத் தளத்தில் நின்று போராளிகளை நோக்கினால், போராளிகள் என்பவர்கள் குடும்ப சமூக உறவுகளைத் துண்டித்து ஆயுதக் கலாசாரம் என்ற காற்றைச் சுவாசித்து குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் அஞ்ஞாதவாசம் புரிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். கற்பனைபண்ண முடியாத தியாகங்களைத் தாங்கிய சுமைதாங்கிகளாகவே இவர்கள் வாழ்ந்தார்கள்.

இவர்களால் இராணுவ முகாம்களுக்குள் புகுந்து உளவு பார்த்ததையும், இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டதையும், காயப்பட்ட தோழர்களைச் சுமந்து வந்ததையும், எல்லையற்ற தியாகங்களையுந்தான் எழுத முடிந்தது. இவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களை, இலக்கிய வரலாற்றில் ஒரு சீரான வளர்ச்சி என்ற நிலையைத் தாண்டிய 'இலக்கியப் பாய்ச்சலாகவே' காணமுடிகிறது.

### 4. ஆயுதப் பாவனையும் இயல்புநிலை வளர்ச்சியை மீறிய பாய்ச்சல்களும்

தமிழீழப் போராளிகள் குறிப்பிட்ட ஒரு காலம்வரை காடுகளில் தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்தனர். இரண்டாவது கட்டமாக இலங்கைப் பாதுகாப்புப் படையினர் போராளிகளைத் தேடி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இக்காலப்பகுதி விமானக்குண்டு வீச்சுகளாகவும், சுற்றி வளைப்புகளாகவும் கைதுகளாகவுமே இருந்தது. இதன் அடுத்த கட்டம் இராணுவ முகாம்களை நோக்கி தமிழ்ப் போராளிகள் செல்லும் காலமாகவும் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடக்கப்பட்ட காலமுமாகவும் அமைந்திருந்தது. இந்த வளர்ச்சிப்போக்குகள் அரசியலையும் அரவணைத்துச் செல்லத்தவறியதால் அரசியற்தளம் நங்கூரமிட்டு நகராது நிற்க ஆயுதத்தளம் பல படிகளைத் தாண்டி முன்னேறியதால் ஒரு போராட்டத்தில் அரசியலுக்கும், ஆயுத கையாட்சிக்குமிடையில் இருக்க வேண்டிய நெருக்கம் குறைந்து இடைவெளி அதிகரித்தமையால் போராட்டக் கருத்து நிலையில் தளம்பல் ஏற்பட்டது. இக்கருத்து நிலைத்தளம்பல் இலக்கியங்களிலும் கருத்து நிலையை மீறி உணர்வு நிலைகளே முக்கியம் பெறத் தொடங்கினதானது இலக்கியத்தளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதெனலாம்.

### 5. அரசபடைகளின் நடவடிக்கைகள்

ஒரு சர்வாதிகார ஆட்சியானது தனது சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புகள் ஏற்படுமேயானால், அந்நடவடிக்கைகளை நசுக்கவே முனையும். இதனடிப் படையில் பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் இலக்கியத்துறையில் இரண்டுவிதமான பாதிப்புகள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப்பெருநிலப்பரப்பில் வாழ்ந்த படைப்பாளிகளால் மட்டும் போர் இலக்கியம் படைக்க முடிந்தது. அந்த இலக்கியங்களை வன்னிப் பெருநிலப்பரப்பை விட வெளியே விநியோகிக்கும் வாய்ப்புகள் இல்லாமல் போனதால் அந்த இலக்கியங்கள் தமிழ் மக்களிடம் பொதுமை பெறும் வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டன. இரண்டாவது, பாதுகாப்புப் படையினரின் நெருக்கடிகள் காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வெளியே வாழ்ந்த படைப்பாளிகளால் போர் இலக்கியங்கள் படைக்க முடியாதிருந்தது. இவ்விரு நிலைகளும் இக்காலப்பகுதி இலக்கிய வளர்ச்சியைப் பாதித்துள்ளதெனலாம்.

மேற்கூறப்பட்ட ஐந்து காரணிகளும் எண்பத்தி மூன்றாம் ஆண்டுக்குப் பின்னரான இலக்கியச் செல்நெறிகளைப் பாதித்துள்ளன. அதேவேளை இன்னொரு முக்கிய விடயத்தையும் இங்கு பதிவாக்குவது வரலாற்றுக் கடமையாகவுள்ளது. எண்பத்தி மூன்றாம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதியில் உருவான தமிழீழ நிழல் அரசில், கலை, இலக்கியப்படைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் போல் எந்தக்காலத்திலும் வழங்கப்பட்டதில்லையென உறுதியாகக்கூறலாம்.

இரண்டாயிரத்து ஒன்பது வரை நீடித்த தமிழீழ நிழல் அரசில் ஒவ்வொரு துறைக்குமென ஒவ்வொரு பொறுப்பாளர்கள் இருந்தார்கள். கலை இலக்கியத்துறைக்கென கலைப்பண்பாட்டுக் கழகம் என்றொரு அமைப்பு இயங்கியது. 1970 காலப்பகுதியில் மிக வீச்சாக மேற்கிளம்பிய முற்போக்கு இலக்கிய அணியில் முக்கிய அங்கத்தவராக இருந்த ஒரு கவிஞரே இக்கலை பண்பாட்டமைப்புக்குப் பொறுப்பானவராக இருந்தார். இவர் அறியாத எழுத்தாளர்களுமில்லை, இவரை அறியாத எழுத்தாளர்களுமில்லை எனலாம்.

1. கலை இலக்கியப் படைப்புகள் பொறுப்பேற்றுப் பதிப்பிக்கப்பட்டன.
2. கலை இலக்கியப்படைப்புகள் பிரசுரமாவதற்கு வசதியாக பத்திரிகை, சஞ்சிகை வசதிகள் இருந்தன.
3. படைப்பாளிகளுக்கு ஊக்குவிப்பும், கௌரவமும் வழங்கப்பட்டது.
4. பொருளாதார நெருக்கடிக்குள்ளான படைப்பாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

படைப்பாளர்களுக்கு புறநிலைப்பட்ட தேவைகளை தமிழீழ நிழல் அரசு வழங்கிய அதேவேளை, படைப்பாளர்களின் அகநிலைப்பட்ட உணர்வுகளைத் தூண்டும் வகையிலான கருப்பொருட்களும் சமூகத்தில் நிறைந்திருந்தன. ஒரு கலை இலக்கியப் படைப்பாளியை அவன் வாழ்கின்ற சூழல்களில் உள்ளுறைந்திருக்கும் உணர்வுக்கூர்களின் குத்தல்கள் தான் அவனை எழுதத் தூண்டுகின்றன. அந்தவகையில் எக்காலத்திலும் இல்லாதவாறு இக்காலத்தில் படைப்பாளிகளைச் சுற்றி கருப்பொருட்கள் நிறைந்திருந்தன. இடப்பெயர்வு, வறுமை, பசி, மரணம், சொத்திழப்பு, பிரிவுகள், தியாகம், உயிர்க்கொடை இப்படி இரத்தமும் சதையுமான கருப்பொருட்களே நிறைந்திருந்தன. கவிதை, சிறுகதை, நாடகம், திரைப்படமென எத்தனையோ படைப்புகள் வெளிவந்தன. எக்காலத்திலும் இல்லாதவாறு உயிர்க்குலையை அவிக்கின்ற உயிரோட்டமான கவிதைகள் இக்காலப்பகுதியிலேயே எழுந்திருக்கின்றன. இலக்கிய வாண்மையும், மொழிவளமும், சரிவர நிறைந்திராத இளம் போராளிகள் தங்களின் அனுபவங்களை மட்டும் மூலதனமாக்கி தங்களின் அனுபவ மொழியிலேயே இலக்கியம் படைத்தனர்.

> போராட்டத்திற்கு வெளியே நின்று இலக்கியம் படைத்த இரு வகையினரில் இளையோரின் படைப்புகள் போராட்டக்களத்தில் நின்ற போராளிகளின் படைப்புகளை ஒத்த உணர்ச்சி வசப்பட்ட படைப்புகளாக இருந்தன. முதியவர்கள் சிறுகதைத் தொகுப்புகளையும் நாவல்களை வெளியிட்டனர். இவர்களின் படைப்புகள் மண்வாசனைமிக்க இலக்கியங்களாக இன்றும் பேசப்படுகின்றன

இக்காலத்துப் படைப்பாளிகளை மூன்று வகையில் இனங்காணக்கூடியதாக இருந்தது.

1. போராட்டக்களத்தில் முழுமையான போராளிகளாக நின்றவர்களின் படைப்புகள்.
2. போராட்டக் களத்திற்கு வெளியே நின்று போராட்டத்தை முழுமனதோடு ஆதரித்தவர்களின் படைப்புகள்.
3. வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த படைப்பாளிகளின் நாசுக்கான படைப்புகள்.

## போராட்டக்களத்தில் முழுமையாகப் போராளிகளாக நின்றவர்களின் படைப்புகள்

துப்பாக்கி பிடித்து மரத்துப்போன கைகளால் எழுதுகோலைப் பிடித்து படைத்த படைப்புகள் தான் இவைகள். வீட்டுச் சூழலிலும், பாடசாலைச் சூழலிலும் வாழ்ந்து நேரடியாக போராட்டக்களத்திற்கு வந்த இளைஞனிடம் சமூகக்கருத்து நிலைகள் மேலோங்கியிருந்திருக்குமெனக் கொள்ள முடியாது. அவனது மனத்தை நிறைத்த- அவனது மனத்தை அவித்த உணர்வுகளை அவனுக்குத் தெரிந்த மொழியில் வெளிக்காட்டவே அவனால் முடியும்- முடிந்திருக்கின்றது என்பது தான் யதார்த்தம். சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், திரைப்படம் என அனைத்து இலக்கியப்படைப்புகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வாழ்ந்த போராட்ட எல்லைகளுக்குட்பட்டதாகவும், அவன் அறிந்த மொழியிலேயுமே படைக்கப்பட்டன.

### போராட்டக்களத்திற்கு வெளியே நின்று போராட்டத்தை முழுமனதோடு ஆதரித்தவர்களின் படைப்புகள்

போராட்டத்திற்கு வெளியே நின்று இலக்கியம் படைத்தோர் இருவகைப்படுகின்றனர். முதியோர், இளையோர் என்ற இருவகையினரில் இளையோரின் படைப்புகள் போராட்டக்களத்தில் நின்ற போராளிகளின் படைப்புகளை ஒத்த உணர்ச்சிவசப்பட்ட படைப்புகளாகவே காணப்பட்டன. முதியவர்கள் என்ற வரிசையில் சொற்பமானவர்களே காணப்பட்டனர். இவர்கள் சிறுகதைத் தொகுப்புகளாகவும், நாவல்களாகவும் வெளியிட்டனர். இவர்களின் படைப்புகளில் இலக்கியத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற பண்புக்கூறுகள் நிறைந்திருந்ததோடு, மண்வாசனை மிக்க இலக்கியங்களாகவும் இன்றும் பேசப்படுகின்றன. களத்தில் நின்ற போராளிகள் தாங்கள் பெற்ற உணர்வுகளை வெளிப்படுத்தினர். களத்திற்கு வெளியே நின்ற படைப்பாளிகள் தாங்கள் பெற்ற உணர்வுகளை சமூக இயங்கியலுக்கூடாக வெளிப்படுத்தினர். இருபகுதியினரும் தளநிலையில் வேறுபட்டிருந்தனர்.

> தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்கள் சகல தமிழர்களின் மனங்களிலும் நீறு பூத்த நெருப்பாகவே இருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. இவர்கள் மத்தியில் உள்ள படைப்பாளிகள் தங்கள் உணர்வுகளை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

### வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த படைப்பாளிகளின் நாசுக்கான படைப்புகள்

வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த தமிழர்களும் பாதுகாப்புப் படையினரால் சந்தேகத்துடனேயே பார்க்கப்பட்டனர் என்ற தளத்தில் நின்றே இவர்களைப்பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்றுவரை தமிழ்மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் இரகசியமானவைகள் அல்ல. இந்நிலை சகல தமிழர்களின் மனங்களிலும் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது. அந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த படைப்பாளிகள் மறைமுகமாகத் தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு போராட்டத்தளத்தில் போராட்டத்துக்கான அடிப்படைக்காரணத்தளங்கள் தெளிவானதும், உறுதியானதுமாக அமைந்திருத்தல் அவசியமானதாகும். தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அடிக்கடி ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சீரானதொரு அரசியல்தளம் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. போராளிகளின் மனங்களில் வெற்றிடமான அந்த அரசியற் தளத்தை 'இராணுவத்தை அழிப்பதுதான் விடுதலைப் போராட்டம்' என்ற பொய்மை மயக்கக்கருத்து நிரப்பியுள்ளது. அந்தப் பொய்மை மயக்கக் கருத்துத்தளமே இலக்கியங்களிலும் பரவியுள்ளதென்பதுதான் யதார்த்தமாகும்.

விமானத்தாக்குதல் நடத்துமளவிற்கு வளர்ச்சி வேகமும், மதிநுட்பமும் கொண்ட போராளிகள் அரசியலில் பின்தங்கியிருந்தமை ஆச்சரியத்துக்குரியதாகவே இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமையும், தளமும், போராளிகளும் முப்பது ஆண்டுகளாக மாற்றமின்றி இருந்தன. ஆனால், அரசாங்கத்தில் தேர்தல் மூலம் அரசுகள் மாறிக்கொண்டேயிருந்தன. இதனால் அரசாங்கத்தில் விடுதலைப் போராட்டத்துக்கெதிரான நிரந்தரக் கொள்கையொன்று உருவாக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதனால் விடுதலைப் போராளிகளும் காலத்திற்குகாலம் தங்கள் நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்ததும் போராளிகளின் பக்கம் நிரந்தரக்கொள்கையை ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் போனதற்கான காரணமாகக் கூறப்படுகின்றது. உள்நாட்டு அரசியல் மாற்றங்களோடு, இந்திய அரசின் தலையீடு, நோர்வேயின் அனுசரணைச் செயற்பாடு போன்ற சர்வதேச குறுக்கீடுகளும் காரணங்களாக அமைந்ததெனக் கூறப்படுகின்றது.

1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் 'தமிழீழத்தாயகம்' உறுதிப்படுத்தப்பட்டபோதும், ஏழு வருடங்களின் பின்னர், 1983 இல் தமிழீழப் போராளிகள் 'தமிழீழத்தாயகம்' என்ற கோட்பாட்டைக் கையிலெடுத்த முப்பத்தேழு வருடங்களிலும் தமிழர்தரப்பில் பலமானதொரு அரசியற் தளம் இருக்கவில்லை என்ற பலமானதொரு குற்றச்சாட்டும் உண்டென்பதை மறுப்பதற்கில்லை. நடந்த போராட்டத்தில் அரசியற்தளம் பலவீனமானதாகவும், ஆயுதபலம் பலமானதாகவும் அமைந்ததால் ஆயுதபாவனையோடு தொடர்புபட்ட உணர்வியல் சார்ந்த இலக்கியங்கள் எழுந்தமை யதார்த்தத்திற்குட்பட்ட நிகழ்வாகுமெனலாம்.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியை போராட்டத்திற்கு பிற்பட்ட காலப் பகுதியாகப் பேசப்படுகின்றது.

இப்பத்தியில் முதலாவது காலப்பகுதியாகப் பார்க்கப்பட்ட 1960 தொடக்கம் 1983 வரையான காலப்பகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியில் 23 ஆண்டுகளும், இரண்டாவது காலப்பகுதி யாகப் பார்க்கப்பட்ட 1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் 26 ஆண்டுகளும், மூன்றா வது காலப் பகுதியாகப் பார்க்கப்படுகின்ற 2009 தொடக்கம் இற்றைவரையான (2014 வரை) காலப்பகு தியில் 05 ஆண்டுகளுமாக மொத்தம் 54 ஆண்டு களை உள்ளடக்கிய இக்காலப்பகுதியை அரை நூற் றாண்டு காலப்பகுதியாகக் கொள்ளலாம். இறுதியாகவுள்ள ஐந்து வருடகாலப் பகுதியின் இலக்கி யத் தளமாற்றங்கள் பற்றியதொரு ஆய்வை மேற் கொள்வதில் பல இடர்பாடுகள் உண்டு. ஆனால் ஏறத் தாழ மூன்று தசாப்தகாலம் மிகப்பலத்தோடு நீடித்த ஒரு போராட்ட அமைப்பின் அஸ்தமன காலம் என்ற முக்கி யத்துவத்தை இக்காலம் பெறுவதால் அக்காலம் பற்றி யும் பார்க்க வேண்டியதொரு அவசியநிலையைக் கருத்திற்கொண்டு இக்காலத்தில் ஏற்பட்ட இலக்கியத் தளமாற்றங்கள் பற்றியும் பார்க்கப்படுகின்றது. போராட்டத்தின் சூடு தணியாத பகுதியாக இக்காலம் அமைவதால் போராட்ட கால இலக்கியத்தளத்திலி ருந்து இக்காலப்பகுதியின் ஆய்வை ஆரம்பிப்பது பொருத்தமானதாக அமையுமென எண்ணுகிறேன்.

சர்வதேச ரீதியில் ஒரு விடுதலைப் போராட்டத்தில் தோல்வியுற்ற விடுதலை அமைப்பையும், அந்த அமைப்பைச்சார்ந்த மக்களையும் வெற்றிபெற்ற அரசு எப்படி நடத்தியிருக்கின்றதோ அதேபோலவே இலங்கை அரசும் தமிழ் மக்களை நடத்துகின்றது. அதே வேளை பல புனர்நிர்மாணப்பணிகளையும் இலங்கை அரசு செய்துவருகின்றது என்பது சிந்தனைக்குரிய தாகும்.

இலங்கை வடபுலத்தில் ஏற்பட்ட பாரிய அரசியல் மாற்றம் வழமைபோல் இலக்கியத் தளத்தையும் வெகு வாகப் பாதித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. போராட்டக்களத்தில் நின்று இலக்கியம் படைத்த படைப்பாளிகளில், ஒரு பகுதியினர் இறந்து போய் விட்டனர். இன்னொரு பகுதியினர் காணாமல் போயுள்ளனர். இன்னுமொரு பகுதியினர் இலங்கை யைவிட்டு வெளியேறியுள்ளனர். இன்னொரு பகுதி யினர் இராணுவத்திடம் சரணடைந்து முட்கம்பி வேலிக்குள் வாழ்ந்து விடுதலையாகியுள்ளனர். விடுத லையான இவர்களில் ஒரு பகுதியினர் சமூகத்தின் ‘இறுக்க’ நிலையைப் புரிந்துகொண்டு தங்கள் எழுது கோல்களை மூடிவிட்டு மௌனமாகிவிட்டனர். இன் னொரு பகுதியினர் விடுதலை இயக்கத்தின் குறை குற் றங்களை மையப்படுத்தி இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னுமொரு பகுதியினர், ‘பின்நவீனத்துவம்’ என்ற உலக இலக்கியப் பண்புக் குள் இறங்கி தொன்மங்களுக்கூடாகவும், கடுமையான சொல்லாடல்களுக்கூடாகவும் இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு வகைப்படைப்பாளர்களையும் பற்றி, இவர்கள் வழி தெரிந்து போனவர்கள் அல்ல ‘‘இவர்கள் வழி தவறிப் போனவர்கள்’’ என்ற கருத்தையே சமகால இலக்கிய ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.

போராட்டக்களத்துக்கு வெளியே நின்று போராட் டத்தை ஆதரித்து எழுதியவர்கள் போராட்டத்திற்குப் பின்னரான அரசியற் தளத்தின் வெப்பநிலையைப் புரிந்துகொண்டு அரசையும் விமர்சிக்காமல், போராட் டத்தையும் ஆதரிக்காமல் போராட்டக்களத்தில் நடந்த குருதிபடிந்த சம்பவங்களையும், இடம்பெயர்ந்த அவ லங்களையும், போராட்டத்தின் பின்னரான சமூக வன் முறைகளையும் எழுதிக்கொண்டிருக்கின்றனர். இதே போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களும் தங்களின் சுயத்தை உருமாற்றம் செய்யும் நோக்கத்தில் இலக்கிய நடவடிக்கைகளை அடக்கியே வாசிக்கின்றனர்.

இவர்களைத் தவிர விடுதலைப்போராட்ட காலத் திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த முற்போக்கு அணி யைச் சேர்ந்த சமூகப்பெறுமானம் பெற்ற படைப்பாளி கள் தமிழீழப் போராட்டத்தின் நெறிமுறைகள் மாக்ஸிஸ விஞ்ஞான அரசியல் கோட்பாடுகளுக்கு அமைவாக இல்லை என்ற காரணத்தை முன்னிலைப்ப டுத்தி தமிழீழப் போராட்டத்தை நிராகரித்ததாலும், தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் இன அடக்குமுறைக ளுக்கெதிராக எந்த நடவடிக்கைகளையும் மேற் கொள்ளத் தவறியமையாலும் மக்களால் ஓரம் கட்டப் பட்டு அமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள் வலுத்து உதிரிகளாயினர். உதிரிகளான பின்னரும் அவ்வணி யைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இன்னமும் எழுதிக் கொண்டு தான் இருக்கின்றனர். மாக்ஸிஸ அடிப்படை யில் அவர்களின் சமூக நோக்கு அமைவதால் அவர்களின் படைப்புகள் இன்னமும் பேசப்படும் இலக்கியங்களாகவே அமைகின்றன.

> மனித விடுதலைக்கான வெகுஜன போராட்டத்தை முன்னெடுத்த தலைமை களால் சமூக அங்கீகாரமிக்க இலக்கிய படைப்புகளை தர முடிந்திருக்கின்றதே தவிர அவர்களால் ஆயுதப் போராட்டங் களை முன்னெடுக்க முடியாமல் போயுள் ளது. இதனால் தமிழீழ போராட்டத்தின் எழுச்சியோடு வெகுஜன போராட்ட கருத் தியல் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்ததால் அந்த இலக்கியங்களும் பலவீனமாகின

அரை நூற்றாண்டுகால இலக்கியங்களையும்,அந்த இலக்கியங்களுக்கான தளங்களையும் நோக்கும் போது, மூன்றுவிதமான அரசியற் தளங்கள் மேலோங்கி இருந்ததைக் காணக்கூடியதாகவுள்ளது.

(65ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பின் நவீனத்துவ அழகியல்

**இராகவன்**

ஜேர்மனியத் திரைப்பட இயக்குநர் டாம் ற்ரைக்வேரின் (Dam Tykwer) றன் லோலாறன் (Run Lola Run) திரைப்படத்தைத் தழுவி சிம்புதேவன் அண்மையில் இயக்கியுள்ள திரைப்படந்தான் ஒரு. கன்னியும் மூன்று களவாணிகளும் என்ற பெயரில் வெளிவந்துள்ளது. ஏற்கனவே இம்சை அரசன் 23ஆம் புலிக்கேசி, இரும்புக்கோட்டை முரட்டுச்சிங்கம், அறை எண் 30 இல் கடவுள் போன்ற வித்தியாசமான திரைப்படங்களை இயக்கி தனது படங்கள் குறித்தவொரு எதிர்பார்ப்பினைப் பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பவர் சிம்புதேவன். அந்த வகையில் இத்திரைப்படத்தையும் ஒரு வித்தியாசமான திரைப்படமாகவே தர முயன்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

றன் லோலாறன் திரைப்படத்தில் லோலா தனது காதலனின் உயிரைக் காப்பாற்ற ஓடுகிறாள். ஒரு கன்னியும் மூன்று களவாணிகளும் என்ற இத்திரைப்படத்தில் காதலியை மீட்க காதலன் ஓடுகிறான். நிமிட வித்தியாசந்தான் இரு திரைப்படங்களிலுமே மைய இழையாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு திருமணம், இத்திருமணத்தில் மணப்பெண்ணைக் கடத்துவது, அந்தக் கடத்தல் ஒரு நிமிடம் முன் பின்னாக நடந்தால் யாது நேரும் என்பதைத் தெளிவான திரைக்கதையோடு படமாக்கியிருக்கும் சிம்புதேவன். ஓர் இயக்குநர் என்றவகையில் பாராட்டப்பட வேண்டியவர்தான்.

இத்திரைப்படத்தை ஒரு கால விளையாட்டாகக் (Time game) கருதலாம். ஒரு சிற்றிதழ் ஆசிரியனின் அதுவும் 300 பிரதிகள் அச்சிடப்படும் சிற்றிதழ் ஆசிரியனின் மகனான தமிழ் தனது காதலியை இன்னொருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்படவிருக்கும் நாளில் தனது நண்பி மலர் மற்றும் நண்பன் பெருமாளுடன் இணைந்து திட்டமிட்டுத் தனக்காகவும் காதலியின் தந்தையினது எதிரியிடமிருந்து கிடைக்கும் பணத்திற்காகவும் தேவாலயத்தில் திருமணம் நடந்துகொண்டிருக்கும்போது கடத்திச்செல்லப் புறப்படுகிறான். இந்தப் புறப்பாடு முறையே 8.59, 9.00, 9.01 ஆகிய வெவ்வேறு நேரங்களில் நிகழும்போது நடக்கும் மூவேறு சம்பவங்களின் தொகுப்பாக இத்திரைப்படம் போக்குக் காட்டுகிறது. 8.59 மணிக்கு ஆரம்பிக்கும் கடத்தல் சம்பவத்தின் முடிவில் தேவாலய வாசலில் தமிழ் சுட்டுக் கொல்லப்படுகிறான். 9.00 மணிக்கு ஆரம்பிக்கும் கடத்தல் சம்பவத்தின் முடிவில் மணப்பெண்ணின் தந்தை துப்பாக்கிச் சூட்டில் மரணமடைகிறார். 9.01 மணிக்கு ஆரம்பிக்கும் கடத்தல் சம்பவத்தின் முடிவில் திருமணத்தைக் குழப்பத் திட்டமிடும் வேறொருவனும் நான்கு கட்டெறும்புகளுமாக ஐந்துபேர் தேவாலயத்தினுள் மரணமடைகின்றனர். (இது சிவபெருமானின் பொய்க்காத கணக்கு) இந்த அடிப்படையிலிருந்து Run Lola Run எவ்விதம் தமிழ் மனோபாவத்திற்கேற்ப சிம்புதேவனால் நுட்பமாகத் தழுவிப் படமாக்கப்பட்டுள்ளதென்பதை நோக்கலாம். பொதுவாகச் சுபநேரம், ராகுகாலம், எமகண்டம் பார்ப்பதெல்லாம் இரத்தத்தில் ஊறிப்போன தமிழ் மனோபாவமென்பதுடன் அது தமிழனின் வாழ்வில் தவிர்க்க முடியாததொரு நம்பிக்கையாகவும் வேரூன்றி விட்டது. இதை அடிப்படையாகக் கொண்டே சிம்புதேவன் ஒரு கால விளையாட்டை நுட்பமாக நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்பதுடன் அதைக் கட்டுடைக்கும் வேலையையும் செய்திருக்கிறார். நாரத முனிவர் பிரம்ம தேவரைச் சந்திப்பதிலிருந்துதான் திரைப்படந்தொடங்குகிறது. ஒரு நிமிடம் தாமதமாக வந்திருந்தால் என்னைச் சந்தித்திருக்க முடியாது என்று பிரம்மதேவர் நாரதரிடம் சொல்கிறார். அதை மறுக்கும் நாரதர் இன்று நான் உங்களைச் சந்திக்க வேண்டுமென்று விதியிருந்தால் ஒரு நிமிடம் தாமதமாக வந்திருந்தாலும் சந்தித்திருப்பேன் என்று சொல்கிறார். அதை பிரம்மதேவர் மறுத்து, காலத்திற்கும் விதிக்கும் தொடர்பில்லை என்று சொல்ல இருவரும் தமது பிரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைக்குத் தீர்வு காண சிவபெருமானிடம் செல்கின்றனர். ஒவ்வொரு நிமிடத்திலும் பல்வேறு விதிகளிருப்பதாகச் சிவபெருமான் நாரதருக்குச் சொல்லச் சிறந்த விதியை எப்படித் தேர்ந்தெடுப்பதென நாரதர் சிவனிடம் வினவுகிறார். தேர்ந்தெடுக்க இதென்ன வெண்டைக்காய் வியாபாரமா? என நாரதரைக் கேலி செய்யும் சிவன், மரை உச்சியிலிருந்து இறங்கும் போது பல்வேறு பாதைகள் பிரியும். அது ஒவ்வொன்றும் ஓர் அனுபவத்தை வாழ்வியல் தரிசனத்தை வழங்கும். அதுதான் காலம் என்று சொல்கிறார். (இவ்வாறான வலுமிக்க கவித்துவமான உரையாடல்கள் தமிழ் சினிமாவில் இடம்பெறுவது எப்போதாவது நிகழும் அதிசயம்) இதை நிகழ்த்திக் காட்டுவதற்கு பூவுலகத்திலிருக்கும் தனது காலக்கண்ணாடியில் பதிவான விம்பங்களில் நாரதர்மூலமாகவே தமிழின் விம்பத்தைத் தெரிவு செய்யவைத்து இதுமூலமாக ஒரு கால விளையாட்டை நிகழ்த்திக் காட்டுகிறார் சிவன். பின்நவீனத்துவக் கோட்பாடென்பதை புனிதமானதெனக் கருதப்படுவதை ஒழுங்கழிப்புச்செய்தல் அல்லது உடைத்தெறிதல் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இத்திரைப்படம் அப்பின்நவீனத்துவக் கோட்பாட்டின் அழகியலை நேர்த்தியுடன் முன்னெடுத்துச் சென்றுள்ளது. இந்துத்துவ மரபில் சிவபெருமான் ஒரு புனிதமான விம்பம். அந்த விம்பத்தினால் எழுதப்பட்ட தலைவிதி என்பதன் படிதான் எல்லாம் நடக்கும். அதை மாற்ற முடியாது என்பதெல்லாம் காலங்காலமாக எடுத்து வரப்பட்டிருக்கும் இந்துத்துவ மரபாகும். இந்த மரபை அழகியல் தன்மையுடன் சிம்புதேவன் உடைத்தெறிகிறார். தலைவிதியை எழுதும் சிவபெருமானை ஒரு பாத்திரமாக்கி அப்பாத்திரத்தின் வழியே தலைவிதி என்பதைப் பொய்ப்பித்து ஒரு செயல் தொடங்கும் நேரத்திற்கேற்ப அதனுடன் தொடர்புபடும் சம்பவங்கள் மாறுபடுமென்பதை ஒரு காலவிளையாட்டாகக் கட்டமைத்துக் காட்டுகிறார். இது தமிழ் சினிமாவில் கலைத்துவமான முதல் முயற்சியெனலாம்.

அடுத்து இங்கே முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது மூவேறு நிமிடங்களில் தொடங்கும் ஆள்கடத்தல் முயற்சியும் அதனுடன் தொடர்புபடும் சம்பவங்களின் படமாக்கல் உத்திகளும் அதற்கேற்ற பின்னணி இசைக் கோர்வைகளுமாகும். 8.59 மணிக்குத் தொடங்கப்படும் கடத்தல் முயற்சி தொடர்பான காட்சிகள் ட்ராலி ஷொட் முறையில் பார்வையாளனுக்கு மெல்ல மெல்ல பதற்றத்தைத் தொற்றவைத்து விறுவிறுப்பை உச்சத்துக்குக் கொண்டு செல்லும் விதத்தில் படமாக்கப்பட்டு மேற்கத்தேய இசை கோர்க்கப்பட்டுள்ளது.

9.00 மணிக்குத் தொடங்கும் கடத்தல் முயற்சி தொடர்பான காட்சிகள் தாவிச் செல்லல் உத்தியில் (Ramping) 24 சட்டகத்திலிருந்து 18 சட்டகத்திற்குத் தாவும் விதமாகப் படமாக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு நரம்பிசைக் கருவிகளைக் கொண்டு பின்னணி இசை வழங்கப்பட்டுள்ளது. 9.01 மணிக்குத் தொடங்கும் கடத்தல் முயற்சி தொடர்பான காட்சிகள் தாவிச் செல்வதும் தூர நோக்கிலிருந்து வெகு அருகாக வருவதுமான கைப்பிடி (Hand held) உத்தியில் பாய்ச்சல் வெட்டாக (Jump Cut) படமாக்கப்பட்டுள்ளதுடன் தோல்வாத்தியங்களைக் கொண்டு பின்னணி இசை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் சிம்புதேவனின் திரைமொழியை நேர்த்தியுடன் மெருகேற்றியதில் இசையமைப்பாளர் நடராஜன் சங்கர் படத்தொகுப்பாளர் ராஜா முகமது, ஒளிப்பதிவாளர் ஆர்.கதிர் ஆகிய மூவரினதும் பங்களிப்பும் அளப்பரியது. தமிழில் மாற்று சினிமாவைச் சாத்தியமாக்கும் நம்பிக்கையை இத்திரைப்படத்தின் மூலம் சிம்புதேவன் ஏற்படுத்தியிருக்கிறார் என்பது ஒரு நற்செய்தியாக வெளிப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. ■

---

*(63ஆம் பக்கத்தொடர்ச்சி..)*

1. தமிழ் மக்களின் இனவிடுதலைக்கான சாத்வீக அடிப்படையிலான போராட்டத்தளம்.
2. மனித விடுதலைக்கான வெகுஜன ஆயுதப் போராட்டத்தளம்.
3. தமிழ் மக்களின் இனவிடுதலைக்கான ஆயுத அடிப்படையிலான போராட்டத்தளம். தமிழ் மக்களின் இன விடுதலைக்கான சாத்வீகப் போராட்டத்திலும், ஆயுதப் போராட்டத்திலும் முன்னின்று நடத்திய தலைமைகளால் சரியான அரசியல் தளங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள முடியாததொரு சூழ்நிலை நிலவியதால் அக்காலப் படைப்பாளிகளாலும் தெளிவான படைப்புகளை படைக்க முடியாத நிலை தொடர்ந்திருக்கின்றதை அக்காலத்துப் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

மனித விடுதலைக்கான வெகுஜன ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தலைமைகளால் சமூக அங்கீகாரமிக்க இலக்கியப் படைப்புகளைப் படைக்க முடிந்திருக்கின்றதே தவிர, அவர்களால் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியோடு வெகுஜன ஆயுதப் போராட்டக் கருத்தியல் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்ததால் அந்த இலக்கியங்களும் பலவீனமாகின. முற்போக்கு அணியைச் சேர்ந்த சிலர் இப்போதும் தரமான சமூக இலக்கியங்கள் படைத்து வருகின்றனர்.

இவர்களைவிட சமூக அரசியல் தளங்களை விலத்தி நின்று இலக்கியம் படைத்தவர்கள் 'கண்டதையும்' இலக்கியமாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

மொத்தத்தில் கடந்த ஐந்து வருடங்களிலும் இன்று தமிழ்ச்சமூகத்திற்கு பூட்டப்பட்டுள்ள 'அரசியல் விலங்கை' வெளிப்படுத்துகின்ற இலக்கியங்கள் பெருமளவில் படைக்கப்படவில்லையென்றே கூறலாம். ■

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# இலக்கியமும் ஈழத்தின் இன்றைய அரசியல் நிலையும்



சி.வன்னியகுலம்

ஒரு நாட்டின் அரசியலும் அந்நாட்டின் இலக்கியமும் ஒரே திசையில் பயணி க்கவேண்டியவையாகும். இவை இரண்டும் ஒன்றிலொன்று தங்கியிருப்பவை. ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உந்துசக்தியாக விளங்குபவை. இவை ஒன்றுக்கொன்று முரண்படுமிடத்து மக்களின் நல்வாழ்க்கையே பலியிடப்படுகின்றது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உருவா க்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கங்கள் குறித்த காலப்பகுதியில் மக்களின் நல்வாழ்வுக்காகப் பெரும்பங்காற்றின. 1936ஆம் ஆண்டில் வடஇந்தியாவில் உருவான முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அன்னிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டங்களில் பெரும்பங்காற்றியது. சுதந்திரப் போராட்டத்தின் போது அது அரசியல் விடுதலைக்குப் பெரும் உந்துசக்தியாக விளங்கியது. 1952 ஆம் ஆண்டிலே சென்னையில் உருவாக்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் 1954 ஜூன் 27ஆம் திகதி கொழும்பிலே உருவாக்கப்பட்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் சுதந்திரத்திற்குப் பின்னர் வந்தவையாகும். ஆயினும் அவை அரசியல் சமத்துவத்தையும் சமூகமேம்பாட்டையும் யாசித்துநின்றன. மக்களிடையிலான ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதில் பெரும்பங்காற்றின.

மக்களுக்கான இலக்கியம் என்ற கோட்பாட்டை அவை முனைப்புடன் முன்னெடுத்தன. நசிவிலக்கியக் கோட்பாட்டை அவை நிராகரித்தன. அதனால் உழைக்கும் வர்க்கத்திலிருந்து பெருமளவு எழுத்தாளர்கள் தோன்றினர். மக்களுக்கான இலக்கியத்தை வடிப்பதில் அவர்கள் பெரும்பங்காற்றினர். இன்று இந்தியாவில் மட்டுமன்றி இலங் கையிலும் முற்போக்கு இலக்கியம் பற்றி மானசீகமாக பேசுவேரை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

அரசியலைப் பொறுத்தவரை எமது நாட்டில் அதன் இயங்குதிசை நேரெதிராக மாற்றப்பட்டுவிட்டது. மக்களுக்கான அரசியல் என்ற நிலை மாறி அரசியலுக்காக மக்கள் நலன்களை அடகுவைக்கும் நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. வாக்குரிமையைப் பயன்படுத்தும் மக்களை அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு அடிமைகளாக்கும் அரசியலே முன்னெடுக்கப்படுகின்றது. வாக்களி த்த மக்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டு மக்கள் பிரதிநிதிகள் அதிகாரவர்க்கத்துடன் கைகோர்க்கும் நயவஞ்சகமான நிலையே தொடர்கிறது.

யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் கணிசமானளவு மக்கள் அகதிமுகாம்களிலேயே வாழ்கின்றனர். தங்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் இழந்து தவிக்கின்றனர். சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் அதலபாதாள த்தில் கிடந்து உழல்கின்றனர். வன்னியில் யுத்தத்தின் போது கொன்றொழிக்கப்பட்ட மக்களின் பிணவாடை இன்னும் அகலவில்லை. குடியேற்றப்பட்ட மக்கள் சொந்த மண்ணில் வேர்விட முடியாத அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர். இங்கெல்லாம் மானுடம் என்பது மண்புழுக்களை விட மதிப்பற்றுக் கிடக்கின்றது. ஆனால் எமது மக்கள் பிரதிநிதிகளோ அடுத்து வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுவேட்பாளர் பற்றி கனவுகாண்கின்றனர். இவர்களின் மனக்கண்முன் மக்கள் படும் அவலங்கள் தென்படுவதில்லை. அடுத்துவரும் அதிகார வர்க்கத்திற்கு முண்டு கொடுப்பதிலும் அவர்களின் கைகளில் கொலைவாளைத் திணிப்பதிலுமே குறிக்கோளாக உள்ளனர். ஒருவேளை சோற்று க்கே அல்லாடுபவனுக்கு ஜனாதிபதித் தேர்தலா வேண்டிக்கிடக்கின் றது?. நசுக்கப்படும் மக்களை மறந்து எவ்வாறு இவர்களால் அதிகார வர்க்கத்திற்கு முண்டு கொடுக்க வேண்டுமென சிந்திக்க முடிகிறது? சிங்கள பௌத்தன் ஒருவனைத்தவிர வேறெவனும் இலங்கை ஜனாதிபதி ஆகிவிடமுடியாது என்பது அரிவரி படிக்கும் சிறு பிள்ளைக்கும் அத்துப்படியான விடயமல்லவா?

அறுபத்தாறு ஆண்டுகளாக மக்களை ஏமாளிகளாக்குவதைவிட நாம் எதனைச் சாதித்தோம்? பட்டுவேட்டிக் கனவில் கோவணத்தையும் பறிகொடுத்த நிலையல்லவோ எங்கள் நிலை. ஜனாதிபதி பொதுவேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக எதிர்க்கட்சிகளின் தயவை எதிர்பார்ப்பவர்கள் அடக்கி ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நேசசக்திகளை இனங்காண்பதற்கு ஏன் தயங்குகின்றனர்? இரண்டொரு பேரினவாதக் கட்சிகளைத்தவிர மற்றெல்லா அரசியல் கட்சிகளிலும் தமிழ் மக்களுக்கு ஆதரவானவர்கள்

(25ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்

Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org